Free Website :
for Matrialmonial Website

micheaijulian@facebook.com
www.indianadarmurasu.com

ஆகஸ்ட்-2024
நாடார் :14
முரசு :8



# இந்தியன் நாடார் முரசு

INDIAN NADAR MURASU

விலை ரூ.15/-

ஆகஸ்ட் 15-ல்

88 ஆம் பிறந்தநாள்

காணும்

எங்கள் அன்பு அண்ணாச்சி

கலைமாமணி, செவாலியர்

**டாக்டர் வி.ஜி.சந்தோசம்**

அவர்களை வாழ்த்துகிறோம்!



Happy Birthday

**Annachi**



பிறந்த நாள் வாழ்த்துக்கள்!!!
31.8.2024 அன்று பிறந்த நாள் காணும்
என் இனிய அன்பு மகள் K.கவிநயாவிற்கு
பிறந்த நாள் வாழ்த்துக்கள்!!
Happy Birthday
S.கேசவவிஸ்வநாதன் (USA)
K.சரண்யா
பெ.சிவந்தி நாடார்,
அயன்புரம்.

அகில உலக நாடார்களின் செய்திக்களஞ்சியம்

R.Dis.NO.1434/09

# இந்திய நாடார் முரசு

சமுதாய பல்சுவை மாத இதழ்

கௌரவ ஆசிரியர்: **விஜய்வசந்தகுமார்.**

பேராசிரியர்: **திரு.ஜூலியன் நாடார்**

ஆசிரியர்: டாக்டர்.J.அர்னால்ட் அரசு ஜூலியன்

துணை ஆசிரியர்:திருமதி.எல்மாமதி.,எம்.ஏ.பி.எட்.

இணை ஆசிரியர்:ரேஷ்மாமதி M.Sc.,(U.S.A)

இலக்கிய ஆலோசகர்: கலைமாமணி திரு தாமரை செந்தூர்பாண்டியன்

சட்ட ஆலோசகர்:

Dr.ஜே.ஜேம்ஸ் ஆனந்த். MBA.,M.Com.,MHRM.,MSW., ML., Ph.D.,

செயலாளர் [illegible] கல்வி நிறுவனங்கள், சென்னை-15

ஆலோசனைக் குழு

திருமதி.ராணிவெங்கடேசன் முன்னாள் MLA

டாக்டர்.S.தேவராஜ் Chairman Anna Velankanni's Group of Educational Institutions

R.K.சாமிதாஸ் [illegible]

திரு.பி.சின்னமணி நாடார் தலைவர், சென்னைவாழ் நாடார் சங்கம்

டாக்டர் வி.ஜி.சந்தோஷம்

டாக்டர்.குமரேசன்

பேரசர் ஆனந்தராஜ் தலைவர் தெ.நா.ஜ.மகமை பரிபாலன சங்கம்.

தலைமை அலுவலகம்:

**புதிய எண்:1, ப.எண்:21, கிருஷ்ணப்ப நாயக்கன் தெரு, மேட்டுப்பாளையம்,மேற்கு மாம்பலம், சென்னை-600 033.**

**போன்:044-23810610 (வீடு)**

E-mail:nadar10_2000@yahoo.com, indianadarmurasu@yahoo.com

தலைமை வியாபார அலுவலகம்:

**30, ஜோன்ஸ் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-600 015.**

**போன்: 044-23811087,**

**அலுவலக நேரம்:10.00am to 9.00pm**

இந்திய நாடார் முரசுக்காக அச்சிட்டு வெளியிடுபவர் டாக்டர்.திரு.K.M.J.A.அரசு, ஜூலியன்.

அலுவலக நிர்வாகம், கம்ப்யூட்டர்: திருமதி.G.[illegible] M.A.,B.Ed.

ALL RIGHTS RESERVED LEGAL JURISDICTION CHENNAI CITY COURTS ONLY. NOTHING INDIA NADAR MURASU IS INTENDED TO DEFAME ANY PERSON BUT EXPRESSED IN GOOD FAITH, PURSUIT OF TRUTH AND PUBLIC GOOD.

எந்த வகையிலும் பகுதியோ செய்தும் நடை பெய்யப்படுகிறது. கதைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே. கதை, கட்டுரை முதலிய எதையும் தான் அல்லது பின் அனுமதி மூலமாக அனுப்பவும். அவற்றை திருத்தி அமைக்கவும், சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு. வெளியூர் சந்தாதாரர்கள் தபால் மூலமாகவோ, வரவோலையாகவோ அனுப்பி வைக்கவும். அஞ்சல் இல்லாதவர்கள் சந்தா மற்றும் விளம்பரத் தொகையை கொடுத்து ரசீது பெறவும்.

| | | |
|---|---|---|
| வெளி முன் அட்டை | (17X24 CMS) | ரூ. 25,000 |
| வெளி பின் அட்டை | (17X24 CMS) | ரூ. 15,000 |
| உள் அட்டை | (17X24 CMS) | ரூ. 10,000 |
| முழுபக்கம் | (17X24 CMS) | ரூ. 5,000 |
| அரைப்பக்கம் | (17X12 CMS) | ரூ. 2,500 |
| கால்பக்கம் | (8½X12 CMS) | ரூ. 1,500 |
| அரைக்கால்பக்கம் | (8½X6 CMS) | ரூ. 900 |

ஆண்டு சந்தா- ரூ.550, 2ஆண்டு சந்தா-ரூ.1100

ஆயுள் சந்தா ரூ.15,000, 5 ஆண்டு சந்தா- ரூ.5000.

மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, கனடா,

தென் ஆப்பிரிக்கா மற்றும் அயல் நாடுகளுக்கு

ஆண்டு சந்தா ரூ.3000 அல்லது அமெரிக்க டாலர் $100

ஆயுள் சந்தா ரூ.20,000 அல்லது அமெரிக்க டாலர் $600

சந்தா அனுப்ப வேண்டிய வங்கி கணக்கு எண்:

The Karur Vysya Bank Saidapet Branch: MR.K.M.Julian

IFSC Code: KVBL0001651.

**A/c No: 1651173000000900**

**Google Pay : 9382172884 Paytm 9382172884**

# ஆசிரியர் உரை

**சேர, சோழ, பாண்டியர் மற்றும் காமராஜர் வழி வந்த பத்திரகாளியின் வாரிசு சான்றோர் குல நாடார்களே!!!**



கடந்த சில ஆண்டுகளாக உலக அளவில் மக்கள் அனைவருமே சந்தோசமான வாழ்க்கை வாழவில்லை. வெள்ள பெருக்கு, கொரோனா ஆங்காங்கே நாட்டுக்கு நாடு சண்டை அரசியல்வாதிகளின் பேராசையால் ஊழல் ஆங்காங்கே ரௌடிசம், கற்பழிப்பு, கொலை ஆள்கடத்தல் ஏழைகளின் சொத்துக்கள் பணக்காரர்களின் கையில் மாறுதல், கேரளா வயநாடு நிலச்சரிவு, கள்ளச்சாரயம் இன்னும் பற்பல சீரழிவுகள் இந்த மனுகுலத்திற்கு எதிராக நடந்து கொண்டே இருக்கிறது. இவை எல்லாம் மாற வேண்டும், அப்படியானால் நல்ல மனிதர்கள் பிறக்கவேண்டும். ஓர் அபிரகாம்லிங்கன், மகாத்மா காந்தி, ஒரு பெருந்தலைவர் காமராஜர் திரும்பவும் பிறக்கவேண்டும் இவர்கள் பிறந்தாலும் இவர்களின் அறிவுரைகளை கேட்டு நடக்க மக்கள் நல்வழியில் இருந்தார்கள். ஆனால் தற்கால மனித இனமும் நல்லது கெட்டது தெரியாமல் சஞ்சலத்தில் இருந்து கொண்டு தவறான வழியில் சென்று கொண்டிருக்கிறார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது. இந்திய பொருளாதாரநிலை மக்கள் திக்குமுக்காட வைக்கிறது. எந்த பொருளையும் வாங்கும் திறன் குறைந்து கொண்டே போகிறது. ஆனால் பணகாரர்கள் எட்டிபிடிக்க முடியாத உயரத்திற்கு உயர்ந்து கொண்டே போகிறார்கள். அதன் ரகசியத்தை கண்டு சரி செய்யும் சரியான தலைவர் உருவாகவேண்டும். அதே போன்று நம் தமிழ் நாட்டு நிலையும் போய் கொண்டிருக்கிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது. அரசியல்வாதிகள் அரசியல் செய்கிறார்களா? அல்லது நீயா நானா என்ற போட்டியில் இருக்கிறார்களா என்றே தெரியவில்லை.

இவைகளெல்லாம் இப்படி நடந்து கொண்டிருக்க புகழ் பெற்ற நம் நாடார் சமுதாயம் ஒற்றுமையை கைவிட்டுவிட்டு சிதைந்து சின்னா பின்னமாகி கொண்டிருக்கிறது சமுதாய நலனுக்காக உருவாக்கப்பட்ட சங்கங்களின் நிலையோடோ யாரும் மெச்சும் படியாக இல்லை. அதன் தலைவர்கள் இஷ்டப்படி எந்த முடிவு எடுக்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கிறார்கள் பல சங்க தலைவர்கள் சங்க சொத்துக்களை தனது பூர்வீக சொத்துக்களாக எண்ணி யாரையுமே அணுகவிடாமல் யாருக்கும் உதவாமல் சர்வதிகார தலைவர்களாயிருந்துக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு தலைவர்களும் தனக்கென ஒரு கூட்டத்தை உருவாக்கிக் கொண்டு தேர்தலில் தானே வெற்றி பெற்று செங்கோல் ஆட்சி நடத்துகிறார்கள். இந்த நிலையில் நமக்கு அரசியல் அங்கீகாரம் இல்லாத ஒரு அரசியல் அனாதை பெரும்பான்மை ஜாதியாக வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே நாடார்களுக்கு ஒரு தனி அரசியல் கட்சி வேண்டும் என்ற நம் மூதாதையர்கள் திட்டம் போட்டனர் ஆனால் நம் இளைஞர்கள் என்ன லாபம் கண்டார்களோ ஆளுக்கொரு புதுக்கட்சியை ஆரம்பித்து ஒவ்வொரு பெரிய கட்சிகளை சார்ந்து அரசியல் ரீதியாகவும் நாடார்கள் சிதைந்து எதிரிகளாக வலம் வந்து கொண்டிருக்கிறார்கள். தற்போது நாடார் இளைஞர்கள் சுமார் 16க்கும் மேல் நாடார் அரசியல் கட்சிகள் உருவாக்கி நான் தான் அடுத்த முதல்வர் என்றும் அதை ஒரு முதலீடாக கொண்டு வியாபாரமாக நடத்திக்கொண்டிருக்கிறார்கள் நாடார்களே உஷார்...



பனைவரம் அறக்கட்டளை நடத்தும் ...
பனை மக்கள் திருவிழா 2024
பனை கண்காட்சி
பனை விருதுகள்
பனை உணவுகள்
பனை பொம்மைகள்
பனை விளையாட்டுகள்
பனை கைவினைப் பொருட்கள்
நாள் : 10,11 ஆகஸ்ட் 2024
சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமை
இடம் : ACS திருமண மண்டபம்
ஓமலூர் சாலை, சூரமங்கலம், சேலம்
நன்கொடை பகிர்ந்திட ...
8050195385
R SELVARAMALINGAM
அழைப்பின் மகிழ்வில் ...
மதிப்புறு முனைவர்
இரா.செல்வராமலிங்கம்
பனை ஆராய்ச்சியாளர்,
தலைமை ஒருங்கிணைப்பாளர்
பனை மக்கள் திருவிழா, சேலம் 2024
கைபேசி எண் 63803 12729

**பனைவரம் அறக்கட்டளை நடத்தும் பனை மக்கள் திருவிழா-2024.**

மாநில மரமான பனையை பாதுகாத்திடும் வகையிலும் பனையின் பயனை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையிலும் பனைவரம் அறக்கட்டளை முன்னெடுக்கும் கொங்கு மண்டல பனை மக்கள் திருவிழா வரும் ஆகஸ்ட் மாதம் 10, 11-2024 ஆகிய தேதிகளில் சேலம் மாவட்டம் தாரமங்கலம் எசிஎஸ் திருமண மண்டபத்தில் சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது.

முன்னாள் இந்திய விமானப்படை வீரரும் கார்கில் போராளியும், பனை ஆராய்ச்சியாளரும் மதிப்புறு முனைவர் திரு.செல்வராமலிங்கம் ஒருங்கிணைப்பில் சிறப்பான முன்னெடுப்புகள் நடந்து வருகிறது.

2022ஆம் ஆண்டு விழுப்புரம் மாவட்டம் பூரிக் குடிசை பனங்காட்டில் செந்தமிழன் சீமான் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட பனை கனவுத் திருவிழா மற்றும் 2023ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டம் தருவை பனங்காட்டில் மேனாள் மேதகு ஆளுநர் திருமதி.தமிழிசை சௌந்தரராஜன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட பனை தேசியத் திருவிழா போன்ற இரண்டு பனைத் திருவிழாக்களிலும் மதிப்புறு முனைவர் செல்வ ராமலிங்கத்தின் பங்கு அளப்பரியது. இந்த உன்னத நிகழ்வில் பல்வேறு துறை வல்லுனர்களும், அரசியல் ஆளுமைகளும் திரைப்பிரபலங்களும் மற்றும் பனை ஆர்வலர்களும் கலந்து கொண்டு பனையுரையாற்ற இருக்கின்றனர்.

கொங்கு மண்டலத்தில் முதன் முறையாக கொண்டாடப்பட உள்ள பனை மக்கள் திருவிழாவில்

பனைகண்காட்சி, பனை விருதுகள், பனை உணவுகள், பனை பொம்மைகள், பனை விளையாட்டுகள், பனை கைவினைப் பொருட்கள் பனைப் போட்டிகள் என பனை சார்ந்து பல்வேறு நிகழ்வுகளும் கண்காட்சியும் சந்தைப்படுத்தலும் நடக்க இருக்கிறது.

இது குழந்தைகளுக்கான குதூகல விழா மகளிருக்கான மகத்தான விழா மக்களுக்கான மகிழ்ச்சி விழா மொத்தத்தில் பனை மக்கள் திருவிழா ஒரு தமிழர் பெருவிழா அனைவரும் கலந்து கொண்டு மாநில மரமான பனையின் பயனை அறிந்து கொள்ளுங்கள். பனைமரமல்லவரம். தொடர்புக்கு:80501 95385.




S.ராஜையா நாடார்

**சக்தி டிப்போ & சக்தி ஹார்டுவேர்ஸ்**

எங்களிடம் சிமெண்ட், மணல், ஜல்லி,செங்கல்,கட்டுமானத்திற்கு தேவையான அனைத்து பொருட்களும் கிடைக்கும்

168,புதியஎண்,123,எம்.எம்.காலனி, அண்ணாநகர், 3வது அவென்யு,

(அமைந்தகரை காவல்நிலையம் அருகில்), அமைந்தகரை, சென்னை-29

போன்:9840036745, 9841085745, Ph:26214852, 26267101.

**ஆர்.சித்தர்ராஜ் நாடார்**

**குட்வில் ரியல் எஸ்டேட்**

136, ஆற்காடு ரோடு, வளசரவாக்கம்,

சென்னை-87. செல்:9444083769





**அரிசி மொத்த வியாபாரம்.**

**செல்:9840994451, 26380752 / 73.**

**சிவசக்தி ரைஸ் டிரேடர்ஸ்**



286, சி.டி.எச்.ரோடு, செல்வராஜ் காம்ப்ளக்ஸ், ஆவடி, சென்னை-54.

**செல்வராஜ் சூப்பர் மார்க்கெட்**

286/1, சி.டி.எச்.ரோடு, ஆவடி, சென்னை-600 054.selvarajsupermarket@gmail.com



# S.ATHISAYARAJ.B.A.,B.L.,P.G.DL.A

**Correspondent**

## Koilpillai Mat.Hr.sec.School

65. Rayala Nagar, 2nd Main Road, Ramapuram, Chennai-89.
Ph:044-22492489. 22492286, Cell:9840715246.
Email:samuelathisayaraj@gmail.com



**உங்கள் இல்லத்தில் உடனே திருமணம் நடைபெற வேண்டுமா?**

Prop.K.A.Raman Nadar

## Sri.R.M.T.திருமண தகவல் மையம்



ராசியான ஸ்தாபனம் மற்றும் இந்து, R.C, C.S.I. நாடார் வரன்கள் அமைத்து தரப்படும். MD, MBBS, M.E, M.SC, M.C.A மற்றும் IAS, IPS, VIP வரன்களுக்கு மில் தொழில் அதிபர் வரன்களுக்கு அணுகவும்.
106, ஆற்காடு ரோடு, வடபழனி, சென்னை-26.போன்:45588957, செல்:9380791999, 9841329471. E-mail:ramannadar2004@yahoo.co.in Web:www.srirmt.com



வாழ்க வளர்க ! உ

**வீடு, மனை வாங்கவும், விற்பனை செய்யவும் அணுகலாம் வாங்க !!**

## ஸ்ரீ அருள் ஏஜென்ஸீஸ்

**ரியல் எஸ்டேட்**



M.L. கணபதி

No. 59, 1st Floor, Arcot Road, Valasai to Porur, Chennai - 116.
Cell : 98410 74090 [94443 42707] RE - Invesments - Joint Ventures



எப்போதும் வென்றான் ஸ்ரீ சோலையப்ப சுவாமி துணை



## அடையார் ஆனந்த விநாயகர்
## காய்கனி & பழங்கள் அங்காடி

(எங்களிடம் தரமான காய்கனி அனைத்தும் கிடைக்கும்)

## அடையார் முருகன் டிராவல்ஸ்

நெ. 69/14, 2வது குறுக்கு தெரு, கஸ்தூரிபாய் நகர், அடையார், சென்னை-20 செல்: 9840038140, போன்: 24416633, 42116663,



உரிமையாளர்: த.பரமசிவன்

24 மணி நேர சேவை





உரிமை:T.DURAI, T.KUMAR. Cell:9444316813

## பேபி. புரோட்டீன்ஸ்

## WHOLESALE & RETAIL

2/37, 4th Lane, 1st Street Main Road, Shasthri Nagar, Adyar, Chennai-20. Ph:24465921. FREE HOME DELIVERY.






N.R.N.Group போன்:044-26790587

# பிரியா டிப்போ

கீத்து, மூங்கில், சவுக்கு, கட்டை, கரி, கல்போஸ்ட், தார்சீட், செங்கல், மணல், ஜல்லி, சிமெண்ட் கிடைக்கும்.

2/166, மவுண்ட் பூந்தமல்லி டிரங்க் ரோடு, எம்.எஸ்.எஸ்.நகர், காட்டுப்பாக்கம், சென்னை-56.



ஸ்ரீ அருள்மிகு காத்த அம்மனார் துணை

G.முத்துகனி நாடார், முத்துகனி பிரதர்ஸ் G.பால்ராஜ் நாடார் G.தங்கராஜ் நாடார்

# ஜோதி ஸ்வீட்ஸ் பேக்கரி

9789427171
7597152711

# வளர்மதி பேன்சிஸ் ஸ்டோர்ஸ்

கோல்டு கவரிங், பொம்மை, குழந்தைகள் விளையாட்டுப் பொருட்கள் இங்கு கிடைக்கும்.

# ஸ்ரீ பவானி அம்மன் பாத்திரக்கடை

எங்களிடம் பித்தளை, அலுமினியம் பாத்திரங்கள் கிடைக்கும்.

நெ.132, பஜார் வீதி, பெரியபாளையம், ஊத்துக்கோட்டை வட்டம், திருவள்ளூர்மாவட்டம்-601102.



GSTIN:33ATNOJ914691ZY ஸ்ரீ முத்துமாலை அம்மன் துணை

போன்:044-45004771, செல்: 8610104055

# JAYA SANKAR FANCY STORES



NO: 440. Thiru.Vi.Ka.Nagar,
Sembiam,
Chennai-600 011.






# தமிழ் திருமண மாலை

**நாடார் வரன்கள் தகவல் நிலையம்**

போரூர், சென்னை-600 116.

**திருமண ஆலோசகர்கள்:T.செந்தூர்பாண்டியன்(ஜோதிட சிந்து)9884040906 திருமுருகன் செல்:9382189766.**

**பிறந்த நாள் வாழ்த்து. திரு.ஆர்.வேல்குமார் நாடார் பிறந்த நாள் விழாவில் கலந்து கொண்ட உறவினர்கள் நண்பர்கள் அனைவருக்கும் நன்றி! நன்றி!! நன்றி!!! சென்னை-32**



# பசுமை நிறைந்த நினைவுகள்(அமெரிக்க பயணம்)

-தென்னக சான்றோர் சங்க உறுப்பினர்,
எம்.கோவிந்தராஜ். செல்:9384605133

**கல்வி**

நயாகரா நீர்வீழ்ச்சி பார்ப்பதற்காக சான் அன்டோனியோவில் இருந்து நாங்களும் எனது மகனுடன் வேலை செய்பவர்களும் அன்று புறப்பட்டு அட்லாண்டா விமானத் தளம் வந்து சேர்ந்தோம். பின்பு அங்கிருந்து "பஃப்பல்லோ"வுக்கு விமானம் மூலம் சென்று இறங்கினோம்.

அங்கிருந்து வாடகைக்கார் எடுத்துக் கொண்டு, நயாகரா நீர்வீழ்ச்சி பார்க்கத் தீர்மானித்து, வாடகைக்கார் அலுவலகத்தை அணுகினோம். அவன் கொடுத்தது கார் சாவி மற்றும் ஒரு வரைபடமும் தான் அந்த வரைபடத்தில் விளக்கமாகக் கொடுத்திருக்கிறார்கள். நாங்கள் குழப்பமடையவில்லை. யாரிடமும் வழி கேட்க வேண்டியதுமில்லை. அந்த வரைபடத்தைக் கையில் வைத்துப் பார்த்துக்கொண்டே, நயாகரா வந்து சேர்ந்துவிட்டோம்.

தமிழகத்திலும், பூகோளம் படிக்கும் மாணவர்களுக்கு வரைபடம் சொல்லிக் கொடுத்து அதற்காக தேர்வில் 10 மார்க்கும் ஒதுக்குகிறார்கள். ஆனால், ஒரு சில இடங்களை மட்டும் அதில் குறிப்பிடும்படி, கேள்வியில் கேட்கிறார்கள். இதோடு நிறுத்திவிடுகிறார்கள்.

அறிவியல் பாடத்தில் செய்முறை வகுப்புகள் வைப்பது போன்று, பூகோளத்திலும் செய்முறை வகுப்புகள் வைத்து மாணவர்களைத் தயார் படுத்த வேண்டும். ஆனால், ஒவ்வொரு படை வீரர்களுக்கும் பூகோள வரைபடம் பற்றி அதிகாரப்பூர்வமான செய்முறை பயிற்சி கொடுக்கிறார்கள்.

அடுத்து அறிவியல் அறைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு உபகரணங்கள் அதிகம் வைத்திருக்கிறார்கள். சிறுவர்கள் நின்று பிராக்டிகல் செய்ய வசதியாக அமைந்திருக்கிறது.

சரித்திர வகுப்பறைக்குக் கடைசியாக அழைத்துச் சென்றார்கள். அந்த பெரிய நாட்டுத் தலைவர்களின் படங்கள் எல்லாம் வைத்திருக்கிறார்கள். படங்களின் கீழே படத்திலுள்ள தலைவர்கள் பற்றிய தகவல்கள் எழுதி வைத்திருக்கிறார்கள். அந்தந்த நாட்டு நாணயங்களை வைத்திருக்கிறார்கள்.

கம்ப்யூட்டர் அறை இருக்கிறது. இங்கு சிறு லேப்டாப் வைத்திருக்கிறார்கள். மாணவர்கள் தனது பிஞ்சு விரலால் இதனை தட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் இந்த பள்ளியிலிருந்து அதன் செயல்பாடுகளைக் கண்டறிந்தேன். இது தனியார் நடத்தும் பள்ளி. மாணாக்கர்கள் படிப்பதற்கு நல்ல வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறார்கள். இதனை எத்தனை மாணாக்கர்கள் பயன்படுத்தி பயனடைவார்கள் என்று தெரியவில்லை.

நாங்கள் எங்கிருந்து வந்தோமோ அங்கேயே திரும்பி வந்தோம். நான் ஒட்டி வைத்திருந்த பாஸ்-ஐ கேட்டார்கள். கொடுத்தேன்.

"உங்கள் பள்ளி நன்றாக செயல்படுகிறது. இந்தியாவிற்கு வாருங்கள். இந்தியா வந்தால் சென்னைக்கு வாருங்கள். அங்குள்ள மக்களின் கலாச்சாரம், நகரங்கள், கல்லூரி, பாடசாலை, மருத்துவமனை, அசெம்பிளி, அலுவலகம், ரயில்வே நிலையம், எல்லாவற்றிற்கும் மேலாக மெரினா பீச் எல்லாம் பார்ப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன் என்று அழைத்தேன்.

"வாய்ப்புக் கிடைத்தால் கண்டிப்பாக வருகிறேன்" என்று அவர்கள் உறுதி கூறி, அந்த நாட்டிற்குரிய புன்னகையோடு பதில் சொன்னார்கள். பிரியாவிடை பெற்று வந்தேன்.



தமிழ்நாட்டைப் போன்று இங்கும் கண் தெரியாதவர்களுக்குத் தனிப் பயிற்சிப் பள்ளிகள் இருக்கின்றன. இதனை டெக்ஸாஸ் அரசே நடத்துகிறது.

Blind and Visually Impaired Texas School 1-800-672-5279

பள்ளி நுழைவாயிலில், "புகை பிடிக்கக்கூடாது" மற்றும் சாராயம் குடித்துக் கொண்டு, பள்ளிக்குள் வரக்கூடாது. "ஹாக்கி விளையாடுபவர்கள் கருவிகளைப் பள்ளிக்குள் கொண்டு வரக்கூடாது", என்று எழுதி வைத்திருக்கிறார்கள்.

நெருப்பு அணைக்கும் கருவியைப் பள்ளியில் பொருத்தி வைத்துள்ளனர். அதில் எச்சரிக்கை என்றும் எழுதி வைத்திருக்கிறார்கள்.

தீயணைக்கும் கருவியை துஷ்பிரயோகம் செய்தாலோ அல்லது அதில் குறிப்பிட்டுள்ள காலாவதி தேதியை மாற்றி எழுதி வைப்பது அரசுக்குத் தெரிய வந்தால், இந்த சமூக விரோத செயலைச் செய்தவருக்கு அபராதமாக 500 டாலர் வசூலிக்கிறார்கள். அல்லது ஆறு மாத சிறைத் தண்டனையும் விதிக்கிறார்கள்.

தனியார் பள்ளிகளையும் அரசு தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து கவனித்துக் கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டில் ஆரம்பப் பள்ளிகளைக் கவனிக்க Elementary School Department இருப்பது போன்று ப்ரி ஸ்கூல் நிர்வாகங்களைக் கவனிக்க Department of Pre School Day Care என்ற இயக்கம் சான் அன்டோனியோவில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இங்கு ப்ரி ஸ்கூல் காலை 8.30 மணிக்குத் தொடங்குகிறது. 10.30மணிக்கு தின்பதற்கு ஏதோ கொடுக்கிறார்கள். 12.00 மணிக்கு சாப்பாடு கொடுத்து தூங்க வைத்து, மாலை 3.00 மணிக்கு வீட்டிற்கு அனுப்பி வைக்கிறார்கள்.

பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் படிக்கும் மாணவர்களும் மாணவிகளும் பள்ளி, கல்லூரி முடிந்ததும், விற்பனை நிலையங்களிலும், ஓட்டல்களிலும், சுற்றுலா மையங்களிலும் பகுதி நேர வேலை செய்கிறார்கள்.

சான் அன்டோனியோவில் Sea world என்ற சுற்றுலா மையம் இருக்கிறது. 11.4.2011 அன்று நாங்களும் எனது மகனின் நண்பர்களும் அங்குச் சென்றோம். அன்று ஞாயிற்றுக்கிழமை.

அங்கு விற்பனை மையம் இருக்கிறது. அங்கு பொம்மைகள், பனியன்கள், அழகு பொருட்கள், கைவினைப் பொருட்கள் எல்லாம் வைக்கப்பட்டிருந்தன. அங்கே 15வயது முதல் 18வயது மதிக்கத்தக்க பெண்கள் பொருட்களை விற்பனை செய்து கொண்டிருந்தார். அவர்கள் சிரித்துக்கொண்டும் அடுத்தவர்களுடன் பேசிக்கொண்டும், சாப்பிட்டுக்கொண்டும் பொருட்களை விற்பனை செய்து கொண்டிருந்தனர். இவர்கள் மாணவிகளாகத்தான் இருக்கக்கூடும் என்று நினைத்தேன். அதில் ஒரு மாணவியிடம் சென்று, நாங்கள் இந்தியாவிலிருந்து டூரிஸ்ட் விசாவில் அமெரிக்கா வந்திருக்கிறோம் என்று பேச்சை முடிப்பதற்குள், எல்லோருக்கும் ஒரே விலைதான் என்றாள். நான் ஏதேனும் பொருள் விலையைக் குறைத்து வாங்குவதற்குத் தான் கேட்கிறேன் என்று நினைத்துக் கொண்டாள். - தொடரும்.



**நாடார் வரன்கள்:** R.C, CSI, **இந்து நாடார்களுக்கு அனுகவும்,** IAS, IPS, IFS, IRS, MD,MS, B.E, M.E, MBA, MCA., **மற்றும் தொழிலதிபர்கள், கம்பெனி, பில்டர்ஸ், கல்லூரி மற்றும் அரசு பணி மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஆண் பெண் வரன்களும், வி.ஐ.பி. டாக்டர் வரன்கள் ஏராளமாக உள்ளன**

தொடர்புக்கு: K.K.M.மரிய ஜான்சன் போன்: வாட்சப் எண்: 7373627729, 8148887767.

**முகவரி:எம்.மரியஜான்சன், எண்:8/3பி, கீழ்தளம், நேரு தெரு, சீனிவாசன்நகர், பாடி, சென்னை-600 050.**

# விழித்தெழு!! இளைஞனே!!! விழித்தெழு....

**திருக்குறள்- கற்றபின் நிற்க அதற்குத்தக:**

திருக்குறள் காலத்தால் அழியாத வழிகாட்டியாக உள்ளது. தனிப்பட்ட வளர்ச்சியை மேம்படுத்தவும், சமூக உறவுகளை மேம்படுத்தவும், நியாயமான மற்றும் நெறிமுறை சமூகத்தை வளர்க்கவும் உதவும் நடைமுறை மற்றும் ஆழமான ஆலோசனைகளை வழங்குகிறது. திருக்குறள் உலகப்பொதுமறை என்று போற்றப்படுகிறது. திருக்குறள் ஒரு வாழ்க்கைக் கோட்பாட்டுப் பெட்டகம். நாம் எதைத் தொடங்கினாலும் முடித்தாலும் திருக்குறளைத்தான் துணைகோருகிறோம். காரணம் அதில் சொல்லப்படாத விடயங்களே இல்லை.



அந்த அளவிற்குதிருக்குறள் ஒரு சிறந்த படைப்பு. அதனால் தான் மதுரைத் தமிழ்நாகனார் "எல்லாப் பொருளும் இதன்பால் உள, இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லையால்" என்று வள்ளுவனையும் வள்ளுவர் தந்த குறளையும் பாராட்டுகின்றார். ஒருவன் வாழ்நாளில் திருக்குறள் குறித்தோ அல்லது ஒரு திருக்குறளையாவது படித்துப் பார்த்திருப்பான். அந்த அளவு திருக்குறள் நம் வாழ்வோடு ஒன்றிவிட்டது.

ஒருவன் இந்தச் சமூகத்தில் நிமிர்ந்த நடை போட கல்வி இன்றியமையாத ஒன்று. கல்வி கற்றவனுக்கு இந்தச் சமூகத்தில் எப்போதும் தனி மதிப்பு உண்டு. காரணம் கல்வி என்பது வெறும் கற்றல் கற்பித்தல் நிகழ்வல்ல. ஒருவனை மனிதனாக உணர வைப்பது. சமூகத்தின் செயல்பாடுகளில் அவனை ஈடுபடுத்துவது.. குற்றம் அற்றவனாக வடிப்பது. பிறருக்கு உதவி செய்யவைப்பது. குடும்பத்தைப் பேணுவது. இந்தச் சமூகத்தை வழிநடத்துவது. குற்றங்களைத் தடுப்பது இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். கல்வி ஒரு மனிதனை மனிதாகச் செயல்பட வைப்பது.

ஆனால் இன்று கல்வி என்பது ஒரு நுகர்பொருளாக மட்டுமே பார்க்கப்படுகிறது. இன்று கல்வி கற்றவர்களுக்கும் கற்பவர்களுக்கும் 20 ஆண்டுகளுக்கு முன் அதே கல்வியைக் கற்றவர்களுக்கும் வேறுபாடு இருக்கின்றது. இன்று கல்வி என்பது ஆரம்பக் கல்வி முதல் உயர்கல்வி வரை மதிப்பெண் பெறும் கட்டாய கற்றலாக மாறியிருக்கிறது. வாழ்க்கையில் பொருளாதார தன்னிறைவிற்கு மதிப்பெண் பெறுவதும் அவசியம் தான். இல்லை என்று மறுப்பதற்கில்லை.ஆனால் தனிமனித ஒழுக்கம் இந்தச் சமூகத்தைச் சீர்கேட்டிற்கு உள்ளாக்கியிருக்கிறது.

கல்வி என்பது வாழ்க்கையைக் கற்றல் என்ற நிலை இன்று மாறிவிட்டது. பெரியோரை மதித்தல், ஒழுக்கமாக நடந்து கொள்ளுதல், அன்புடன் பழகுதல், நல்ல நட்பினை பேணுதல், பெண்களை மதித்தல், குடும்பத்தைப் பேணுதல், சமூக அறங்களைப் பின்பற்றுதல் இவை அனைத்தும் இன்று கேள்விக்குறியாகிவிட்டது. அதற்குக் காரணம் கல்வி என்பது வாழ்க்கையைக் கற்றல் என்ற நிலையிலிருந்து விலக்கி, வெறும் பொருளாதார தேவைக்கான கருவியாகப் பார்க்கப்படுவதுதான்.

மேலும், பள்ளி, கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு சென்று கற்பது மட்டும் தான் கல்வி என்று நினைக்கின்றோம். ஒரு பட்டம் பெறுவது, அதனைத் தொடர்ந்து அதற்கேற்ற பணிக்குச் செல்வது என்று இதோடு அவர்களது கல்வி மாந்து போகிறது. ஆனால் கல்வி என்பது வாழ்க்கையோடு ஒன்றிவருகின்ற தொடர்நிகழ்வு. அதனால் தான் வள்ளுவர்,

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத் தூறும் அறிவு.

என்கிறார். கல்வி என்பது கற்க தான் ஒருவனைச் செம்மைப்படுத்தும். ஒருவன் வாழ்நாள் முழுவதும் கல்வி கற்கவேண்டும். புத்தகங்களை எடுத்து கற்பதும் மட்டுமல்ல. இன்று கற்பதற்கான வழிகள் பெருகிவிட்டன. காமராசர் ஏற்றி வைத்த கல்வி ஒளி இன்று தாணியெங்கும் பரவி ஒளிபரப்பு நிற்கிறது. எண்ணிலடங்கா நூலகங்கள், இணைய வழிச் செய்திகள், இணைய கருத்தரங்குகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

கல்வி வெளிச்சத்தைத் தரக் கூடியது. ஒருவர் வாழ்க்கையில் 65,000 நூல்களைக் கற்றதனால்தான் அவரை நாம் அண்ணல் அம்பேத்கார் என்று போற்றுகின்றோம். கல்வி அறியாமை என்னும் இருளைப் போக்கி வெளிச்சத்தைத் தரக் கூடியது. இதனைத் தான்,

'இம்மை பயக்காமல் ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்.
எம்மை யுழைத்தும் யாங்காணோங் கல்விபோல்
மம்ம ரறுக்கும் மருந்து..

என்கிறது நாலடியார். கல்வி கற்கும் உரிமை எவர்க்கும் உண்டு என்ற நிலைக்கு நாம் வந்திருக்கிறோம். வரலாற்றில் கல்வி புறக்கணிக்கப்பட்ட சமூகமாக அடிமைப்பட்டுக் கிடந்த நாம் இன்று அடிமை விலங்கை உடைத்தெறிந்திருக்கிறோம். அனைவருக்கும் கல்வி, அதுவும் சமமான கல்வி என்ற உன்னத நிலையை அடைந்திருக்கிறோம்.

"எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றோரை வருக வென்பர்

என்று வெற்றிவேற்கை பாடலை நாம் இங்கே சிந்திக்கவேண்டும். கல்வி மட்டுமே ஒருவனை இந்தச் சமூகத்தில் மதிப்புமிக்கவனாக ஆக்கும் என்பதை உணரவேண்டும். அதனால் தான் பாரதிதாசனும் கல்வியின் மிக்கதாம் செல்வமொன்று இல்லையே

செல்வம் பிறக்கும் நாம் தந்திடில் தீர்ந்திடும்
கல்வி தருந்தோறும் மிகச் சேர்ந்திடும்

என்கிறார். பெண்களுக்கு கல்வி மறுக்கப்பட்ட காலம் ஒன்று உண்டென்று பேசும் அளவிற்கு இன்று பெண்கல்வியும் உச்சத்தைத் தொட்டிருக்கிறது. கல்வி கற்பதற்கான கல்வி நிலையங்கள் இன்று ஏராளம். வாய்ப்புக்கள் அதிகம் இருக்கிறது. அனைவரும் கல்வி கற்கிறோம் என்ற நிலையை அடைந்துவிட்டோம். ஆனால் நாம் கற்றக் கல்வி எதற்குப் பயன்படுகிறது என்றால் அது மாதச் சம்பளத்தை வாங்கிக் கொடுக்கிறது.போலிங் புருக் என்ற கல்வியியல் அறிஞரின்

"சான்றோன் ஆக்காத கல்வி, சாமர்த்தியமாய்க் கழித்த சோம்பலேயாகும்"

என்ற வரிகள் இன்றும் நிஜமாகவே இருக்கிறது. இந்த நிலை மாறவேண்டும். இந்த நிலை மாறினால் தான் சமூகக் குற்றங்கள் நீங்கும். நான் என்ன கற்றோம் என்பதை மறந்துவிட்டு, விருப்பப்படி வாழ்கிறோம்.

கல்வி என்பது அறத்தைப் பேணுவது என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும் கல்வி என்பது,

"நல்ல ஒழுக்கத்தை உருவாக்குவதாகவும், மனவலிமையை வளர்ப்பதாகவும், விரிந்த அறிவைப் தருவதாகவும், ஒருவனைத் தன்னுடைய சுயவலிமையைக் கொண்டு நிற்கச் செய்வதாகவும் இருக்கக்கூடிய கல்விதான் நமக்குத் தேவை"

என்ற சுவாமி விவேகானந்தர் வரிகளை நடைமுறைப்படுத்தவேண்டும். இதற்கு நாம் ஒவ்வொருவரும் உறுதியேற்க வேண்டும். ஆசிரியர்கள் வெறும் பாடத்தை மட்டும் கற்பிப்பது, மனப்பாடம் செய்ய வைப்பது, அதிக மதிப்பெண் பெற வைப்பது என்பதில் மட்டும் கவனம் செலுத்தாமல் சிறந்த வாழ்வியலுக்கான அறங்களையும் போதித்து நல்ல மனிதர்களாக மாணவர்களை உருவாக்க வேண்டும். அதற்கு கற்பவற்றை மாசில்லாமல் கற்று அதன்வழியே வாழ்க்கையை கட்டமைத்து மேம்பட்டதோடு நல்வழியிலே பயணிக்க வேண்டும். அதற்கு,

கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

என்று வள்ளுவன் கற்று, வள்ளுவனாக வாழ்வோம். தனிப்பட்ட நெறிமுறைகள், சமூக உறவுகள் மற்றும் தலைமைத்துவம் பற்றிய அதன் போதனைகள் மூலம் அன்றாட வாழ்க்கையில் அதன் முக்கியத்துவத்தைக் காணலாம். தன்னம்பிக்கை என்ற சுடர் தீபம் உனக்குள் எரிந்து கொண்டிருந்தால் இந்த அகிலத்தையே உன் கைகளுக்குள் அடக்கலாம். இதை உணர்ந்தால் வாழ்க்கை உன்வசம்... விழித்தெழு... இளைஞனே... விழித்தெழு..!!!

**என்றும் கல்விப் பணியில் Dr.தே.தேவ்ஆனந்த்** MBA.,M.Com.,MHRM.,MSW.,M.L.(Labour & Admn. Law), Ph.D.,
செயலாளர், அன்னைவேளாங்கண்ணி கல்வி நிறுவனங்கள், சென்னை-15.
www.annaivelankannis.com E-mail:devanand222@gmail.com Help line:9282144444. 044-43523712.



விஜிபி

பாரம்பரியம் மிக்க விஜிபி ஹெரிடேஜ் கோல்டன் பீச் ரெசார்ட்டில் உங்கள் இல்லத் திருமண வைபவங்கள், சுப நிகழ்ச்சிகள் பிறந்தநாள் விழாக்கள், கார்ப்பரேட் நிறுவன நிகழ்ச்சிகள் போன்ற அனைத்தையும் எங்கள் கடற்கரை ரெசார்ட்டில் எழில் கொஞ்சும் இயற்கை அழகுடன் கொண்டாடுங்கள்!

VGP
HERITAGE
GOLDEN BEACH·ECR

இந்த விளம்பரத்தைக் கொண்டு வந்து
கோடைகாலக் கொண்டாட்டத்தை
சலுகையுடன் கொண்டாடுங்கள்! *







*T & C Apply

VGP Heritage Resort, Injambakam, Chennai | Contact: 75500 34366

# சமூக நல சேவகி சி.பைரவி ஷோபா B.A., (பைரவி பவுண்டேஷன்) - நாகர்கோவில்.

**முன்னுரை:**

பண்புடையார் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன் (குறள்-996)

என்னும் தமிழ்ப் புலவர் திருவள்ளுவர் வாய்மொழிக்கு இணங்க நற்பண்புடன் சமூகத்துக்குத் தொண்டு செய்து வரும் சாதனைப் பெண்மணி சமூக நல சேவகி சி.ஷோபா பி.ஏ அவர்களின் வாழ்க்கை பாதை இளம் தலைமுறைக்கு சிறந்த வழிகாட்டியாக விளங்கும். அவர் கடந்து வந்த பாதையும் சமூகத்திற்கு செய்து வரும் பணியையும் இக்கட்டுரையில் பார்ப்போம்.



**பிறப்பு:** குமரி மாவட்டம் கல்குளம் வட்டம் வேர்கிளம்பி அருகில் பிராலிகோட்டு விளை என்ற ஊரில் 27.2.1982அன்று பிறந்தார். இவர் பெற்றோர் செல்லத்துரை, அமிர்தாபாய் ஆவார். இவர் பெற்றோருக்கு ஒரே மகளாவார்.

**கல்வி:** மணலிக்கரை கான்வென்ட் பள்ளியில் எல்.கே.ஜி-5ஆம் வகுப்பு வரை கற்றார். தக்கலை மேல்நிலைப் பள்ளியில் 6முதல் 10வரை கற்றார். நாகர்கோவில் குட்ஷெப்பட் மேல்நிலைப் பள்ளியில் 11ஆம் வகுப்பு அறிவியல் பிரிவில் கற்றார். அதன்பின் இளநிலை பட்டம் பி.ஏ., அரசியல் பிரிவில் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் முடித்துள்ளார்.

**சமூகத்தொண்டு:**

தனி ஒரு பெண்ணாக குமரி மாவட்டத்தில் தான் சொந்த முயற்சியில் "கடவுள் தான் எல்லாம்" என்று ஆண்டவனை குருவாக வைத்து அவரிடம் பந்தத்தை வைத்து பாரத்தைப் போட்டு சமூகத் தொண்டு செய்து பெண்மணிகளுக்கு வழிகாட்டியாக விளங்குகிறார்.

**பணிபுரிந்து அனுபவம் பெற்ற பொது தொண்டு நிறுவனங்கள்:**

1.Volunteer in NYK (Nehru yuva kenddra)

2.WORKER IN VARIOUS NGOs

3.WORKER AS FIELD WORKER IN ONE. NGO (INTECH)

4.WORKED AS CO-ORDINATOR I ANOTHER NGO (CONSERVATION OF NATURE TRUST, CREATE TRUST)

போன்ற பொதுத் தொண்டு நிறுவனங்களில் பணியாற்றிய அனுபவத்தால் பைரவி பவுண்டேஷன் என்ற நிறுவனத்தை ஆரம்பித்தார்.

**பைரவி பவுண்டேஷன் (2012):**

பெண்களுக்கு சமூக பணி செய்தவற்காக 2011ஆம் ஆண்டு ஷோபா அவர்கள் நாகர்கோவில் பார்வதிபுரம் சிங்காரதோப்பில் ஆரம்பிக்கப்பட்டது. பைரவி பவுண்டேஷன். இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட பிறகு "பைரவி ஷோபா" என்ற பெயர் பெற்றார். இந்த அமைப்பின் மூலம் வளர்ந்து வரும் தமிழக பெண்மணிகளுக்கு தொடர்ந்து பொது தொண்டு செய்து வருகிறார்.

**பைரவி பவுண்டேஷன் பணிகள்:**

பெண்களுக்கு வாழ்க்கை தீர்வு காண வழிகாட்டுதல் பெண்களுக்கு பொருளாதார ரீதியான தன்னம்பிக்கை ஊட்டும் வகையில் வேலைவாய்ப்பு பயிற்சி வழங்கி வருகிறார்.

பெண்களுக்கு அளிக்கப்படும் பயிற்சி விபரம்:

1.தென்னை மரம் ஏறும் பயிற்சி

2.தையல் பயிற்சி

3.கைவினைப் பொருட்கள் செய்தல், 4.நஞ்சில்லா வேளாண்மை, 5.மாடி தோட்டம், 6.வீட்டுதோட்டம், 7.பொதுஇடங்களில் மரம் நடுதல், 8.பொது இடங்களை சுத்தம் செய்தல், 9.திடக்கழிவு மேலாண்மை, 10.ஏழை எளிய மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை, 11.கொரானா காலத்தில் Health Camp, 12.சுய உதவி குழு உருவாக்கி மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துதல், 13.தொழில் முனைவும் பெண்களுக்கு Govt of India மூலம் வெளி மாநிலத்துக்கு அனுப்புதல் போன்ற பணிகளை தொடர்ந்து செய்து வருகிறார்.

பைரவி ஷோபா அவர்கள் தனது பொது தொண்டு நிறுவனம் மூலம் 5ஆயிரம் வீடுகளில் மாடித் தோட்டம் அமைக்க இலவச பயிற்சி அளித்துள்ளார். இந்த செய்தி தி ஹிந்து பத்திரிக்கையில் 13.9.2013 வெளிவந்தது.

'ஜீவ காருண்யா விலங்குகள் பாதுகாப்பு அறக்கட்டளை (2013):

ஷோபா அவர்கள் பெண்கள் பொது தொண்டு பட்டுமல்ல விலங்குகளை காக்கும் பொருட்டு (செல்லப் பிராணிகள்) 2013ம் ஆண்டு மத்திய அரசாங் அங்கீகாரம் பெற்று "ஜீவகாருண்யா" என்ற அமைப்பை 2013ல் உருவாக்கினார். இந்நிறுவனம் தோவாளையில் பைரவி ஷோபா முயற்சியில் 2019முதல் நடைபெற்று வருகிறது.

பைரவி ஷோபா அவர்கள் பொதுத் தொண்டு அமைப்பில் பணிபுரிந்த அனுபவத்தால் பைரவி பவுண்டேஷன் மற்றும் ஜீவகாருண்யம் என்ற நிறுவனம் பெண்களுக்கும், விலங்குகளுக்கும் (செல்லப் பிராணிகளுக்கு) சேவை செய்யும் நோக்கத்தில் ஆரம்பித்தார்.

இரண்டு நிறுவனங்களும் இரண்டு கண்களாக கண்ணியத்துடன் நடத்தி சமுதாயத்திற்கு பணி செய்து வருகிறார். இவர் பொதுவாகவே பெண்கள் மற்றும் செல்லப் பிராணிகளிடம் அன்பாக பழகுவார். அன்புள்ளம் கொண்ட ஷோபா அவர்களுக்கு அன்புள்ளம் கொண்ட உறவுகள் எப்போதும் இருந்து கொண்டே இருக்கின்றனர்.

இவருக்கு ஜெர்லின் டேனி என்ற மகளும், டொமினிகன் என்ற மகன் மற்றும் இவர் தாயார் அமிர்தா பாய் இவர்களின் தன்னலமற்ற தொண்டுக்கு உதவியாக இருக்கின்றனர்.

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும் (குறள்-260)

எனும் தெய்வப் புலவர் திருவள்ளுவர் வாய்மொழிக்கு இணங்க இவர் தினமும் சைவ உணவை உட்கொண்டு வருகிறார். செல்லப் பிராணிகளும் அன்போடு பழகுகின்றனர். பிரம் குமாரி இயக்கத்தின் மூலம் ஆன்மீக ஞானம் பெற்று உள்ளார். இவரது இஷ்ட தெய்வம் சிவபெருமான் ஆவார்.

பொறுப்பு வகித்துள்ள பணிகள்:

1.STARTED BAIRAVI FOUNDATION NGO Reg:40/2012

2.STARTED JEEVAKARUNYA ANIMAL WELFARE CHARITABLE TRUST Reg No:171/2013

3.THUCKALAY EDUCATIONAL DISTRICT - NATIONAL GREEN CORPS COORDINATOR

4.VL NEW FOUNDATION, TAMILNADU STATE (SECRETARY)

**பைரவி ஷோபா அவர்கள் பெற்ற விருதுகள்:**

1.நினைவுப் பரிசுகள், மகளிர் தினவிழா-2012, Govt. Hss Thuckalay -24.2.2015 சுற்றுச் சூழல் தகவல் பரப்பும் படம் திறப்பு விழா), YMC -2016, ALL India Radio -2018.

தேசிய பசுமைப்படை நினைவு பரிசு, கௌரவ பரிசு: IOB நிதி சார் கல்வி மற்றும் கடன் ஆலோசனைக்காக (ஆறாவது ஆண்டு நிறைவு நிகழ்ச்சி)-1.9.2015, சிறந்த பயிற்சியாளருக்கு வழங்கிய பரிசுகள்: சிறந்த வேளாண்மை பயிற்சி மையம் (அட்டா மார்க்கெட்)-2.5.15, Govt of Tamil Nadu National Green Corps (தேசிய பசுமைப்படை)-23.8.2017, Women Entre Preneur Ship Summit New Delhi -25.8.2017.


INVEST IN A
DOUBLE RENT
READY TO MOVE IN HOMES!
RUBY
Landmark
On Vandalur-Padappai Main Road
Mannivakkam
₹49 lacs Onwards
2 & 3 BHK
Luxury Apartments
1101 - 1518 sq.ft.
ELITE
₹91 lacs Onwards
REGENCY
Gateway
STAR CITY
UNDER CONSTRUCTION
ruby
3009 3009


GP
கோபால் பிளாஸ்டிக்
Dealers in : எல்லாவகையான பிளாஸ்டிக் பெட்டிகியல் கிடைக்கும்
9, அரங்கப்பன்தெரு, (ஸ்ரீனிவாஸ்தியேட்டர் அருகில்), பேற்று பாம்பலம், சென்னை-33
RS பிளாஸ்டிக்
உரிமையாளர்:S.ராஜகோபால், S.ஜெயராஜ்
நெ. 16, உப்பாலிஅம்மன்கோவில்தெரு, திருநீர்மலை, சென்னை-44.
Cell:9444037465, 9840446688 Ph: 24891192, 24748148.
S.இராஜகோபால்
S.ஜெயராஜ்


நல்லதே நினைப்போம்! நல்லதே செய்வோம்! நல்லதே நடக்கும்!
நியூ நிதில் & கோ
தரமான கட்டில், பீரோ, மெத்தை, இதர பர்னிச்சர்கள் வாங்க சிறந்த இடம்..
போன்:044-25962323, 044-42165485
NEW NITHIL & CO
Whole Sale & Retail
Steel & Wood Furniture Show Room
No:1171, T.H.Road, Old Washermanpet, Chennai-600 021

# தமிழக நாடார் மேட்ரிமொனி

சென்னை, தமிழகமெங்கும் மற்றும் வெளிநாடு வரன்கள்

SINCE 2007

தங்களின் வீட்டிலுள்ள வரன்களுக்கு மணமகன், மணமகள் விபரங்கள், ஜாதகத்துடன் தங்கள் வீட்டிலிருந்து எங்களின் வெப்சைட் மூலமாக நேரில் பார்க்கலாம். வரன் பதிவு இலவசம்.

Visit Our Website

**www.tamilaganadarmatrimony.com**

நம்ம தமிழகத்தின் சென்னை, நெல்லை, தூத்துக்குடி, குமரி, விருதுநகர்
உட்பட அனைத்து மாவட்டம். இந்தியாவின் சென்னை, மும்பை,
கர்நாடகா, ஆந்திரா மற்றும் அனைத்து மாநில நாடார்கள்.
USA, UK, Canada, Singapore, Malaysia, Australia,
Germany, Dubai போன்ற வெளிநாடுகளிலுள்ள
இந்து நாடார், கிறிஸ்தவ நாடார் (RC, CSI, Pentecost)
BE, ME, M.Tech, MCA, MBA, IT, CA, Govt, VIP தொழில்
அதிபர்கள் சிறிய, பெரிய வியாபாரிகள் முதல் மணம் / மறுமணம்,
17 வருட அனுபவமுள்ள நாங்கள், எங்களிடம் ஏராளமான
திருமணங்கள் நடைபெற்று வருகிறது.

## தமிழக டாக்டர்ஸ் மேட்ரிமொனி

MBBS, MD, MS, DGO, MDS, ORTHO, ANESTHESIA, SIDDHA, HOMEO, NURSE

**Open our Website : www.tamilagadoctorsmatrimony.com**

எங்களுக்கென்று தனி வெப்சைட் இருப்பதால் எங்களிடம் மிக சுலபமாக திருமணம் முடிகிறது.
திருமணத்திற்காக காத்திருக்காதீர்கள். உங்கள் வரன்களுக்காக பேசும்

# நெல்லை T. ராஜன் நாடார்

கேம்ப்ரோடு ஜங்சன், கிழக்கு தாம்பரம், சென்னை - 600 073

**Cell : 73388 12126, 73977 76595**

E-mail : tamilagamatrimony2005@gmail.com

# என் தந்தையின் அறிவுச் சிந்தனைகள்!

## விஜிபி ராஜாதாஸ்

### 8.என்தந்தையின் தனி அடையாளங்கள்!

வீட்டுமனைத் திட்டம்:

வாழுங்கள் வசதியாக என்பதே என் தந்தையின் வீட்டுமனைத் திட்டத்தின் முழக்கமாகும். இது சமூகத்தின் அடித்தட்டு மக்களுக்கும் சென்றடைய வேண்டும் என்பதில் ஆர்வமுடன் செயல்பட்டார். அந்த திட்டத்தைச் செயலாக்க, விஜிபி மனைப்பிரிவிலேயே மாதிரி வீடுகள் கட்டி ஒரு வீடு எப்படியெல்லாம் அமைய வேண்டும். அப்படியெல்லாம் வடிவமைத்து அதாவது வரவேற்பு அறை, படுக்கை அறை, சமையல் அறை, குளியல் அறை செய்து, அவர்கள் மனதை ஈர்க்கும்படி செய்தார். இதன் மூலம் மக்களுக்கு தனக்கென ஒரு சொந்தவீடு வாங்கும் எண்ணத்தை மக்களின் உள்ளத்தில் ஆழ்ந்து பதிய செய்தார். இதனால் தான் என் அருமைத் தந்தை விஜி.பன்னீர்தாஸ் அவர்கள் வீட்டு மனைத் திட்டத்தின் பிதா மகனாக இன்று வரை அறியப்படுகிறார்.

முதன் முதலாக கூற வேண்டிய செய்தி:

தங்கக் கடற்கரை தொடங்கிய நாட்களில் தங்கக்கடற்கரை நுழைவு கட்டணம் 10ரூபாய். அந்த 10 ரூபாயை, வருகின்ற மக்களுக்கு அதைத் திருப்பித் தருகின்ற வகையில், தங்கக் கடற்கரையினுள் இருக்கின்ற உணவுக் கூடத்தில் நுழைவுச் சீட்டைக் கொடுத்தால் 10ரூபாய் மதிப்புள்ள பெரிய தோசை ஒன்று தருவார்கள். இதுவும் என் தந்தையாரின் சிந்தனையில் பூத்தாகும். இது அவரின் ஈகை சிந்தனைக்கு ஓர் எடுத்துக்காட்டு.



இங்கே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன், நான் ஐதராபாத் சென்றிருந்த போது, அந்த 'ராமோஜி சிட்டி'யை பார்க்க நேரிட்டது. அந்த ராமோஜி சிட்டி நகரத்தை உருவாக்கி, அந்த நகரத்தில் பொழுதுபோக்கு அம்சங்கள், விளையாட்டுப் பூங்கா, ஓட்டல், படப்பிடிப்பு இடம், நீர் அருவி, பறவைகள் சரணாலயம், பட்டாம்பூச்சித் தோட்டம் என பலவித அம்சங்கள் கொண்ட, அம் மாபெரும் சாதனைகளை திட்டமிட்டு உருவாக்கிய அந்த சிறந்த நபரை அவர் அலுவலகத்திற்கு சென்று பார்க்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. ஏனென்றால் அவ்வளவு பெரிய மாமனிதர் எங்களை அன்புடன் வரவேற்றார். நன்றாக உபசரித்து, மிக தன்மையாகவும், எளிமையாகவும், இனிமையாகவும் எங்களுடன் பேசிக் கொண்டும் இருந்தார். அவர் வயது ஏறத்தாழ 80க்கும் மேல் இருக்கும் என்று நினைக்கின்றேன்.

தொடர்ந்து நானும் என் துணைவியாரும் அவரோடு பேசிக்கொண்டிருக்கும்போது, அவர் எனக்குச் சொன்னது என்னை மிகவும் வியப்பில் ஆழ்த்தியது. இந்த 'ராமோஜி சிட்டி' உருவாவதற்கு மூலகாரணமே உங்களுடைய அருமைத் தந்தை வி.ஜி.பன்னீர்தாஸ்தான் - என்று மிகுந்த உற்சாகமாகச் சொன்னார் டாக்டர்.ராமோஜி அவர்கள். என் தந்தையின் பெயரைக் குறிப்பிட்டு, அவரால்தான் இப்படியொரு மகத்தான சாதனையை சாதிக்க முடிந்தது என்று சொன்னது, எனக்கு மிகவும் பிரம்மிப்பாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தது. மேலும், அவரிடம் நான் கேட்டேன். என் தந்தையின் பெயரைக் கூறினீர்கள். அவரைச் சந்தித்திருக்கிறீர்களா, அல்லது எங்கள் தங்கக்கடற்கரைக்கு வந்திருக்கிறீர்களா? என்று வினவினேன், அதற்கு அவர் ஒரு பெரிய பிரசங்கமே வைத்துவிட்டார்.

ஆரம்பகாலத்தில் "சென்னையிலுள்ள விஜிபி தங்கக் கடற்கரைக்கு" நான் அடிக்கடி வருவதுண்டு. நான் திரைப்படம் எடுக்கும்போது, எங்கள் படக்குழுவினருடன் தங்கக்கடற்கரைக்கு சில காட்சிகளுக்கு படப்பிடிப்பு நடத்துவோம். ஒருபடம் இரண்டு படம் அல்ல. தொடர்ந்து நாங்கள் எடுக்கும் எல்லா படப்பிடிப்பு நிகழ்ச்சிகளுக்கும் தங்கக்கடற்கரைக்கு தொடர்ந்து வருவோம்.முக்கியமான காட்சிகளை மட்டும் தங்கக்கடற்கரையில் எடுத்துக் கொள்வோம். இது வழக்கமாக நடந்து வருகின்ற நிகழ்ச்சி. அப்படி அங்கு நான் வரும்போது, உங்கள் தந்தையாரின் அற்புதமான படைப்பாகிய, மிகவும் சிறந்த முறையில் வடிவமைக்கப்பட்ட தங்கக் கடற்கரை என்னை மிகவும் கவர்ந்தது. அதுமட்டுமல்ல, தங்கக்கடற்கரை நுழைவுச் சீட்டு வாங்கி உள்ளே வரும் மக்களுக்கு, நல்லதொரு தோசையும் அதற்கு சுவையிக்க சாம்பார், சட்னி என்று நிரம்ப கொடுப்பார்கள். அந்த உணவு சாப்பாடு பற்றி மனநிறைவோடு எங்கள் குழுவினருடன் நான் சிலாகித்துப் பேசிக் கொண்டிருப்பேன். மேலும் தங்கக் கடற்கரை எங்களுக்கு மிகவும் ராசியான இடமாக இருந்தது. ஏனென்றால், எங்களுடைய எல்லா திரைப்படங்களும் வெற்றியைக் கொடுத்துள்ளன.


Ayya Thunai

MUTHU CONSULTANCY

M.Jayaselvam (33AMAPJ1834H2ZH)

ALL BUSINESS REGISTRATION, INCOME TAX, GST, TDS FILINGS & LOAN ARRANGEMENTS.

NO:14, V.V.GIRI SALAI, JAFFERKHANPET, CHENNAI-83,
INFO@MUTHUCONSULTANCY.COM 8807333334, 8778720020.



Prop.S.Vijayan, Cell: 98403 53031. (0)044/ 26623031.

SRI LAKSHMI ENTERPRISES

Scaffollding & Shed contractor / School, College, Church & Construction Company / All Type Shed Works

28/54, Cooks Road, P.B. Chennai, Chennai-12.

சேர்ந்து பயனடைவீர்! வாய்ப்பை பயன்படுத்துவீர்!!

**இக்கல்வி ஆண்டிலேயே மருத்துவ படிப்பு பயில மிக குறைந்த இடங்களே உள்ளன.**

**Counselling Apply செய்யாத மாணவர்களுக்கும் அரிய வாய்ப்பு!**

**அத்தி இயற்கை மருத்துவ கல்லூரி** குடியாத்தம் (வேலூர் மாவட்டம்)

(இயற்கை மருத்துவம் & யோகா)

அரசு அங்கீகாரம் பெற்றது, நீட் தேர்வு விலக்கு பெற்றது

**BNYS (5½ (NATUROPATHY & YOGA) வருடம்)** **COUNSELLING CODE: 852**

**04171-229108, 8754959066**




வேலூர் மாவட்டம் குடியாத்தம் நகரின் அருகில் 4கிலோமீட்டர் தொலைவில் காக்கா தோப்பு கிராமத்தில் எங்களுடைய அத்தி இயற்கை மற்றும் யோகா மருத்துவ கல்லூரி அமைந்துள்ளது.

எங்களுடைய கல்லூரியானது இயற்கை சூழலில் தேசிய நெடுஞ்சாலை, இரயில் நிலையம் மற்றும் நகர பேருந்து நிலையத்திற்கு அருகாமையில் அமைந்துள்ளது.

கிராமப்புற மாணவர்களையும் மருத்துவராக்க வேண்டும் என்ற நோக்கில் பேராசிரியர் சிறுநீரகவியல் நிபுணர் டாக்டர் பி.சௌந்தரராஜன் அவர்களால் துவங்கப்பட்ட கல்லூரி.

எங்களுடைய கல்லூரியில் இயற்கை சூழலுடன் கூடிய காற்றோட்டமான வகுப்பறைகளும், மாணவ, மாணவிகளுக்கு தங்கும் விடுதிகளும் மற்றும் அனைத்து நோய்களுக்கும் சிறந்த முறையில் அத்தி இயற்கை மற்றும் யோகா மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையம், அத்தி அலோபதி மருத்துவமனை மற்றும் ஆயுஷ் மருத்துவமனையில் நோயின் தன்மை அறிந்து கூட்டு மருத்துவமனையில் நோயின் தன்மை அறிந்து கூட்டு மருத்துவ சிகிச்சை முறையை பயன்படுத்தி நோயாளிகளுக்கு எந்தவித பக்க விளைவுகளும் ஏற்படா வண்ணம் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

எங்களுடைய மாணவர்களுக்கு இயற்கை மருத்துவம் மட்டும் இல்லாமல் அலோபதி ஆயுஷ் போன்ற மருத்துவத்தை பற்றியும் அறிய முடிகிறது.. எனவே நோயின் தன்மை அறிந்து அதற்கேற்ப கூட்டு சிகிச்சை முறை பயன்படுத்தி சிறந்த முறையில் சிகிச்சை அளிக்க கூடிய வகையில் எங்களுடைய கல்லூரி வளாகத்திலேயே பயில வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தேசிய இயற்கை மருத்துவ தினத்தை முன்னிட்டு "உணவே மருந்து" என்ற தலைப்பில் கொண்டாடப்பட்ட நிகழ்ச்சிக்கு VIT வேந்தர் திரு.ஜி.விஸ்வநாதன் அவர்கள் சிறப்பு விருந்தினராக வருகை புரிந்தபோது மாணவர்களுக்கு பயிற்றுவிக்கும் முறையும் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கும் முறையையும் பார்த்து பாராட்டினார் மேலும் இயற்கை மருத்துவத்தை பற்றி படிக்க வெகு தொலைவிற்கு போக வேண்டிய நிலையை மாற்றி வேலூர் மாவட்டத்திலேயே கிராமபுற மாணவர்களையும் மருத்துவராக்கும் வகையில் அமைந்துள்ள கல்லூரியை மென்மேலும் வளர்ச்சி அடைய வாழ்த்தினார். மேலும் எங்கள் கல்வி நிறுவனத்தில் மருத்துவ கல்லூரியுடன் மருத்துவம் சார்ந்த அத்தி செவிலியர் கல்லூரி (B.Sc (N).,ANM) மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த குடியாத்தம் பாலிடெக்னிக் கல்லூரியும் அமைந்துள்ளதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.



கீழ ஈரால் அருள்மிகு காமாட்சி அம்மன் துணை

எம்.எஸ்.முத்துவேல் நாடார்,

போன்:9443742889. 7708701159.

**சரவணன் ரியல் ஏஜென்சிஸ்**

காமாட்சி ஸ்டோர்ஸ்

**தலைவர் மாமல்லபுரம் வட்டார நாடார் சங்கம்**

நிலம் வாங்க விற்க லேஅவுட் புரோமோட்டர் எண்:118/1, டி.கே.எம்.ரோடு, மாமல்லபுரம், பின்கோடு-603104.





S.K.இராகவன் **இராஜா ஏஜென்சி**

Dealers in: Hardwares, Paints, Cements, Steel, Sanitarywares & All Building Materials

பிளாட் எண்:1, ஆண்டவர்நகர், பாரதிசாலை மெயின் ரோடு, இராயபுரம், சென்னை-89

**Ph:044-22491790, 22492340 ,Cell: 9841169098, 70100 00824**

# கிட்னி -- துப்புரவு தொழிற்சாலை

**இரத்தத்தைச் சுத்தப்படுத்தும் சிறுநீரகங்களின் பணி, வளர்ச்சி, ஆரோக்கியம் மற்றும் சிறுநீரக நோய்கள் பற்றி பிரமிப்பான கட்டுரை**

## 36.செலவு குறைவு.... எப்படி?

**-டாக்டர் வி.சௌந்தரராஜன்.**



நான் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பணியாற்றச் சேர்ந்த புதிது. அங்கே பல வருடங்களாக வேலை பார்த்த மங்களம்மா என்கிற ஆயா என்னிடம் அடிக்கடி இந்த வார்த்தைகளைச் சொல்வார்.

"முன்னெல்லாம் வாந்தி, பாம்புக்கடின்னு ஏதாவது பிரச்சனையில் ஒண்ணுக்குப் போகக் கூட முடியாம அவஸ்தைப்பட்டு இங்கே வர்ற ஆளுங்க பிழைக்கிறதே ரொம்ப அபூர்வம். ஆனா, ராசா.. நீ வந்தபிறகுதான் அவங்க வயித்தைக் கழுவிட்டு உசிரைக் காப்பாத்தித் தர்றே..." என்பார்.

சிறுநீரக செயல் இழப்பு நோயாளிகளை நான் காப்பாற்றியது பற்றி மங்களம்மா சொல்வதில் நான் பெருமைப்படுவதற்கு எதுவுமில்லை . ஏனெனில், அது "அக்யூட் பெரிடோனியல் டயாலிசிஸ்" எனப்படுகிற ஏ.பி.டி-யின் மகிமை. தற்காலிக சிறுநீரக செயல் இழப்புகளின் போதும், அவசர காலங்களில் நிரந்தர சிறுநீரக செயல் இழப்பு நோயாளிகளுக்கும் உபயோகமாகிறது இந்த ஏ.பி.டி.!

சி.ஏ.பி.டி-யில் நாம் பார்த்த அதே அடிவயிற்றுப் பகுதியை உபயோகித்து, அதே முறையில்தான் இங்கும் டயாலிசிஸ்நடக்கிறது. ஆனால், சி.ஏ.டி.பியை விடவும் இதற்குச் செலவு மிகமிக குறைவு. இது எதனால்!

சி.ஏ.பிடி.டியில் நாம் பார்த்த அதே அடிவயிற்றுப் பகுதியை உபயோகித்து, அதே முறையில்தான் இங்கும் டயாலிசிஸ் நடக்கிறது. ஆனால், சி.ஏ.டி.பி-யை விடவும் இதற்குச் செலவு மிகமிக குறைவு. இது எதனால்?

சி.ஏ.பி.டி-யில் உபயோகமாகிற கதீடரின் விலை ஐந்தாயிரம் ரூபாய். ஏ.பி.டி-யில் உபயோகமாகிற கதீடர் வெறும் இருநூற்றைம்பது ரூபாய்தான். சி.ஏ.பி.டி-க்குத் தேவைப்படுகிற டயாலிசேட் திரவத்தின் விலை இருநூற்றைம்பது ரூபாய். இங்கோ நாற்பது ரூபாய்!



இதனால் தான் ஏ.பி.டியை நிறைய அரசு மருத்துவமனைகளில் இலவசமாகச் செய்கிறார்கள். இந்த ஏ.பி.டிக்கு வேண்டிய கதீடர் முதல் டயாலிசேட் திரவம் வரை எல்லாம் நம் நாட்டிலேயே தயாராகின்றன.

அப்படியெனில், இந்த ஏ.பி.டியையே நிரந்தர சிறுநீரக செயல் இழப்பு நோயாளிகளுக்கும் செய்யலாமே டாக்டர்... ஏன் விலையுயர்ந்த சி.ஏ.பி.டிக்கு செல்ல வேண்டும்? என்பது தானே உங்கள் கேள்வி.



இது முடியாத காரியம். ஏன் தெரியுமா? சி.ஏ.பி.டியில் தொப்புளுக்கு அருகில் ஒரு துளை போட்டுக் கதீடரை நிரந்தரமாகப் பொருத்திவிடுவோம் என்று பார்த்தோமல்லவா? ஆனால் ஏ.பி.டியில் டயாலிசிஸ் முடிந்ததும் கதீடரை எடுத்து விடுவோம். மீண்டும் டயாலிசிசுக்கு செய்யும்போது திரும்பவும் தொப்புளுக்கு அருகில் வேறொரு கதீடர் செருகுவோம். சி.ஏ.பி.டி. நோயாளிகள் அந்த கதீடரைப் பொருத்திக்கொண்டு எங்கே வேண்டுமானாலும் போகலாம் என்று பார்த்தோம். காரணம், அந்த கதீடர் வளையக்கூடிய தன்மையில் இருக்கும். ஆனால், ஏ.பி.டி-யில் உபயோகமாகிற கதீடர், நாம் தண்ணீர் பிடிக்கப் பயன்படுத்துகிற "ஹோஸ் பைப்" போன்று கடினத்தன்மையுடையது. எழுந்து உட்கார்ந்தால் வயிற்றில் குத்தும். எனவே, ஏ.பி.டியில் டயாலிசிஸ் முடியும் வரை நோயாளி படுத்த நிலையில்தான் இருக்கவேண்டும்.

சி.ஏ.பி.டி. ஒரு நாளுக்கு நான்கு முறை சில மணி நேரம் விட்டுவிட்டுச் செய்தால் போதும். ஏ.பி.டியில் தொடர்ந்து இருபத்துநான்கு மணி நேரம் டயாலிசிஸில் இருக்க வேண்டும் இப்போது யோசித்துப் பாருங்கள்.

நிரந்தர சிறுநீரக செயல் இழப்பு நோயாளிகளுக்கு ஏ.பி.டி.செய்ய வேண்டுமெனில் அவர்கள் கிட்டத்தட்ட வாழ்நாள் முழுக்கப்படுத்தபடியே இருக்க வேண்டும். இரண்டு நாட்களுக்கொரு முறை தொப்புளுக்கு அருகில் ஓட்டை போட்டு கதீடர் போட வேண்டிய பிரச்னை வேறு. இது சாத்தியமற்ற காரியம். நான் அதிகபட்சமாக ஒரு பையனுக்கு 186முறை இந்த ஏ.பி.டி-யைச் செய்திருக்கிறேன்.

இருந்தாலும் இந்த ஏ.பி.டியின் சாதகம் என்னவென்றால் சிறிய மருத்துவமனைகளில் கூட இதைப் பண்ண முடியும். அவசரத்துக்கு மருத்துவர்களின் உதவியின்றி நல்ல பயிற்சி எடுத்த நர்ஸேகூடச் செய்ய முடியும். தற்காலிக சிறுநீரக செயல்இழப்பு நோயாளிகளுக்கு இது உயிர் காக்கும் ஒன்று. இவர்களுக்கு ஏ.பி.டியைச் சில வாரங்களுக்குச் செய்தால், திடீரென்று சிறுநீரகங்கள் பழைய படி வேலை பார்க்கத் தொடங்கிவிடும்.

ஆனால், நிரந்தர சிறுநீரக செயல் இழப்பு நோயாளிகளுக்கு இந்த ஏ.பி.டி. செய்வது, அந்த நேரத்துக்கு மட்டும் உயிர் காக்கிற ஒன்று. அவ்வளவுதான்.



**நாடார் வரன்கள்:** R.C, CSI, **இந்து நாடார்களுக்கு அனுகவும்,** IAS, IPS, IFS, IRS, MD,MS, B.E, M.E, MBA, MCA., **மற்றும் தொழிலதிபர்கள், கம்பெனி, பில்டர்ஸ், கல்லூரி மற்றும் அரசு பணி மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஆண் பெண் வரன்களும், வி.ஐ.பி. டாக்டர் வரன்கள் ஏராளமாக உள்ளன**

தொடர்புக்கு: K.K.M.மரிய ஜான்சன் போன்: வாட்ஸ் அப் எண்: 7373627729, 8148887767.

**முகவரி:எம்.மரியஜான்சன், எண்:8/3பி, கீழ்தளம், நேரு தெரு, சீனிவாசன்நகர், பாடி, சென்னை-600 050.**



R.S.SANTHANAM

Sri Brammasakthi Amman Thunai Sri Sudalaimadaswami Thunai

**R.S.SANTHANAM**

**ரேவதி ஹார்டுவேர்ஸ்**

Dealers in: Cement, Steel Quality Bricks, Sand, Blue Metal and Building Material Suppliers.

Stockist : Coramandel, ultra Tech, Zuari / Priya Cement

38/24-A, Poonamallee Road, Ekkattuthangal, Chennai-32. Ph:22252948, 22250015 Cell: 9840042948.

# தமிழக வரலாற்றில் எழுச்சியும் வீழ்ச்சியும்

**தொகுப்பு:கீழக்கரை ந.ஆ.அ.மா.ஜெயபாஸ்கரன், து.அருணாசலபுரம்**

9.உத்தமசோழன் (கி.பி.970-985)

சுந்தர சோழனுக்குப் பிறகு அவன் மகன் முதல் இராச இராச சோழன் பட்டம் பெற்று அரசாளவேண்டும் என்று சோழ நாட்டிலிருந்த பொதுமக்கள் பெரிதும் விரும்பினர். அன்னோர் அங்ஙனம் விரும்பியும் இராச இராச சோழன் தன் பெரிய பாட்டன் புதல்வனும், தனக்குச் சிறிய தந்தையுமாகிய உத்தம சோழனது உரிமையையும், விருப்பத்தையும் மதித்து இவனுக்குச் சோழநாட்டின் ஆட்சியை அளித்தனன். இராச இராச சோழனது தியாக உணர்ச்சியும், அறநெறி பிறழாக் கொள்கையுமே உத்தம சோழன் முடிசூட்டப் பெறுவதற்கு ஏதுக்களாக இருந்தன என்பதில் சிறிதும் ஐயமில்லை. இவன் முடிசூட்டு விழா கி.பி.969இல் இறுதியாதல் கி.பி.970ன் தொடக்கத்தில் நடைபெற்றிருத்தல் வேண்டும். இனி உத்தமசோழன் ஆட்சிக் காலம் தொண்டை நாடும், திருமுனைப்பாடி நாடும் இவ்வேந்தன் ஆட்சிக்குட்பட்டிருந்தன என்பது விளங்கும்.

உத்தம சோழனுக்குப் பல மனைவியர் இருந்தனர். அன்னோர் பட்டன் தானதும், மழபாடித் தென்னவன் மாதேவி, இருக்கோவர் மகள் வானவன் மாதேவி, விழுப்பரையர், மகள் கிழானடிகள், பழுவேட்டரையர் மகள் என்போர் பட்டத்தரசியாக விளங்கியவள் மூத்த நம்பிராட்டியாகிய திருபுவனமாதேவியாவள். அன்றியும் பஞ்சவன்மாதேவி, சொன்னமாதேவி, ஆரூரன் அம்பலத்தடிகள் என்னும் வேறு மனைவியரும் இருந்தனர். அவர்கள் எல்லோரும் தம்மாமியாகிய செம்பியன் மாதேவி பெயரால் தஞ்சை ஜில்லா நாகப்பட்டினத்தாலுகாவில் உள்ள செம்பியன் மாதேவி என்னும் ஊரில் எடுப்பித்த திருக்கயிலாயம் என்னும் சிவாலயத்திற்கு நாள் வழிபாட்டிற்கும், திங்கள் விழாக்களுக்கும் பல நிவந்தங்கள் அளித்துள்ளனர். இனி முதல் இராச இராச சோழன் ஆட்சியில் கோயிற்காரியங்களும், பிற அறநிலையங்களும் நன்கு நடைபெறுமாறு கண்காணித்து வந்த மதுராந்தகன் கண்டராதித்த சோழன் என்பவன் இவ்வரசனுடைய புதல்வன் ஆவன்.

நடுவில் புலிவுருவம் பொறிக்கப்பட்டதாயும், ஓரத்தில் உத்தம சோழன் என்று வடமொழியில் வரையப் பெற்றதாயுமிருந்த ஒரு பொற்காசு உத்தமசோழன் ஆட்சிக் காலத்தில் வெளியிடப்பெற்று வழங்கி வந்தது. நாட்டில் எங்கும் அமைதி நிலவ, மக்கள் எல்லோரும் எத்தகை துன்பங்களுமின்றி இனிது வாழ்ந்து வருமாறு செங்கோல் செலுத்திக் கொண்டிருந்த உத்தம சோழனும் கி.பி.985ஆம் ஆண்டில் இறந்தான். இவனுக்குப் பிறகு சுந்தரசோழன் புதல்வனாகிய **முதல் இராசஇராச சோழன்** முடிசூட்டப் பெற்றனன்.

இனி உத்தம சோழனுடைய அரும்பெறும் அன்னையாகிய செம்பியன் மாதேவியின் வரலாற்றையும் சமயத் தொண்டையும் எழுதுவதும் ஒரு வகையில் ஏற்புடையதேயாம். இவ்வரசி மழவர் குலத்தில் தோன்றி முதற் கண்டராதித்த சோழன் மாதேவியாகிப் பெருவாழ்வெய்தியவள் எல்லையற்ற சிவபக்திச் செல்வம் படைத்தவளாய்ச் சிறப்புற்றிருந்தமை பற்றி மாதேவடிகள் எனவும் வழங்கப் பெற்றவள். இவ்வம்மை தன் கணவனை இளமைப் பருவத்தில் இழந்தும், குழந்தையாயிருந்த தன் ஒரே புதல்வனாகிய உத்தம சோழன் பொருட்டே உயிர் வாழ்ந்தாள். இவள் தன் கணவன் இறந்த பின்னர் அரிஞ்சயன், சுந்தரசோழன், உத்தமசோழன் ஆகிய மூவேந்தர் ஆட்சிக்காலங்களிலும், முதல் இராச ராசன் ஆட்சியில் கி.பி.1001வரையிலும் உயிருடன் இருந்தவள். இவ்வரசி செங்கற் கோயில்களைக் கற்றளிகளாக எடுப்பித்தும், பல கோயில்களுக்கு நிவந்தங்கள் விட்டும், அணிகலன்கள் அளித்தும், பொன்னாலும் வெள்ளியாலும் பல்வகைக் கலங்கள் செய்து கொடுத்தும் புரிந்துள்ள அறங்கள் மிகப் பலவாம். அவற்றுள் முதலில் வைத்துப் பாராட்டுதற்குரியது தஞ்சாவூர் ஜில்லாவில் கோனேரிராசபுரம் என்று இக்காலத்தில் வழங்கப்பெறும் திருநல்லம் என்னும் ஊரிலுள்ள சிவாலயத்தை கற்றளியாக எடுப்பித்து, அதற்கு நாள் வழிபாட்டிற்கும், விழாக்களுக்கும் நிவந்தமாக இறையிலி நிலங்கள் அளித்திருப்பதேயாம். அத்திருக்கோயிலுக்கு 'ஸ்ரீகண்டராதித்தன்' என்று தன் ஒப்புயர்வற்ற கணவன் பெயரையே இவ்வம்மை வழங்கியிருப்பது அவன்பால் வைத்திருந்த பேரன்பினை இனிது புலப்படுத்தும். அக்கோயிலில் கண்டராதித்த சோழன் சிவலிங்கத்தை வழிபடுவதாகப் படிமம் ஒன்று வைக்கப்பட்டிருத்தலை இன்றும் காணலாம்.

- தொடரும்.........

## இந்து நாடார் மணமகள் தேவை

பெயர்:P.வசந்த்குமார், சொந்தஊர்-பால்குளம், திருச்செந்தூர் வட்டம், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-3.8.1994, நேரம்:10:02pm, உயரம்-6அடி, நிறம்-மாநிறம், ராசி-மிதுனம், நட்சத்திரம்-மிருகசீரிஷம், படிப்பு-B.E.,(ECE)., SSN., Harman இன்டர்நேஷனல் பெங்களூர், மாதவருமானம்-1,20,000/-, பெறும் இந்த மணமகனுக்கு, பி.இ.முடித்து வேலைப்பார்பவராக இருக்க வேண்டும், 9750138224, 9498384508, File No:JL-965-B.

| | | | |
|---|---|---|---|
| லக் | கேது | அங் | சந் |
| சனி | இராசி | | சூரி புத |
| | | | |
| | | குரு ராகு | சுக் |

| | | | |
|---|---|---|---|
| சனி | | ராகு | |
| | அம்சம் | | |
| சுக் குரு | | | |
| லக் சூரி | கேது | சந் | அங் புதன் |

## இந்து நாடார் மணமகள் தேவை.

சென்னையில் வசிக்கும் மூத்த பெண் எழுத்தாளர், பேச்சாளர் சரஸ்வதி இராமநாதன் தலைமை வகித்தார். எனது நண்பர், நடிகர் ராஜேஷ், "சன்" தொலைக்காட்சியிலும், கலைஞர் தொலைக்காட்சியிலும் சிறப்பு நேர்காணல்களைத் தயாரித்து வழங்கி வந்த ரமேஷ் பிரபா, மறைந்த எழுத்தாளர் விந்தன் அவர்களின் குமாரர் ஜெனார்த்தனன் ஆகியோர் பங்கேற்று வாழ்த்தினர்.

"பெண் என்னும் தேவ ரகசியம்" நூல் ஏகப்பட்ட விமர்சனங்களையும், வரவேற்பையும் பெற்றது. இந்த நூல் வெளியீட்டு விழாச் செய்தி அடுத்த நாள் தினமணியில் படத்துடன் பெரிய செய்தியாக வெளிவந்தது. இந்த நூலைப் படித்து விட்டு கோவையைச் சேர்ந்த ஒரு பெண், கல்லூரி பேராசிரியை என்னை காந்தர்வத் திருமணம் செய்து கொண்டதாக பைத்தியம் போல் பேசிக் கொண்டு திரிந்தார். 10ஆண்டுகளுக்கு பிறகே அவர் இயல்பு நிலைக்குத் திரும்பினார். தலைவர் குமரி அனந்தனுக்கு இதெல்லாம் தெரியாது.



ஓயாத பயணங்கள்

"எங்கள் காங்கிரஸ் யாத்திரை" என்ற பாரதியின் அரிய கிடைக்காத ஒரே பிரதி நூலை பாரதி காவலர் ராமமூர்த்தியிடம் இருந்து பெற்று 2000 மீள் பதிப்புச் செய்து வெளியிட்டவர்.

ஆப்பிரிக்க நாடான சாம்பியாவில் இருந்து 1883ல் இலங்கை தமிழர்கள் துயர் துடைக்க, விசா இல்லாமலேயே இலண்டன் சென்று சுற்றி வளைத்து இலண்டன் அதிகாரிகளிடம் அனுமதி பெற்று செஞ்சிலுவை சங்கம், அகதிகள் பாதுகாப்பு மையம், மனித உரிமைக் கழகம் சென்று இலங்கைத் தமிழர் துயர் துடைக்க வாதாடியவர்.

நேதாஜியின் ஜான்சிராணி பெயர் கொண்ட பெண்கள் படைக்குத் தலைமையேற்ற கேப்டன் லட்சுமி, செங்கோட்டைச் சிறை புகழ் மேஜர் தில்லான், வீட்டுக் காவலில் இருந்த போது நேதாஜியை மாறுவேடத்தில் தம் காரில் இந்திய எல்லைக்கு வெளியேஅழைத்துச் சென்ற சுகிர்போஸ், கேப்டன் ஜானகி, நிஜலிங்கப்பா போன்ற தியாகிகளை அழைத்து தியாகிகள் மாநாடு நடத்தி தியாகிகளுக்கு மணிமண்டபம் வேண்டிய கோரிக்கை வைத்து அது கலைஞர் அரசால் நிறைவேற்றப்பட்டது.

அம்பா சங்கர் தலைமையில் பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு உறுப்பினராக இருந்து அரசு ஆவணங்களில் மதம் குறிக்கக்கூடாதென வாதிட்டவர்.

அந்தமான் செல்ல கல்கத்தா சென்று போர்ட் பிளேயர் போவதை சென்னை -அந்தமான் நேரடி விமானப் போக்குவரத்தும், ஆமதாபாத் தமிழர்கள் பம்பாய் சென்று வண்டி மாறாமல் தன்பாத் வழியாக தமிழ்நாடு வர நவஜீவன் துரித ரயிலும் விட ஏற்பாடு செய்தவர்.

இலங்கைத் தமிழர் துயர் துடைக்க இராமேஸ்வரத்திலிருந்து இலங்கை செல்ல முற்பட்ட படகில் ஏறிய போது குமரி அனந்தனும் பழ.நெடுமாறனும் கைது செய்யப்பட்டனர்.

காற்றைப் பயன்படுத்தியும், கடல் அலைகளைப் பயன்படுத்தியும் மின்சக்தி தயாரிக்க நாடாளுமன்றத்திலும் சட்டமன்றத்திலும் வலியுறுத்தியவர் (4.7.1980)- தொடரும்........


# S.பால்பாண்டியன் ஹார்டுவேர்ஸ்
# S.பால்பாண்டியன் டிப்போ



சிமெண்ட், செங்கல், ஜல்லி, கம்பி, பெயிண்ட் வகைகள், பி.வி.சி.பைப் வகைகள் கட்டபாக்கல், ஏஸிங் முதலியன மொத்தமாகவும் சில்லரையாகவும், தரமாகவும் கிடைக்கும்.



உரிமையாளர்: Lion S.பால்பாண்டியன்

20, புகழேந்தி தெரு, எம்.ஜி.ஆர்.நகர், சென்னை-78. போன்:24713885, 23716122.

# அருமை அண்ணாச்சி



கலைமாமணி டாக்டர் வி.ஜி.சந்தோசம் தலைவர் வி.ஜி.பி.குழுமம்.

**என் வாழ்வில் சில திருப்பங்கள்**

அன்புள்ள வசந்தனுக்கு......

பல சிரமங்களைத் தாண்டி வெற்றிப் படிகளில் கால் வைத்துச் சென்ற எங்களுக்குத் திடீரென்று ஏற்பட்ட சதி போன்றது தான் எங்கள் வாழ்வில் மீண்டும் ஏற்பட்ட அந்தச் சோதனை! அது என்ன தெரியுமா? குலுக்குச் சீட்டை நாங்கள் மிகவும் நல்ல முறையிலும், இலாபகரமாகவும் நடத்தி வந்தோம் அல்லவா? அந்தச் சமயத்தில் அரசாங்கம் அதற்கும் தடை விதித்தது விட்டது. காரணம், பல புதிய கம்பெனிகள் தோன்றி முறைகேடான காரியங்களைச் செய்ததால் தான். யாரோ சிலர் புரிந்த முறைகேடு அரசாங்கத்திற்குத் தெரிய வந்ததால் மொத்தமாகக் குலுக்குச் சீட்டு நடத்தும் முறைக்கே அரசாங்கம் தடை விதித்து விட்டது. நடத்தியவர்களின் பொருட்களையும் அரசாங்கம் எடுத்துக் கொண்டது. இப்போது எங்களுக்கு ஏற்பட்டது மிகப் பெரிய சோதனை என்று தான் கூற வேண்டும்.

எங்களை நம்பிப்பலர் பண முதலீடு செய்திருந்தார்கள். அவர்களுக்கெல்லாம் நாங்கள் பொருட்களை வாங்கித் தரவேண்டும். சிலர் எங்கள் மீதும் கூட சந்தேகப்பட்டுவிட்டார்கள். அவர்கள் சந்தேகங்களையெல்லாம் போக்கியாக வேண்டும். மிகவும் எச்சரிக்கையாகவும், பொறுப்பாகவும் நாங்கள் நடக்கவேண்டிய சமயம் அது. மனிதர்களைப் பற்றி புரிந்துகொள்ள இறைவன் கொடுத்த வாய்ப்பு அது என்று கூடக் கூறலாம்.

எங்களைப் பிறர் கேட்பதற்கு முன்பாக நாங்கள் எல்லோருக்கும் கடிதம் எழுதிப் பொருட்களைப் பெற்றுச் செல்லுமாறு கூறினோம். அப்போது சென்னை மாநகர போலீஸ் கமிஷனராக இருந்தவர் தி.எப்.ஏ.அருள் அவர்கள், தமிழ்நாடு அரசின் காவல் துறைத் தலைவராக பின்பு விளங்கிய அவரைப் பற்றி நீ அறிவாய் அல்லவா? கடமை உணர்வு மிக்க காவல்துறைத் தலைவர் அவர். அவருக்கும் நாங்கள் உடனேயே கடிதம் எழுதினோம். மற்றவர்களைப் போல நாங்களுமில்லை என்பதை எடுத்துக் காட்டுவதற்கான பல முயற்சிகளிலும் அப்போது நாங்கள் ஈடுபட்டோம்.



நானும் அருமை அண்ணாச்சியும் அப்போது வெளியில் கூடச் செல்வதில்லை. எந்த நேரத்தில் யார் எங்களைத் தேடி வந்தாலும் அவர்களுக்கு உரிய பதில் கூறியும், பொருள்களைக் கொடுத்தும் அனுப்புவோம். அதனால் பலருக்கும் எங்கள் மீது நம்பிக்கை ஏற்பட்டது. இரண்டு மாதங்களுக்குள் எல்லோரும் எங்களை நன்கு புரிந்து கொண்டுவிட்டார்கள். படிப் படியாக எல்லோருக்கும் சேர வேண்டிய பொருட்களை வாங்கிக் கொடுத்தோம். அரசாங்கமும் காவல் துறையும் எங்கள் நேர்மையைப் பாராட்டின. பொது மக்கள் மத்தியில் எங்கள் நம்பிக்கை மேலும் வளர்ந்தது. அப்படிப் பார்த்தால் அந்த சோதனையும் கூட எங்களுக்கு ஒருவகையில் உதவியாகத்தான் அமைந்தது அல்லவா?

குலுக்குச் சீட்டு தடை செய்யப்பட்டதும் அடுத்து என்ன தொழிலைத் தொடங்குவது என்று தீவிரமாக சிந்தித்தார் அருமை அண்ணாச்சி. அந்தச் சமயத்தில் அதிராம்பட்டணத்திலிருந்து தயாரித்து அனுப்பப்படும் சிற்பி சோபு என்ற சோப்புக் கம்பெனியின் ஏஜென்ட் பொறுப்பை நாங்கள் எடுத்தோம்....

- தொடரும்......


C.மதியழகன்

வாழ்க வளமுடன்

செல்:9789095625.

**ஸ்ரீ கணேஷ் பவன்**

SGB



எண்:6, முத்துலிங்க ரெட்டி தெரு, (எம்.ஆர்.தியேட்டர் பில்டிங்) மேற்கு தாம்பரம், சென்னை-45. போன்:M.சுரேஷ், செல்:9840945243.

எண்:1, வள்ளலார், தெரு, சேலையூர், கேம்ப்ரோடு, சென்னை-73.





**REVATHI LABEL PRINTERS**

**R.DHEVI 98414 41111, 99415 51111**

**Barcode Sticker, Multi Colour Sticker, Trolley Tags, Thermal Ribbons, Barcode Printers, Consumar Lables & Software Support.**

Revathi label printers, Taj Bhavan, H-3/340, TNHB A Road, Phase-3, Sholinganallur, Chennai-119. 9841441111.Emaill: dhevi_rlp@yahoo.co.in

# நாடார் முரசு பிறந்த கதை

என் தந்தைக்கு வடக்கன்குளத்து சுற்று வட்டாரத்தில் ஒரு மதிப்பும் மரியாதையும் உண்டு மிகவும் பிடிவாதக்காரர் கிராம முன்சீப் உத்யோகத்தில் இருந்ததால் பலருக்கும் உதவுவார்கள், கையூட்டு வாங்குவது போன்ற செயல்களில் ஈடுபடாமல் நேர்மையாக தன்வாழ்க்கையை நடத்தியவர் யாரிடமும் அதிகமாக எதிர்பாராமலேயே உதவிகள் செய்வார்கள் என் தந்தைக்கு வர்மானியமும் வைத்தியமும் நன்றாகவே தெரியும். அந்த காலத்தில் மருத்துவ வசதி, இல்லா காலத்தில் என் தந்தைதான் மருத்துவர். கால், கை, முறிவு காய்ச்சல் போன்ற எந்த வியாதியாக இருந்தாலும் மருத்துவம் இலவசமாகவே செய்வார்கள். ஓரிருநாள் தங்க வேண்டுமாயின் எங்கள் வீட்டிலேயே தங்கி வைத்தியம் பெறலாம் இப்பேர்பட்ட எல்லாவித வைத்தியமும் இலவசமாகவே செய்வார்கள். அத்தனை இளகிய மனம் உடையவர்கள் அவர்கள் வாழ்க்கையில் கண்டதெல்லாம் பல போராட்டங்கள் தான். ஆகவேதான் என் தந்தையை சுலபமாக ஏமாற்றி விடலாம் இத்தனைக்கும் எல்லோரும் என் தந்தையை சிறந்த அறிவாளி என்று புகழ்வார்கள் எல்லோருக்கும் நல்லவராகவே வாழ்ந்தார்கள். அவர்களது புகழ் இன்றளவும் வடக்கன்குளத்து ஊர் வட்டாரத்தில் பலரும் கூறுவார்கள். அப்போது எனது மூத்த சகோதரர் அமலதாஸ் விருதுநகர் கோவில்பட்டி, சாத்தூர், சிவகாசி வட்டாரத்தில் தீப்பெட்டி தொழில் சங்க அதிகாரியாக பணியாற்றி வந்தார்கள். அந்த காலத்தில் நாடார்கள் அதிகமாக படித்து உத்யோகத்தில் இருப்பவர்கள் மிகவும் குறைவு பெரிய செல்வந்தர்களெல்லாம் வியாபாரத்தில் கொடிகட்டி பறந்த காலம் அந்த சமயத்தில் என் சகோதரர் எம்.ஏ படித்துவிட்டு ஐ.ஏ.எஸ். படித்துக் கொண்டிருந்தார்கள். நல்ல உத்யோகமும் கூட ஆனால் என் தந்தைக்கு எந்த விதத்திலும் பொருளாதார உதவி செய்ய வில்லை. ஆகவே என் அம்மாவை சிறிது காலம் அண்ணனுக்கு சமையல் செய்து கொடுத்து உதவிக்கு சென்றார்கள். நாங்கள் சிறுபிள்ளைகள் அம்மாவை அனுப்பிவிட்டு தவித்துக் கொண்டிருந்தோம்.

என் தந்தை சிறு வயதிலிருந்தே சிலோனில் பலதரப்பட்ட சிறு சிறு வேலைகள் செய்து சொந்தமாக அச்சுத் தொழிலில் ஈடுபட்டு நிறைய சம்பாதித்து பாட்னரோடு பொறாமை காரணமாக பல பிரச்சனையில் கஷ்டப்பட்டு பிறந்த ஊரில் வாழ்க்கையை ஆரம்பித்து போராடி தனது வாரிசு தொழிலான முன்சீப் வேலையை போராடி பெற்று ஊரில் பிரபல செல்வந்தராகி வாழ்ந்த என் தந்தை 9-பிள்ளைகளை பெற்று பெரிய குடும்பஸ்தனாக வாழ்ந்தார் எத்தனை கஷ்டங்களையும் நஷ்டங்களையும் அனுபவித்தாலும் தன் பிள்ளைகளுக்கு முடிந்த அளவு கல்வியை கொடுத்து அந்த அந்த காலத்தில் அவர்களுக்கு திருமணத்தை முடித்து நல்ல நிலைக்கு உயர்த்தி வைத்தார்கள். ஆனாலும் அவர்களது இரக்க குணமும் பாச செயலும் என் தந்தைக்கு பல இழப்பீடுகளை கொடுத்தது.

நாடார் சமுதாயத்தில் அந்த காலத்தில் படித்தவர்கள் மிகவும் குறைவாகவே இருந்தனர். அதிலும் கத்தோலிக்க கிறிஸ்தவ நாடார்கள் படித்து நல்ல உத்யோகத்தில் இருந்தவர்கள் மிகவும் குறைவு அப்போது என் அண்ணன் நல்ல படிப்போடு உயர்ந்த அரசு பணியிலும் இருந்ததால் பல பணக்காரர்கள் பெண் கொடுக்க தயாராயிருந்தார்கள். பலதரப்பட்ட செல்வந்தர்களும் மிகவும் ஆர்வம் காட்டினார் என் தந்தை எத்தனை சோதனையில் உள் ஆனாலும் தனது பிள்ளைகளுக்கு செய்யவேண்டிய நல்ல காரியங்களை அந்த அந்த வயதில் சிறப்பாக செய்து தனது கடமையை உயர்வாகவே செய்தார்கள் அதே போல் எனது சகோதரனுக்கும் திருமணத்தை முடித்து விட தீர்மானித்தார்கள். எந்த வித சஞ்சலமுமின்றி வாழ்ந்த நாங்கள் 9பேரின் வாழ்க்கையிலும் எங்கள் அண்ணனின் திருமணம் சிறிது புயலை வீச ஆரம்பித்து விட்டது. அது எங்கள் குடும்பத்தில் நடந்த ஒரு வித்யாசமான சம்பவம் அது ஒரு பெரிய கதை. - தொடரும்.




**ஸ்ரீ சரவணா ஸ்டோர்ஸ்**

**சூப்பர் மார்க்கெட்**

**ஈகை வியாபாரிகள் நல சங்கம் வி.சரவணராஜ் தலைவர்**

**செல்9445171819, 044-22253484.**

2/33, அம்பாள் நகர் மெயின் ரோடு, ஈக்காட்டுத்தாங்கல், சென்னை-32.







**செல்:9444484977, 9962454977, 044-25980239.**

**ஸ்ரீ மகா கணபதி ஜோதிட நிலையம்**



**ஜோதிடர்.த.பெ.சுந்தர் நாடார்**

ப.எண்:8, பு.எண்:15, நல்லப்பவாத்தியார் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை-600 021.

**ஜாதகம் திருமண பொருத்தம் வாஸ்து பார்க்கப்படும்.**நேரம் காலை8.00மணி முதல் மதியம்2.00 மணி வரை

# ஸ்ரீ பாலாஜி
# நாடார் திருமண தகவல் மையம்



நாடார் சமுதாயத்தின் கைராசியான திருமண தகவல் மையம் எங்களிடம் குமரி மாவட்டம், நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நாடார்களுக்கும் (இந்து, கிறிஸ்தவர்) வட்டார பழக்கத்திற்கேற்ப வரன் பார்த்து தரப்படும்.



**ஒருமுறை பதிவு கட்டணம் ரூபாய்-3000 மட்டும்.**
**நகை ஷராக்கத்திற்கு கமிஷன் கிடையாது.**

**முகவரி: எண்:389,** T.H.Road, (மெட்ரோ பில்லர் எண்-182), **திருவொற்றியூர், சென்னை-19.**

**நிறுவனர்- R.சத்தியவான், இருளப்பபுரம், நாகர்கோவில்- 9444247847.**

**தொடர்பு எண்: 044-43508080, 7299989798, 8056299454, 7092890830.**

## R.C கிறிஸ்துவ நாடார் மணமகன் தேவை.

பெயர்:யாஸ்மீன் அனிதாமேரி, சொந்தஊர்:சொக்கன்குடியிருப்பு, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-31.1.1992, நிறம்-மாநிறம், உயரம்-162செ.மீ, படிப்பு-BBA., IT., Private Sector, மாதவருமானம்-46,000 பெறும் இந்த மணமகளுக்கு, டிகிரி படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9840241372, File No:RC-382-G.

## R.C கிறிஸ்துவ நாடார் மணமகன் தேவை.

பெயர்:ச.விஜயராணி, சொந்தஊர்:, இருப்பிடம்-புதுப்பேட்டை சென்னை-2, பிறந்ததேதி-17.7.2001, நிறம்-மாநிறம், உயரம்-5.5அடி, படிப்பு-M.Com., Accenture., மாதவருமானம்- பெறும் இந்த மணமகளுக்கு, நன்கு படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9940462104, 9940166048. File No:RC-384-G.

## R.C கிறிஸ்துவ நாடார் மணமகன் தேவை.

பெயர்:I.Sharon Benitta, சொந்தஊர்:நாகர்கோவில், இருப்பிடம்-நெற்குன்றம், சென்னை, பிறந்ததேதி-25.2.1990, நிறம்-மாநிறம், உயரம்- படிப்பு-M.E., மாதவருமானம்-80,000 பெறும் இந்த மணமகளுக்கு, B.E அல்லது M.E படித்த நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9444145692.

# நாடார் நவீன சுயம் வரம்

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:M.Niroshini, சொந்தஊர்:-மரந்தலை, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-12.11.1993, நிறம்-மாநிறம், உயரம்-5.5, ராசி-கன்னி, நட்சத்திரம்-சித்திரை, படிப்பு-DMLT Radiology., B.SC., LAB Technician., மாதவருமானம்-18,000 பெறும் இந்த மணமகளுக்கு சென்னையில் இருக்கும் சுயதொழில் அல்லது வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு: 8925511709, 9688655489, File No:M-486-G

| | | | |
|---|---|---|---|
| | | கேது | |
| | இராசி | | |
| சனி | | | லக் |
| | செவ் ராகு | சூரிசு புதவி | சந் மாந் |

| | | | |
|---|---|---|---|
| கேது | | சூரி | |
| | அம்சம் | | லக் சனி |
| மாந் | | | |
| வியா சுக் | புத | | சந் செரா |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:M.திவ்யா, சொந்தஊர்:குளத்தூர், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-4.4.1999, நிறம்-சிவப்பு, உயரம்-157செ.மீ, ராசி-துலாம், நட்சத்திரம்-விசாகம்-2ம் பாதம், உயரம்-157, நிறம்-சிவப்பு, படிப்பு-B.Com., (ISM)., Accountant , மாதவருமானம்-25,000 பெறும் இந்து மணமகளுக்கு, டிகிரி படித்து நல்ல வேலையிலுள்ள நல்ல குடும்பத்தை சேர்ந்த மணமகன் தேவை. தொடர்புக்கு: 8056064358, 8754585129 File No:M-490-G.

| | | | |
|---|---|---|---|
| சூரிகு லக் | சுக் சனி | | |
| புத | இராசி | | ராகு |
| கேது | | | மாந் |
| | | சந் செவ் | |

| | | | |
|---|---|---|---|
| லக் | | சந் | புத சனி |
| செவ் ராகு | அம்சம் | | |
| | | | கேது |
| சூரிகுரு மாந் | சுக் | | |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:M.ப்ரீத்தி, சொந்தஊர்:சுப்பராயபுரம், சாத்தான்குளம், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-பிள்ளையார்பாளையம், காஞ்சிபுரம், பிறந்ததேதி-24.5.1999, நேரம்-காலை-9.27, ராசி-சிம்மம், நட்சத்திரம்-உத்திரம் 1ம் பாதம், உயரம்-5.3, உயரம்-170செ.மீ, நிறம்-மாநிறம், படிப்பு-B.C.A.,MBA., படித்த இந்த மணமகளுக்கு, படித்த நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9942885997, 9952885997, File No:M--G.

| | | | |
|---|---|---|---|
| வியா | சனி | சூரி புத | லக் சுக் |
| | இராசி | | ராகு |
| கேது | | | சந் |
| | | | செவ் |

| | | | |
|---|---|---|---|
| சூரி வியா | சுக் | லக் | புத |
| | அம்சம் | | சனி கேது |
| ராகு | | | |
| சந் | | | செவ் |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:P.ரம்யா, சொந்தஊர்:கடலாடி, இராமநாதபுரம், இருப்பிடம்-சென்னை, பம்மல், பிறந்ததேதி-5.5.1997, நேரம்:காலை:10.20, வயது-26, உயரம்-5.6, நிறம்-மாநிறம், ராசி-மீனம், நட்சத்திரம்-ரேவதி, படிப்பு:B.Tech., MBA., இந்த மணமகளுக்கு, படித்து வேலை அல்லது படித்து சொந்ததொழில் செய்யும், சென்னையில் உள்ள வரன் மட்டும் அணுகவும் மணமகன் தேவை. தொடர்புக்கு:9444230273, 9003120114, File No:M-303-G

| | | | |
|---|---|---|---|
| சந்சனி பு கே | சூரி சுக் | | லக் |
| | இராசி | | |
| குரு | | | செவ் |
| | | | இராகு |

| | | | |
|---|---|---|---|
| சந் புத | | லக் | |
| | அம்சம் | | கேது |
| இராகு | | | குரு |
| சுக் | | குசெ சனி | |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:பா.ரேவதி, சொந்தஊர்-விளாத்திகுளம் வட்டம், ஜமீன் கரிசல்குளம், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-நெமிலிபட்டம், பனப்பாக்கம் இராணிப்பேட்டை மாவட்டம்-631052, நிறம்-சிவப்பு, பிறந்ததேதி-20.5.1997, உயரம்-5.5, ராசி-துலாம், நட்சத்திரம்-சுவாதி, படிப்பு-M.Sc., Bio Tech., Diploma in Montessori., இந்த மணமகளுக்கு, சைவ உணவு உள்ளவர், டிகிரி படித்து நல்ல வேலையில் உள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9943027898, 9787004133 File No:M-293-G.

| | | | |
|---|---|---|---|
| சனி கே | புத | சூரி சுக் | |
| | இராசி | | |
| குரு | | | செவ் மாந் |
| | | லக் சந் | ராகு |

| | | | |
|---|---|---|---|
| | | | சுக் |
| சூரி | அம்சம் | | மாந்தி கேது |
| சந்தி ராகு | | | புத |
| | சனி செவ் | லக் | குரு |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:G.ஸ்ரீதேவி, சொந்தஊர்:-சாமிநாதபுரம், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-நீலாங்கரை, சென்னை-115, பிறந்ததேதி-27.9.1997, வயது-27, நிறம்-சிவப்பு, உயரம்-, ராசி-கடகம், நட்சத்திரம்-ஆயில்யம், படிப்பு-B.Sc.,MBA., TCS., மாதவருமானம்-50,000 பெறும் இந்த மணமகளுக்கு B.E டிகிரி படித்த நல்ல குணமுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9789848811, 9941819855, File No:M-467-G.

| | | | |
|---|---|---|---|
| சனி | | | |
| லக் கேது | இராசி | | சந் |
| வியா | | | ராகு |
| | செவ் | சுக் | புதன் சூரி |

| | | | |
|---|---|---|---|
| | சூரி சுக் | கேது லக் | வியா |
| சந் புத | அம்சம் | | |
| | | | |
| | சனி ராகு | | செவ் |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:V.விமலா, சொந்தஊர்:வாகைவிளை, உடன்குடி, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-எம்.ஜி.ஆர்.நகர், சென்னை, பிறந்ததேதி-2.9.1990, வயது-31, நேரம்-11.22pm, ராசி-மகரம், நட்சத்திரம்-திருவோணம், உயரம்-5.2, படிப்பு-MBA., படித்த இந்த மணமகளுக்கு, நன்கு படித்து நல்லவேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு: 9444179963, 8124190743, File No:

| | | | |
|---|---|---|---|
| | | லக் செவ் | |
| | இராசி | | வி அகே |
| சந் ராகு | | | சூரி புத |
| சனி | | | |

| | | | |
|---|---|---|---|
| லக்செ சுக் | ராகு | புத | சந் |
| | அம்சம் | | |
| | | | சூரி |
| | | வியா கேது | சனி |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:ம.பிரியதர்சினி, சொந்தஊர்:வேம்பார், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, தாம்பரம், பிறந்ததேதி-26.10.1998, நிறம்-மாநிறம், உயரம்-5.4, ராசி-விருச்சிகம், நட்சத்திரம்-கேட்டை, படிப்பு-B.Com., Senior Quality Tester)., IT., -onprocess Technology. மாதவருமானம்-1,00,000 பெறும் இந்த மணமகளுக்கு, அன்பான படித்த நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. 8667359303., 8608232687, File No: M-176-G.

| | | | |
|---|---|---|---|
| சனி | | | |
| வியா கேது | இராசி | | |
| | | | செவ் ராகு |
| | சந் | சூரிபு சுக் | லக் |

| | | | |
|---|---|---|---|
| சந்சனி | | வியா | |
| கேது | அம்சம் | | புத |
| லக் | | | ராகு செவ் |
| சூரி | சுக் | | |

## இந்து நாடார் மணமகன் தேவை.

பெயர்:S.விஷ்ணுபிரியா, சொந்தஊர்:மேலஆழ்வார்தோப்பு, தூத்துக்குடி, இருப்பிடம்-சென்னை, மாதவரம், பிறந்ததேதி-27.3.1999, நிறம்-மாநிறம், உயரம்-162செ.மீ, ராசி-கடகம், நட்சத்திரம்-ஆயில்யம் 4ம் பாதம், படிப்பு-B.Sc., Mathemathics., CA., படித்த இந்த மணமகளுக்கு, நன்கு படித்த நல்ல குணமுள்ள மணமகன் தேவை. 9840278370, 9677102010. File No:M-478-G.

| | | | |
|---|---|---|---|
| வியா சூரி | சனி சுக் | | |
| புத | இராசி | | சந் ராகு |
| கேது | | | |
| | | செ | லக் |

| | | | |
|---|---|---|---|
| புத | சனி | லக் | |
| செவ் ராகு | அம்சம் | | |
| | | | சுக் கேது |
| சந் | வியா | சூரி | |

## இந்து நாடார் மணமகன் தேவை.

பெயர்:S.ஐஸ்வர்யா,சொந்தஊர்:பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம், இருப்பிடம்-நீதிபதிகள் குடியிருப்பு, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை, நிறம்-மாநிறம், உயரம்-5.3, எடை:57கிலோ, ராசி-விருச்சிகம், நட்சத்திரம்-கேட்டை, பிறந்ததேதி-16.4.1998, படிப்பு-B.E., ECE., Thangarajar College - madurai., Preparing for Civil Services., இந்த மணமகளுக்கு நன்கு படித்த, நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. 9443808324, 9486701789. File No:M-360-G.

| | | | |
|---|---|---|---|
| புத சனி | சூரி செவ் | | |
| சுக்குரு கேது | இராசி | | |
| | | | லக் ராகு |
| | சந் | | |

| | | | |
|---|---|---|---|
| | சூரி குரு | | செவ் |
| | அம்சம் | | லக் ராகு |
| சுக் சனிசந் கேது | | | |
| | | | புத |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:சிநேஹா, சொந்தஊர்:சாத்தூர், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-18.11.1991, வயது-32, ராசி-மீனம், நட்சத்திரம்-ரேவதி, நிறம்-கோதுமைநிறம், உயரம்-5.3, படிப்பு-B.Tech., (CSE)., வேலை-சாப்ட்வேர் என்ஜினியர், மாதவருமானம்-70,000/- பெறும் இந்த மணமகளுக்கு, நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9944410712, 9514952555, File No:M-370-G.

| | | | |
|---|---|---|---|
| சந் | | | கேது |
| | இராசி | | லக் |
| சனி | | | குரு |
| ராகு | சூரி புத | செவ் | சுக் |

| | | | |
|---|---|---|---|
| சனி கேது | | சுக் | செவ் |
| புத | அம்சம் | | சூரி |
| லக் சந் | | | |
| (மா) | | | குரு ராகு |

# இலவச திருமணத் தகவல்

தொடர்புக்கு: 30, தோடி தெரு, சைதாப்பேட்டை, சென்னை-15. போன்:23811087.

## மணப்பெண் பகுதி (பெண்) இந்திய நாடார் முரசு இலவச சேவை

இந்து நாடார் பகுதி

| எண் | ஊர் | வயது | கல்வித்தகுதி | தேவையான தகுதி | உயரம் | செல்நம்பர் | இராசி-நட்சத்திரம் | விவரம் | பெண் உரிமை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | காளம்கல்பா | 28 | B.E.,MBA., | நன்குபடித்துநல்லவேலை | 156 | 9600048577 | ரிஷபம்கிருத்திகை | M451 | நேரில் |
| 2. | ஏ-புதுப்பட்டி | 24 | M.B.A., | சொந்தொழில் | 5 | 9382238393 | தனுசு-உத்திராடம்1 | M452 | நேரில் |
| 3. | தூத்துக்குடி | 23 | B.Com.,MBA., | நன்குபடித்துநல்லவேலை | - | 9551519173 | கடகம்-பூசம் | M453 | நேரில் |
| 4 | விருதுநகர் | 40 | B.Com., | நல்லபடிப்புநல்லவேலை | - | 7604821179 | கும்பம்-பூரட்டாதி | M454 | 10பவுன் |
| 5 | சாத்தூர் | 27 | M.Sc., | நல்லவேலைக்குசெல்லும் | 5.3 | 9962917279 | பரணி-மேஷம் | M455 | நேரில் |
| 6 | திருநெல்வேலி | 25 | B.Com., Typist | நன்குபடித்துநல்லவேலை | 5.2 | 9489008776 | மிதுனம்-புனர்பூசம் | M456 | நேரில் |
| 7 | நாகலாபுரம்புதூர் | 26 | MBA., | படித்துநல்லகுணமுள்ள | 5.8 | 9092303910 | மேஷம்-பரணி | M457 | நேரில் |
| 8 | தூத்துக்குடி | 27 | B.E.,(CSE) HCL | மறுமணம்(அ)முதல்மணம் | 5.8 | 7010632963 | சிம்மம்-மகம் | M458 | மறுமணம் |
| 9 | வீரமாணிக்கம் | 27 | M.Com., | நல்லவேலைசொந்தவீடு | 5.5 | 9841668844 | தனுசு-மூலம் | M459 | நேரில் |
| 10 | தேனி | 29 | MBBS.,IHBAS | MBBS.,படித்தவராகவும் | 165 | 9952293566 | மகரம்-உத்திராடம் | M460 | நேரில் |
| 11 | சாத்தான்குளம் | 38 | DCE., | முதல்மணம்/மறுமணம் | 5.4 | 9791065417 | ரிஷபம்மிருகசீரிடம் | M461 | நேரில் |
| 12 | கரும்பனூர் | 24 | B.Sc.,B.Ed., | படித்தவரைகள்நல்லவேலை | - | 9841094241 | மிதுனம்திருவாதிரை | M462 | நேரில் |
| 13 | தண்டுபத்து | 24 | B.Sc., (Maths) | நன்குபடித்துவேலை | 5.9 | 9080219090 | மீனம்-உத்திரட்டாதி | M463 | நேரில் |
| 14 | திருத்தங்கல் | 27 | முதுகலைகணினி | நன்குபடித்துநல்லவேலை | - | 9842303426 | சிம்மம்-மகம் | M464 | மறுமணம் |
| 15 | கரசகுளம் | 27 | BCA., | டிகிரிபடித்துநல்லவேலை | 5.3 | 9840969014 | ரிஷபம்-கார்த்திகை | M465 | 35பவுன் |
| 16 | சாத்தான்குளம் | 29 | M.Sc., | அரசுபணிநல்லகுணம் | 5.7 | 7373842335 | கும்பம்-சதயம் | M466 | 35+5 |

## C.S.I.நாடார்

| எண் | ஊர் | வயது | கல்வித்தகுதி | தேவையான தகுதி | உயரம் | | செல்நம்பர் | விவரம் | பெண் உரிமை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | நாகர்கோவில் | 28 | M.Com., | நன்குபடித்துநல்லவேலை | 5.2 | சென்னை | 8056697306 | 471-G | நேரில் |
| 2 | புதுக்கோட்டை | 25 | M.C.A., | பட்டதாரி நல்லவேலை | 5.4 | சென்னை | 9840750769 | 472-G | நேரில் |
| 3 | நாகர்கோவில் | 29 | MBBS.,MD., | நன்குபடித்துநல்லவேலை | 165 | சென்னை | 9444339144 | 473-G | நேரில் |
| 4 | உடையார்குளம் | 28 | B.E.,ECE., | Govt.job நல்லவேலை | 167 | சென்னை | 9444210559 | 468-G | நேரில் |

## R.C.நாடார்

| எண் | ஊர் | வயது | கல்வித்தகுதி | தேவையான தகுதி | உயரம் | | செல்நம்பர் | விவரம் | பெண் உரிமை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தூத்துக்குடி | 27 | M.A.,engli.,B.ed | நன்குபடித்துநல்லவேலை | 5.3 | சென்னை | 9578396593 | 380-G | நேரில் |
| 2 | கன்னியாகுமரி | 26 | B.E., CSE., | ஐ.டி/சாப்ட்வேர்நல்லவேலை | 5.3 | சென்னை | 9370884061 | 381-G | 20பவுன் |
| 3 | செக்கன்தூரிருப்பு | 32 | BBA., | டிகிரிபடித்தவேலையுள்ள | 5.3 | சென்னை | 9840241372 | 383G | நேரில் |
| 4 | நாகர்கோவில் | 34 | M.E., | B.E., M.E.,goodjob | - | சென்னை | 9444145692 | 383G | நேரில் |


நாடார் வரன்கள் வேண்டுமா?

இமயம்

நாடார் திருமண தகவல் மையம்

என்றென்றும் நமது பாரம்பரியத்தின் அடையாளம்....

ஒரு முறை பதிவுக் கட்டணம் மட்டுமே!

நகை, ரொக்கத்திற்கு கமிஷன் கிடையாது.

72995 56591 72995 56592

## இந்து நாடார் மணமகன் தேவை.

பெயர்:P.நர்மதா, சொந்தஊர்:தூத்துக்குடி மாவட்டம், வள்ளிவிளை, இருப்பிடம்- சென்னை-90, நிறம்-மாநிறம், உயரம்-5.3, ராசி-விருச்சிகம், நட்சத்திரம்-அனுஷம், பிறந்ததேதி-20.4.1992, படிப்பு-B.E., படித்த இந்த மணமகளுக்கு, படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு: 8056136469, 7395946331, File No:M-159-G

| | | | |
|---|---|---|---|
| புத சுக் | சூரி லக் | | கேது |
| செவ் | இராசி | | |
| சனி | | | வியா மாந் |
| ராகு | சந் | | |

| | | | |
|---|---|---|---|
| | | சூரிசெ லக் | |
| | அம்சம் | | வியா ராகு |
| சுக் கேது | | | சனி |
| | | சந் | புத மாந் |

## இந்து நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்-காரிக்கோவில், குண்டல், திசையன்விளை அருகில், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-30.9.1995, வயது-27, நிறம்-மாநிறம், ராசி-விருச்சிகம், நட்சத்திரம்-கேட்டை, உயரம்-5.3, படிப்பு-M.E. வேலை-Assistant Professor., மாதவருமானம்-30,000 பெறும் இந்த மணமகளுக்கு நல்ல குடும்பம், நன்கு படித்த நல்ல வேலையிலுள்ள தூத்துக்குடி,திருச்செந்தூர், திருநெல்வேலி மணமகன் தேவை. 9445307067, 9445426581, 6380306138, File No:M-154-G

| | | | |
|---|---|---|---|
| | கேது | லக் | |
| சனி | இராசி | | |
| | | | |
| | சந் வியா | செவ் ராகு | குபு சுக் |

| | | | |
|---|---|---|---|
| லக் சந் | குசெ கேது | | |
| சனி | அம்சம் | | சுக் |
| புத | | | |
| வியா | | ராகு | |

## இந்து நாடார் மணமகன் தேவை.

பெயர்:தீபலட்சுமி, சொந்தஊர்:வள்ளிவிளை, திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-6.3.2000, நிறம்-மாநிறம், உயரம்-5.4, ராசி-கும்பம், நட்சத்திரம்-பூரட்டாதி 2பாதம், படிப்பு-M.Com., படித்த மாதவருமானம்-25,000 பெறும் இந்த மணமகளுக்கு, படித்த வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9444430146, 9962532515, File No:M-361G

| | | | |
|---|---|---|---|
| செவ் | குரு சனி | | |
| சூரிபுத சந் | இராசி | | ராகு |
| சுக் கேது | | | |
| | | | லக் |

| | | | |
|---|---|---|---|
| லக் | சூரி | சந் | |
| கேது செவ் | அம்சம் | | குரு சனி |
| | | | ராகு சுக் |
| | | புத | |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:ஆர்.முத்துப்பிரியங்கா (எ) கவிதா, சொந்தஊர்:நாலுமாவடி, இருப்பிடம்-சென்னை-83, பிறந்ததேதி-18.2.1997, வயது-27, ராசி-மிதுனம், நட்சத்திரம்-திருவாதிரை, நிறம்-மாநிறம், உயரம்-5.1, படிப்பு-B.E., வேலை-சாப்ட்வேர் என்ஜினியர், மாதவருமானம்-40,000/- பெறும் இந்த மணமகளுக்கு, நன்கு படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:எஸ்.ரவீந்திரன், 7,21வது

| | | | |
|---|---|---|---|
| சனி கே | | | சந் |
| லக் சூரி | இராசி | | |
| புவியா சுக் | | | |
| | | | செவ் ராகு |

| | | | |
|---|---|---|---|
| சந் செவ் | வியா | | |
| ராகு | அம்சம் | | சுக் |
| லக் | | | சனி கேது |
| சூரி | | | புத |

அவென்யூ, அசோக்நகர், சென்னை-83, 9444973233, File No:

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:R.மலர்மணி, சொந்தஊர்:உமரிக்காடு, தூத்துக்குடி, இருப்பிடம்-செங்கல்பட்டு, புதியபேருந்துநிலையம், பிறந்ததேதி-28.2.1997, ராசி-துலாம், நட்சத்திரம்-சுவாதி, உயரம்-5.3, படிப்பு-B.E.,MBA., HR., மாதவருமானம்-45,000 பெறும் இந்த மணமகளுக்கு, பி.இ படித்து நல்ல செய்யும் மணமகன் தேவை. தொடர்புக்கு:9443279830, 9943070463, File No:M-495-G

| | | | |
|---|---|---|---|
| சனி கேது | | | |
| புதசுக் சூரி | இராசி | | |
| வியா லக் | | | |
| | | சந் | செவ் ராகு |

| | | | |
|---|---|---|---|
| சந்லக் புத | | வியா | |
| ராகு குசெவ் | அம்சம் | | |
| | | | கேது சனி |
| | சுக் | | |

## R.C கிறிஸ்துவ நாடார் மணமகன் தேவை.

பெயர்:R.Aji Sanofer, சொந்தஊர்:கருகல்பக்கம், கன்னியாகுமரி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, ஜல்லடன்பேட்டை, பிறந்ததேதி-14.12.1997, நிறம்-மாநிறம் உயரம்-158செ.மீ, படிப்பு-B.Pharmacy., வேலை- Senior Medical Coder at Atos Company, ATOS Chennai, Sipcot IT park, Siruseri, Chennai., மாதவருமானம்-50,000 பெறும் இந்த மணமகளுக்கு, படித்து நல்ல வேலையிலுள்ள கன்னியாகுமரி மாவட்டம் அணுகவும், 9551363739, 9444161351, RC-385-G.

## R.C கிறிஸ்துவ நாடார் மணமகன் தேவை.

பெயர்:A.அனுகிரகா, சொந்தஊர்:காவல்கிணறு, திருநெல்வேலி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, அரும்பாக்கம், பிறந்ததேதி-6.10.1991, வயது-32, நிறம்-மாநிறம் உயரம்-5.4, படிப்பு-M.E., வேலை-Work From home., இந்த மணமகளுக்கு சென்னையில் செட்டில் ஆன சொந்தவீடு உள்ள நன்கு படித்து நல்ல வேலையிலுள்ள மணகன் தேவை. தொடர்புக்கு:9444841371.

## இந்து நாடார் மணமகன் தேவை.

பெயர்:P.பிரியங்கா, சொந்தஊர்:ஆறுமுகநேரி, இருப்பிடம்-சென்னை-77, அம்பத்தூர், நிறம்-மாநிறம், உயரம்-5.6, ராசி-மகரம், நட்சத்திரம்-உத்திராடம் 4ம் பாதம், பிறந்ததேதி-6.2.1997, படிப்பு-M.Tech., தனியார், மாதவருமானம்-20,000 பெறும் இந்த மணமகளுக்கு, படித்து பணியிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:7401433240, 7603962155, File No:M-482-G.

| | | | |
|---|---|---|---|
| கேது சனி | | | |
| | இராசி | | |
| சுபுத ஞவி | | | லக் |
| மா | | | செவ் ராகு |

| | | | |
|---|---|---|---|
| செபுகு சுக்சந் | வியா | லக் மாந் | |
| ராகு | அம்சம் | | சனி |
| | | | சூரி கேது |
| | | | |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:T.பொன்மாலா, சொந்தஊர்:மேலப்புதுக்குடி, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-31.10.1997, நிறம்-புதுநிறம், உயரம்-5.6, ராசி-துலாம், நட்சத்திரம்-சித்திரை, படிப்பு-B.E., (CSE)., MBA., Senior System Engineer., Infosys., இந்த மணமகளுக்கு, படித்து நல்ல வேலையிலுள்ள தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் அணுகவும். 9003207002, 9444013984, e-mail:postbox33736@gmail.com., File No:M-328-G.

| | | | |
|---|---|---|---|
| சனி | | | |
| கேது | இராசி | | லக் |
| வியா | | | ராகு |
| செவ் | சுக் புத | சூரி சந் | |

| | | | |
|---|---|---|---|
| சுக் | கேது செவ் | | |
| | அம்சம் | | புத வியா |
| லக் சூரி | | | |
| | சந் | சனி ராகு | |



ஜாய் பல்கலைக்கழகத்தில் விஜிபி உலகத் தமிழ்ச் சங்கத்தின் 164ஆவது சிலை திறப்பு வடக்கன்குளம், ஜாய் பல்கலைக்கழக வளாகத்தில் விஜிபி உலகத் தமிழ்ச் சங்கத்தின் 164ஆவது திருவள்ளுவர் சிலையினை விஜிபி குழுமங்களின் தலைவரும், விஜிபி உலகத் தமிழ்ச் சங்கத்தின் நிறுவனருமான டாக்டர் விஜி.சந்தோசம் அவர்களது தலைமையில் தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் மாண்புமிகு மு.அப்பாவு அவர்கள் திறந்து வைத்தார். இவ்விழாவில், ஜாய் பல்கலைக்கழக வேந்தர் டாக்டர் எஸ்.ஏ.ஜாய்ராஜா, விஜிபி உலகத் தமிழ்ச் சங்கத்தின் இணைச்செயலாளர் திரு.விஜிபி ராஜாதாஸ் மற்றும் பல்வேறு தமிழறிஞர்கள் கலந்து கொண்டனர்.

பல்லாவரம் நாடார் சங்க மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில்
பெருந்தலைவர் கு.காமராஜர் மற்றும் நிறுவனர் உ.T.சித்தம்பல
பாண்டியனார் **ஆகியோரின் சிலைகள் திறப்பு விழா**



சமத்துவ மக்கள் கழகம்

பல்லாவரம் நாடார் சங்க மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் பெருந்தலைவர் காமராஜர் மற்றும் நிறுவனர் சித்தம்பல பாண்டியன் அவர்களின் சிலை திறப்பு விழா இன்று நாடார் சங்க மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சங்கத் தலைவர் காளிதாஸ் அவர்கள் தலைமையில், பொதுச் செயலாளர் தனம் முன்னிலையில், பள்ளி முதல்வர் வள்ளியம்மை வரவேற்புரை ஆற்றினார். சித்தம்பலபாண்டியன் அவர்கள் சிலையை மாண்புமிகு சிறுகுறுமற்றும் நடுத்தர தொழில்துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்கள் திறந்து வைத்தார். பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் சிலையை தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் எர்ணாவூர் நாராயணன் அவர்கள் திறந்து வைத்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். இந்நிகழ்ச்சியில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி, துணைமேயர் காமராஜ், திமுக தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைசெயலாளர் அண்ணாநகர் கார்த்திக் மோகன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள். இந்நிகழ்ச்சியில் கண்ணன், தங்கமுத்து, வேலுமயில், பழனி முருகன், ஸ்ரீராம் மனோகரன், ராஜேஷ் தாஸ், சதீஷ், ராஜகுமார், ராஜேந்திரன் மற்றும் சங்க நிர்வாகிகள், சமத்துவ மக்கள் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.


சிவபிரகாஷ் நாடார் போன்:22201348,
9884301348, 9444273385



K.M.DIESEL &
ELECTRICAL CENTRE

All Types of CRDI, EDC, Pumps, Nozzle Service & Auto Electrical, Turbo Service Bosch: Battery, D Filter, Oil, Heater Plug, Electrial Spares available.



20, 2nd Street, Kannigapuram, Velachery Main Road, Guindy, Chennai-32. E-mail:kmd0ecenre @gmail.com

ஸ்ரீ கருமாரியம்மன் துணை

செல்:80157 47069, 9444273385.

சிவமணி ஆட்டோபார்ஸ்
SIVAMANI AUTO PARTS

Specialist in:Tata, Maruthi, Mahindra, Toyota, Force

No:20/1, 2nd Street, Kannaigapuram, Velachery Main Road, Guindy, Chennai-32.





செல்: 98405 57997, 98415 49955

V.S.குமார் ரியல் எஸ்டேட்

வீடு, மனை, வாங்க விற்க அணுகவும், வீடு, ஆபீஸ், கடை, குடோன் கம்பெனி வாடகைக்கு அணுகவும்.
டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை, வளசரவாக்கம், சென்னை-87

விருதுநகர் இந்து நாடார் வியாபாரிகள் சங்கம்
திருமண தகவல் மையம்

**இந்து நாடார்களுக்கு மட்டும்.**(மணமகன்/மணமகள்) செயல்படும் திருமண தகவல் மையம் பதிவு கட்டணம் 200 மட்டும். வேறு எந்தவித கட்டணமும் கிடையாது. மணமகன்/மணமகள் தேவைப்படுவோர் பதிவு செய்து பயன்பெறும்படி கேட்டுக்கொள்கிறேன். (வசதி குறைவானவர்களுக்கு பதிவுகட்டணம் கிடையாது)

மா.பட்டாணி நாடார் நினைவு டிரஸ்ட், 156,பெரியபஜார், விருதுநகர். செல்:9486555373, 8610212126.

# கள்ளக்குறிச்சியும் கள்ள சாராயமும்.

D.M.ஜேம்ஸ்மார்ட்டின், சந்தா எண்: சாமுவேல் மருத்துவமனை, 9488129050, திங்கள் நகர், நெய்யூர்-629802, கன்னியாகுமரி மாவட்டம்

1).20.6.2024 வியாழன் காலைக் கதிரவனைக் கண்ட கள்ளக்குறிச்சி மக்கள் துயரத்தில் உறைந்தனர். கருணாபுரம் கிராமத்தில் கள்ளச் சாராயம் குடித்து பெண்கள் உட்பட பலர் பலியானதும், பலர் கண் பார்வை இழந்து, நூற்றுக்கும் மேற்பட்டோர்களின் உடல்நிலை பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக அரசு மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் வந்த துயரச் செய்தி தான் அது. எங்கு பார்த்தாலும் மரண ஓலம். ஒரே வீதியில் 10 பேர் மரணம். ஒரே வீட்டில் கணவனும், மனைவியும் இறப்பு. 3 குழந்தைகள் அனாதையாகி நடுத்தெருவில், கொடுமையிலும் கொடுமை. ரத்தம் கொதிக்கிறது. நெஞ்சம் பதறுகிறது. கருணாபுரமே கண்ணீரில் மூழ்கியது.

2).கருணாபுரம் மக்கள் வறுமையில் வாடுபவர்கள். அன்றாடம் கூலிகள். வேலை முடிந்ததும் கள்ளச்சாராயத்தை ஆணும் பெண்ணும் குடித்து மகிழ்வது இவர்களின் அன்றாட வாடிக்கை. ஏனெனில் முந்திய காலங்களில் சினிமா பாமர மக்களின் பொழுது போக்காக இருந்தது. அது இன்றைய நவயுக நாகரீக உலகில் பாமரன் முதல் படித்தவர் வரை மது, மாதுவாக மாறிவிட்டது. இந்த குடியால் வருமானத்தில் பெரும் பகுதியை மட்டுமல்ல, உடல் சுகத்தையும் இழக்கிறார்கள் மக்கள். அன்றைய கள்ளச் சாராயத்தில் மெத்தனால் என்ற கொடிய விஷம் போதைக்காக கலக்கப்பட்டிருந்ததால் தான் குடித்த சிறிது நேரத்தில் 100க்கும் மேற்பட்டோர் உடல் நிலை பாதிக்கப்பட்டு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்று வரை ஆணும் பெண்ணுமாக பலியானவர்கள் 60க்கு மேல் என்று கூறப்படுகிறது.

3).காவல் நிலையம் அருகே தான் இந்த கள்ளச்சாராய வியாபாரம் நடந்து வந்ததாக சொல்லப்படுவது தான் வேதனைக்குரிய விஷயம். எனவே இந்த கள்ளச் சாராய வியாபாரம் காவல் துறையினருக்குத் தெரியாமல் நடப்பதற்கு வாய்ப்பில்லை என்பது மக்களின் கருத்து. சாதாரண காவலர் முதல் ஆய்வாளர் வரை அவரவர் தகுதிக்கேற்ப மாமூல் என்று பேச்சு. கம்யூனிஸ்ட் கட்சி பிரமுகர் திரு.முத்தரசன் கூட இதை உறுதி செய்திருப்பதாக செய்தி. மாமூல் வாங்கும் அதிகாரிகள் மட்டுமல்ல, மாமூல் கொடுக்கும் மக்களும், இதனை கண்டும் காணாமல் இருக்கும் அரசியல் வாதிகளுமே இதற்கு காரணம் தான்.

4.இந்த கள்ளச்சாராய சாவுகள் நடந்திருக்காவிட்டால் இந்த கள்ளச்சாராய வியாபாரம் வெளிச்சத்துக்கு வந்திருக்குமா? இந்த அவலச் சாவுகளுக்கு காரணம் யார்? யார் காரணம்? இம்மாதிரி ஈன தொழிலில் மக்கள் ஈடுபடுவதற்கு காரணம் என்ன? வேலையின்மை, அதனால் வறுமை, பசி, பட்டினி, கால்வயிற்று கஞ்சிக்கு கூட மக்கள் வழியின்றி தானே இந்த மாதிரி கேவலமான குற்றச் செயலில் இறங்குகிறார்கள். பசிவந்தால் 10ஆம் பறந்து போகும் என்பதுபோல், வயிற்று பசிக்காகத்தான் இந்த மாதிரி குற்றவியல் செயலில் மக்கள் இறங்குகிறார்கள் என்பதை மத்தியில், மாநிலத்தில் ஆளும் ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ளவேண்டும். வேலைவாய்ப்பினை வழங்கி வருமானத்தையும் உருவாக்கினால் இம்மாதிரி கேவலமான குற்றவியல் தொழிலில் இறங்குவார்களா? இதனை செய்வது யார்? மத்திய மாநில ஆட்சியாளர்கள் தானே! பல தொழிற்சாலைகளை உருவாக்கி, வேலை வாய்ப்பினைக் கொடுத்து வறுமையை போக்குவது மத்திய மாநில அரசுகளின் கடமையாகும். லட்சகணக்கில், வருடகணக்காக, மத்திய மாநில அரசு பணியிடங்கள் காலிய இருக்கிறது. அந்த இடங்களை அவ்வப்போது நிரப்பினால் மக்களின் வேலையின்மை குறையுமல்லவா? இதை மத்திய மாநில அரசு தானே அவ்வப்போது செய்யவேண்டும்.

5. அன்று கால்வயிற்று கஞ்சிக்கு வழியின்றி பள்ளிக்குச் செல்லாமல், வயலில் கூலி வேலை செய்கிறவர்களை கண்டார், அன்றைய முதல்வர் பெருந்தலைவர் காமராஜர். அவர்களுக்கு இலவச மதிய உணவு கொடுத்து, பள்ளிக்கு வரச் செய்து, இலவச கல்வி, சீருடை வழங்கி கல்வி கண்திறந்தார் இந்தபடிக்காத மேதை. ஆதரவற்ற முதியோருக்கு வாழ்நாள் ஓய்வூதியம் வழங்கி காப்பாற்றினார் இந்த ஏழை பங்காளன். மாநிலம் முழுவதும் மதுவிலக்கை அமுல் செய்து, தமிழகத்தையே அமைதி பூங்காவாக மாற்றினார் இந்த கிங்மேக்கர். மதுவிலக்கை ரத்து செய்து, 20 வருடமாக குடியை மறந்திருந்த மக்களை திரும்பவும் குடிமகன்களாக மாற்றியது யார்? குடி உயிரைக் கொல்லும் என்ற வாசகம் ஒருபுறம். குடியையே வியாபாரம் செய்வது மறுபுறம்.

6.ஹிட்லர் ஜெர்மனியின் அதிபராக பொறுப்பேற்ற போது ஜெர்மனியின் பொருளாதாரம் படுபாதாளத்தில் கிடந்தது. 10லட்சம் பேர் வேலையின்றி வறுமையில் வாடினர். அவர் அதிபராக பொறுப்பேற்று ஆறே ஆண்டுகளில் ஜெர்மனியின் பொருளாதாரத்தை வானளாவில் உயர்த்தினார். இத்தனைக்கும் அவர் பொருளாதாரம் படிக்காதவர். 60 லட்சம் பேருக்கும் வேலை கொடுத்து அவர்களின் வறுமையை போக்கினார். நமது பாரதபிரதமர் மோடி அவர்கள் 2014தேர்தலின் போது இனிப்பான 4 வாக்குறுதிகளை தந்தார். 1.வெளிநாட்டு கறுப்பு பணம் உள்ளே வரும். 2.உள்நாட்டு கறுப்பு பணம் வெளியாகும். 3.மேக்இன் இந்தியா, 4.தூய்மை இந்தியா என்று 10வருடமாக பிரதமராக இருந்தும் எந்த வாக்குறுதிகளையும் முழுமையாக நிறைவேற்றினாரா? பாபர் மசூதியை ராமர் கோவிலாக மாற்றினார். அதுவும் ஒழுக ஆரம்பித்துவிட்டது. 3வது முறையாகவும் பிரதமராகிவிட்டார். இதுதான் இன்றைய இந்திய ஜனநாயகம். தேசபிதா மகாத்மாவை சுட்டுக் கொன்ற இயக்கத்தை சேர்ந்தவர்கள், முன்னாள் பிரதமர் இந்திராகாந்தியின் அவசர நிலை பிரகடனத்தை எப்படி குறை கூற முடியும்?

7.மக்களை நல் வழிப்படுத்த நீண்ட நாட்களாகும். தீய வழியில் செல்ல சில நாட்களே போதும். நல்லொழுக்கம் தொட்டிலிலேயே தொடங்க வேண்டும். பெற்றோரே குடிகாரர்களாக இருந்தால் பிள்ளைகள் எப்படி இருப்பார்கள்? எனவே மக்கள் தான் மனம் மாற்றம் அடைய வேண்டும். தனி மனிதன் திருந்தினால்தான் சமுதாயமே மாறும். போதைக்கு முடிவு அழிவு. உழைப்புக்கு ஊதியம் உயர்வு. உழைக்க வாய்ப்பு கொடுக்கவேண்டும். அதற்கான வாய்ப்பை உருவாக்கி கொடுப்பது மத்திய மாநில அரசுகளே!

8.பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் உதவுவது போல் இன்று கோடிகளில் புரளும் தொழிலதிபர்களும், நடிகர்களும், மருத்துவர்களும், வழக்கறிஞர்களும், நாதியற்று நடுத்தெருவில் கேட்பாரற்று நிற்கும் இந்த அனாதை குழந்தைகளையும், ஆதரவற்ற குடும்பங்களையும் தத்தெடுத்து ஏன் உதவக் கூடாது.

# உழைப்பின் சரித்திரம்

## டைரி உலக சக்கரவர்த்தி ஈகிள்.பிரதாப்சிங் அவர்கள்

ஆசிரியர் நாடார் முரசு

குழந்தை பிரதாப்சிங் மிகவும் சுறுசுறுப்பாக வளர்ந்து வந்தார். அந்த தெருவில் உள்ள அனைவரும் விரும்பி பார்க்கும் அளவிற்கு வளர்ந்தது குழந்தை. குழந்தைக்கு எந்த வித குறைவும் இன்றி அவர்கள் அன்னை அவரை பார்த்து கொண்டார்கள். அவர்களது வீடு வடக்கன்குளத்தில் முக்கிய தெருவான நடு தெரு. அல்லது சன்னதி தெருவில் அமைந்திருந்தது. இந்த தெருவில் தான் முக்கியஸ்தர்கள் குடியிருந்த தெருவாகும் அதுவும் கிராம முன்சிப் குடும்பத்து உறுப்பினர்களில் ஒருவரான மரியந்தோணி நாடாரின் வீடு மிகவும் அமைப்பாக அமைந்திருந்தது. முகப்பு நடு தெருவில் ஆரம்பித்து கிழக்கு பக்கம் ஒரு சந்து உள்ளது. ஆக வீட்டை சுற்றி மக்கள் நடமாடும் தெருக்கள் இருக்கும் வீடு ஒரு பங்களா வடிவத்தில் அந்த காலத்தில் பெரிய மச்சி வீடு என்பார்களே அந்த அமைப்பில் இருக்கும். அந்த வீடு மரியந்தோணி நாடாரின் அன்னையும், பாட்டியும் ஆன பாட்டி பராமரிப்பில் இருந்தது. அந்த பாட்டி தான் குடும்பத்தில் முக்கியமானவர்கள் தொப்பு துறவுகள் அத்தனையையும் பார்த்துக் கொண்டார்கள். பிரதாப்சிங் பிறந்த வீடு அந்த காலத்து பெரிய வீடுகளில் ஒன்று மச்சி வீடு என்று சொல்வார்கள் அந்த வீடு ஒரு தோட்டத்தில் அமைந்திருப்பது போல் இருக்கும் பின்புறத்தை களம் என்பார்கள் அங்கே தென்னை மரம், கொய்யா மரம், சீத்தா மரம் போன்ற எல்லாவித மரங்களும் வளர்ந்து நிற்கும் ஒரு மாட்டு தொழுவம் இருந்தது. அதில் எப்படியும் இரண்டு மாடு பசும்மாடு பால் கொடுத்துக்கொண்டிருக்கும் மேலும் அந்த வட்டாரத்தில் அவர்கள் வீட்டில்தான் வீட்டோடு கிணறு இருக்கும் அதுவும் நல்ல தண்ணீர் கொடுக்கும் கிணறு அது. ஆகவே பலரும் தண்ணீர் எடுக்க அங்கு வருவார்கள். யார் வந்தாலும் மனம் கோணாது அத்தனை பேரையும் உபசரிப்பதில் பிரதாப் சிங் தாய் சளைக்கமாட்டார்கள். பிரதாப் சிங் அவர்களின் தாயின் தங்கை ஒருவர் உண்டு அவர்களுக்கு திருமணம் ஆகவில்லை அவர்கள் மிகவும் கடவுள் பக்தியுள்ளவர் தனது சகோதரியோடு இருந்து அவர்களுக்கு உதவியாக காலமெல்லாம் இருந்தார்கள். வெண்மையான உடை அணிந்து கன்னியஸ்திரி போலவே காட்சி அளிப்பார்கள். அனைத்தும் அந்தபாட்டியின் பராமரிப்பிலேயே இருந்தது . பிரதாப் சிங் அவர்களின் தாத்தா மதுரேந்திர நாடார் கிராம முன்சிப் குடும்பத்தில் உதித்தவர் ஆகவே மிகவும் அதிகார தோரணையிலேயே இருப்பார்கள். அவர் ஒரு மளிகைகடை வைத்து நடத்தி வந்தார். அவர்களது மகன் தான் மரியந்தோணி நாடார் அந்த பாட்டிக்கு மூன்று பிள்ளைகள் மூத்த மகன் மைக்கின் நாடார் டாக்ராக சிலோனில் பணிபுரிந்து பிற்காலத்தில் வடலையில் குடியேறினார் அவர் பெரிய செல்வந்தராவார் மேலும். இரண்டாவது ஒரு பெண் மகள் இருந்தார். அவர் பெயர் ராயம்மாள் எல்லோரும் ராயம்மா அத்தை என்று அழைப்பார்கள் அவர்களுக்கு இரண்டு பிள்ளைகள் மகன் பெயர் செசிலி மகன் பெயர் சொார் மூன்றாவது மகன் தான் மரியந்தோணி நாடார் அந்த பாட்டி முன்சிப் குடும்பத்தை சேர்ந்தவர் நிறைய சொத்து சுகம் இருந்தது. குடும்பத்தை மிகவும் சாமர்த்தியமாக நடத்தி வந்தார்கள்.

பிரதாப் சிங்கை உறவினர்கள் அனைவரும் அன்பாகவும், பாசமாகவும் வளர்த்தார்கள். வருமானம் இல்லாமல் செல்லமாகவே வளர்ந்தார் பிரதாப் சிங்கின் மூத்த சகோதரி அன்னப்பழம் சிறு வயதிலேயே தம்பியை தம்பி தம்பி என்று மிகவும் நேசித்து வந்தார்.

அந்த சுற்றுவட்டாரத்தில் வடக்கன்குளம் ஒரு முன்னேறிய ஊராக இருந்தது. கல்வி அறிவை புகட்டும் பள்ளிகளை கிறிஸ்தவ மதத்தினர் கட்டி பலருக்கும் படிப்பை சொல்லி கொடுத்துவந்தார்கள். அப்படி கோவிலுக்கு மேற்கே தூய தெரசாள் நடு நிலை பள்ளி இருக்கிறது அங்கே 8ஆம் வகுப்பு வரை படிக்கலாம் அதன் பின் தூய தெரசாள் உயர்நிலைப் பள்ளி வடக்கன்குளத்தின் மேற்கு பகுதியில் அமைந்துள்ளது. அங்கே எஸ்எஸ்.எல்சி வரை படிக்கலாம் அதுபோல் பெண்களுக்கு கன்னியாஸ்திரிகளின் பராமரிப்பில் கோவிலை சார்ந்து அமைந்துள்ளது அங்கு பெண்கள் மட்டும் படிக்கலாம் மேலும் தூய தெரசாள் மேல்நிலை பள்ளியிலும். பெண்கள் பள்ளியிலும் தங்கி படிப்பதற்கு போர்டிங் அதாவது தங்கும் விடுதிகள் வசதியிருந்தது அந்த காலத்தில் கல்விக்கு சிறந்து விளங்கியது வடக்கன்குளம் தான்

M.S.சேகர் நாடார் & சன்ஸ்
ஸ்ரீ குற்றால மாடசாமி துணை
ஸ்ரீ வெங்கடாஜலபதி துணை
செல்:98944 83509
97896 86474
94435 74102.
ஸ்ரீ ராஜ்குமார்
பாத்திர மாளிகை & பர்னிச்சர்ஸ்
GST No:33AAZFR4404Q1ZG
மயிலாடுதுறை ரோடு, வைத்தீஸ்வரன்கோயில் - 609 117.

# பாஞ்சாலி

எஸ்.விஜயராஜ்



**58.முதல் மரியாதை....**

அந்த மன்னர்களும் இப்போது இந்திர பிரஸ்தத்தை வணங்கினார்கள்... அதற்கு கப்பம் கட்டவும் ஒப்புக்கொண்டுவிட்டார்கள்..

இவையெல்லாம் போக அர்ச்சுனன் பெற்று வந்த வெற்றிகள் வேறு..

அவர்களும் கூட யுதிஷ்டிரனை பேரரசனாக ஏற்றுக் கொள்ள சம்மதித்துவிட்டனர்.. ஆகவே..

ராஜசூய யாகத்தை நடத்த உங்களுக்கு எந்த தடையுமே இல்லை என்றான் கிருஷ்ணன்..

உடனே நல்லதொரு நாள் குறிக்கப்பட்டது... கேட்டை நட்சத்திரமும்... மூல நட்சத்திரமும் கூடிய ஒரு அமாவாசை தினத்தில் ... யாகம் நடந்தது..

யாகத்துக்கு பீஷ்மர் வந்திருந்தார்... திருதராஷ்டிரனும் விதுரனும் வந்திருந்தார்கள்...

துரியோதனன் வந்திருந்தான்... கூடவே கர்ணனும் சகுனியும் வந்திருந்தார்கள்

ஆச்சாரியார்கள் வரிசையில் துரோணரும்... கிருபரும்... அசுவத்தாமனும் வந்திருந்தார்கள்...

கிருஷ்ணன் அவர்களோடேயே இருந்தான்... சிசுபாலனும் வந்திருந்தான்.

யாகம் நடந்து முடிந்ததுமே.... முதல் மரியாதை யாருக்கு என்ற எதிர்பார்ப்பு மன்னர்களிடையே எழுந்தது.. ஆனால்... யுதிஷ்டிரனோ.. கொஞ்சம்கூட குழப்பம் அடையவில்லை... கிருஷ்ணனுக்கே அதை அர்ப்பணித்தான்...

அது அங்கிருந்த மன்னர்கள் பலருக்கு பிடிக்கவில்லை. தகுதி நிறைந்த பலரை யுதிஷ்டிரன் அவமதிப்படுத்திவிட்டதாக அவர்கள் நினைத்தார்கள்..

பீஷ்மர் அங்கேதான் இருந்தார் குலத்தில் அவர் பெரியவர்... திருதராஷ்டிரனும் அங்கேதான் இருந்தான். அவர்தான் இந்திர பிரஸ்தத்தை யுதிஷ்டிரனுக்கு வழங்கியவர்...

துரோணரும் கிருபரும் கூட அங்கேதான் இருந்தார்கள்.. பாண்டவர்களுக்கு அவர்கள் யுத்தக்கலையை பயிற்று வித்தவர்கள்...

இவர்களைத் தவிர வேத வியாசரும்.. நாரதருங்கூட அங்கேதான் இருந்தார்கள்... நீதி தவறாத விதுரனும் அங்கே தான் இருந்தான்..

ஆக.. இத்தனை தகுதியுள்ள பலபேர் அங்கே இருக்கும் கூட....

ஒரு மன்னன் என்ற அந்தஸ்து கூட இல்லாத கிருஷ்ணனுக்கு... அவன் முதல் மரியாதையை தந்தது... நிறைய பேருக்கு பிடிக்கவில்லை..

சிசுபாலனோ.. அதை வார்த்தைகளாக கொட்டி தீர்த்தான்.

ஏய் யுதிஷ்டிரா... ஒரு மாட்டு இடையனை தேடி பிடித்து மரியாதை செய்திருக்கிறாயே... நீயெல்லாம் ஒரு மன்னனா என்றான் அவன்.

உனக்கு அவனது மரியாதையை பற்றியும் தெரியவில்லை. மற்றவர்களின் மரியாதையை பற்றியும் தெரியவில்லை. ஆகவே நீ ஒரு மடையன் என்றான்.

அதை கேட்க சகிக்கவில்லை சகாதேவனுக்கு... எனவே கோபத்துடன் எழுந்தான். தனது வலது காலை தூக்கினான். ஆவேசமாக சவால் விட்டான்.

யாமன்னர் யுதிஷ்டிரனின் இந்த முதல்மரியாதை முடிவை ஏற்க மறுப்பவர்கள் யாராக இருந்தாலும் சரி...



அவர்கள் மீது என் குதிகாலை வைக்கிறேன்.. அவர்களுக்கு சவால் விடுகிறேன். அவர்களை பகிரங்கமாகவும் யுத்தத்துக்கு அழைக்கிறேன் என்றான் அவன்

உடனே அந்த நிமிடமே வாடா என்றான், சிசுபாலன்... வருவான் என்று எதிர்பார்த்து.. அரங்கத்தை விட்டு வெளியேயும் பாய்ந்து சென்றான்..

ஆனால்.. அங்கே நடந்ததோ வேறு .... அவனது அழைப்பை சகாதேவன் ஏற்பதற்கு முன்... கிருஷ்ணனே அதை ஏற்றான்..

பெரியயுத்தம் ஒன்றும் அங்கே நடைபெறவில்லை... பலத்தோடு பலமும் மோதவில்லை... உடலோடு உடலும் மோதவில்லை...

சமமான ஆயுத பலம் இல்லாமல்தான் நின்றான் சிசுபாலன்..

ஆனால் கிருஷ்ணனோ... யுத்த விதிகளை மீறினான்... சக்ராயுதத்தை ஏவினான்... சிசுபாலனின் தலையை சீவினான். அவனை சாகடித்துவிட்டான்...

தட்டிக் கேட்க வேண்டிய ஒரு பெரிய குற்றமாகத் தான்.. கிருஷ்ணனின் அந்த செயலை அனைவருமே நினைத்தார்கள்.

ஆனால் கிருஷ்ணனை எதிர்க்க முடியுமா? எதிர்த்தால் பாண்டவர்களையும் சேர்த்து அல்லவா எதிர்க்க வேண்டியது வரும்.

எனவே அனைவரும் பயந்தார்கள்... அடக்கத்துடன் அமர்ந்துவிட்டார்கள்.

மங்களகரமாக தொடங்கிய அந்த விழா.. இறுதியில் அமங்களத்தோடு முடிந்தது...

எல்லாம் அறிந்தவன்தான் கிருஷ்ணன்... ஆனாலும் அதைப்பற்றி ஏனோ அவன் சிந்திக்கவில்லை.

இந்த முதல் மரியாதையை பொறுத்தவரையில் சிசுபாலனின் கருத்துதான்.. அங்கே வந்திருந்த அநேகரின் கருத்தாக இருந்தது.

என்றாலும்... இன்னொன்றையும் நாம் சிந்தித்து பார்க்க வேண்டும்

திரௌபதியின் சுயம்வரத்துக்கு பிறகு.. பாண்டவர்களின் உண்மையான நிலை என்ன.

பாண்டவர்கள் துருபதனின் மாப்பிள்ளைகள்... அவ்வளவு தானே...

இதைத்தவிர... அரச அந்தஸ்துகள் ஏதாவது அவர்களுக்கு இருந்ததா... இல்லையே...

ஆனால் அதை பெற்றுத்தர... அங்கிருந்தே காயை நகர்த்தியவன் யார்.. இந்த கிருஷ்ணன் தானே..

அதுமட்டுமல்ல.. பாண்டவர்களுக்கு ஆதரவாக அங்கே யாதவர்கள் இருக்கிறார்கள்.. துருபதன் இருக்கிறான்.

இன்னும் அவன் இருக்கிறான்... இவன் இருக்கிறான்... இப்படியெல்லாம் அஸ்தினாபுரத்துக்கு பூச்சாண்டி காட்டியதும் யார்... இந்த கிருஷ்ணன் தானே...

ஆக மொத்தத்தில்... திருதராஷ்டிரனை பணிய வைத்தவனே அவன்தான்... இந்திர பிரஸ்தத்தை பிடுங்கி எடுத்தவனும் அவன்தான்.

காடாய் கிடந்த காண்டவ பிரஸ்தத்தை... இந்திர பிரஸ்தமாக உருமாற்றிக் கொடுத்தவனும் அவன்தான்.

பேருக்கு ஒரு மன்னனாக இருந்த யுதிஷ்டிரனை... இன்று மாமன்னனாக்கி.. ஒரு ராஜ சூய யாகத்தை நடத்திக் காட்டியவனும் கூட அந்த கிருஷ்ணன் தான்...

இவைகளை எல்லாம் நினைத்துப் பார்க்கும் போது பாண்டவர்கள் கிருஷ்ணனுக்கு முதல் மரியாதையை செய்தது... சரியென்றே தோன்றுகிறது. - தொடரும்.........


# சித்ரா வாட்ச் கம்பெனி





CHITHRA WATCH COMPANY

SALES & SERVICE TITAN, SONATA, AJANTA

Expert repairers of world Famous Rolex, Rado, Omega

Seiko, Citizen and other Indian Watches, Til

Shanthi Complex, No:63/26, Ranganathan Street, (Very Near Mambalam Railway Station (opp.to Rameswaram Road), T.Nagar, Chennai-17, Ph:24348524.

கலைமாமணி விருது பெற்ற திரு தாமரை செந்தூர்பாண்டி எழுதும் சமூக தொடர்கதை

# நிலவுக்குத் தென்றல் பகையானால்!

கலைமாமணி தாமரைசெந்தூர்பாண்டி, செல்:8838477377



வீட்டிற்குள் வரும்போது அனிதா ஆவலுடன் வரவேற்றாள்.

"அனிதா..." மனமும் முகமும் மகிழ அனிதாவின் கையைப் பற்றியபடி உள்ளே சென்றாள் அனிதா.

அக்கா...!

"என்ன அனிதா?"

"நான் ஊருக்கு போகட்டுமா?"

"திக்"கென்றாகிவிட்டது. சாவித்திரிக்கு! அவளை அதிர்ச்சியுடன் கண்கள் அகலப் பார்த்தாள் சாவித்திரி.

"என்ன கேட்டாய்... என்ன கேட்டாய்?"

நான் ஊருக்குப் போகட்டுமா?"

"ஏன்?

"ஏனோ? போகலாம் போல் தோன்றுகிறது..."

சரியோ" சொல்லிவிட்டு மௌனமாகிப் போனாள் சாவித்திரி.

காபி கலந்து கொண்டு வந்தாள் அனிதா. டீப்பாயில் வைக்கச் சொல்லிவிட்டுக் குளியலறைக்குப் போய் கை, கால், முகம் கழுவினாள். முகத்தைப் பூத்துவாலையில் அழுந்தத் துடைத்தபடி ஹாலுக்குள் வந்தாள்.

காபி எடுத்துப் பருகினாள்.

அனிதா..."

"என்ன அக்கா?"

"நீ என்னை அக்கா என்று அழைக்கச் சொன்னதால் ஏதாவது அந்நியமாய் நினைக்கத் தோன்றுகிறதா?"

"முன்பு அப்படித் தோன்றவில்லை..."

இப்போது...?"

"அண்ணி என்று வாய் நிறைய அழைத்த காலங்கள் நெஞ்சில் வந்து நின்று உறுத்துகின்றன."

"உன் அண்ணன் நினைவு...?"

"சத்தியமாய் இல்லை! எனக்குக் கல்யாணமாகி அவனைப்போல் ஒருவன் கணவனாய் வந்திருந்தால் விஷம் வைத்துக் கொன்றிருப்பேன்!"

"அனிதா..........!

"ஆமாம் அக்கா........! அவன் என் அண்ணன் என்று நினைப்பதே எனக்கு அவமானம்!" "இப்பொழுது சொல்... உனக்கு என்னை எப்படி அழைக்கத் தோன்றுகிறது? அண்ணி என்று தான்

"சரி அப்படியே இனி கூப்பிடலாம்!"

"நிஜம்தானா அண்ணி?

"அதுதான் நிஜமாக்கிவிட்டாயே! கேள்வி வேறா?." சிரித்தாள் அனிதாவும்தான்.

"அனிதா..."

"ம்ம்ம்..."

"எப்படி உன்மனம் அண்ணி மீது கிடந்து அடிக்கிறது?"

"அண்ணி எங்கள் குடும்பத்து முன்னோடி! பந்தம்! அந்தப் பாவி இறந்திருந்தால் கூட அண்ணிதானே எங்கள் இல்லத் தலைவி? அந்த பந்தம் எங்களுக்கு..... எங்களுக்கே எங்களுக்கே வேண்டுமல்லவா?"

"அனிதா.........உன் அண்ணன் உன்னைப் பொறுத்தமட்டில் இறந்தது இறந்ததுதானா..அல்லது எப்போதாவது உயிர்த்து நிற்க வாய்ப்பிருக்கிறதா?"

இல்லை எப்போதும் இல்லை அந்த அசிங்கம் செத்தாகிவிட்டது. எங்களுக்குள் அதை நாங்கள் புதைத்தாகிவிட்டது.

"அனிதா.!" அவளின் வலது கையைத் தன் இரு கரங்களுக்குள்ளும் அடக்கி அழுத்திக் கொண்ட சாவித்திரிக்குள் ஒரு பிரசவம் நடந்து, தொட்டிலிட்டு தாலாட்டி,.... பள்ளிக்கனுப்பு குமரிப் பருவத்தில் நிறுத்தி...

அனிதாவைப் பார்த்தாள்!

கூர்ந்து பார்த்தாள்!

"ஏனண்ணி என்னை இப்படிப் பார்க்கிறீர்கள்?"

"நீ என் பெண்! நான் மனதிற்குள்.. கடந்து போன சில கணங்களுக்குள் பெற்றெடுத்து வளர்த்து... ஆளாக்கிவிட்ட பெண்!" கண்களில் உணர்ச்சித் தாண்டவம் பொலிவுறத் தெரிந்தது. மௌனமாய்நின்றாள் அனிதா.

தன் அறைக்குள் போனாள் சாவித்திரி. அலுவலகத்திலிருந்து வரும்போது வாங்கி வைத்திருந்த பார்சலைப் பிரித்தாள். சந்தன மாலை ஊஞ்சலாடியது. அதன் நுனி மையத்தில் எம்.டிவந்தமர்ந்தது போல் ஒரு பிரமை!

சரி நீங்கள் மகா... மகா... உன்னதமானவர்!" மனதிற்குள் பேசினாள். மாலையை பயபக்தியுடன் தன் பீரோவில் பத்திரப்படுத்தினாள்.

ஆடை களைந்து, மாற்றுடையில் வெளிப்பட்டாள்.

"அண்ணி..."

"என்னம்மா?"

"அல்வா கிளறி வைத்திருக்கிறேன் தரட்டுமா?"

"அடடே...ஏன்?

"நீங்கள் டீச்சரம்மாவான முதல் நாளல்லவா இன்று?"

"ஓ...! குட்! இப்பொழுது சாப்பிடக்கூடாது! ஒரு பார்சல் கட்டி எடுத்து வை..."

"ஏன்?"

"சஸ்பென்ஸ்!"

"உன் சேலையை மாற்றி நல்ல ஒரு புடவை கட்டு

"ஏன்?"

"சஸ்பென்ஸ்!"

கட்டி, முகம் திருத்தி வந்தாள். "இப்பொழுது சொல்.. ! நீ ஊருக்குத்தான் போக வேண்டுமா?"

"மாட்டேன்! போகமாட்டேன்கு"

"தெரியும்! வா!" உள்ளறைக்குப்போய் சந்தன மாலையை எடுத்தாள். அல்வா பார்சலுடன் அனிதாவையும் அழைத்தபடி வெளியேறிக் கதவைப் பூட்டினாள்.

30.எங்கு போகிறோம் என்று சொல்லாமலேயே தான் ஆசையாய் கிளறி வைத்த அல்வாவை அண்ணியும் சாப்பிடாமல், என்னையும் சாப்பிடச் சொல்லாமல் பார்சல் கட்டச் சொல்லி, கையில் விலை உயர்ந்த சந்தன மாலையையும் வைத்துக்

கொண்டு எங்குதான் அழைத்துச் செல்கிறாள்?

அண்ணி என்று சொல்வதே பிடிக்கிறது என்று சொன்னதனால்...

அல்லது ஊருக்குப் போகிறேன் என்று சொன்னதை மனதில் வைத்துக்கொண்டு என்னை ரயிலடிக்கோ, பேருந்து நிலையத்திற்கோ அழைத்துப்போய் நிறுத்தி "இந்தா அல்வா! பிடி மாலையை!" என சொல்லி என் கழுத்தில் போட்டு என் கழுத்தைப் பிடித்து ஊருக்குத் தள்ளப் பேகிறாளா?

டாக்ஸியில் போய்க் கொண்டிருக்கும்போது அனிதாவின் மனம் குழம்பியிருந்தது. டாக்ஸி ஒரு பெரிய பங்களாவின் முன் வந்து நின்றபோது தான் அனிதாவிற்கு அண்ணி தன்னை ஊருக்கு அனுப்புவதற்கு இந்த ஏற்பாடு செய்யவில்லை என்று தெரிந்தது.

டாக்ஸியை விட்டு கீழிறங்கியதும் டாக்ஸியை அனுப்பிவிட்டு ஏற்கனவே தான் வாங்கி வைத்திருந்த முகவரியை சரிபார்த்தாள்.

சரியாகவே இருந்தது.

பங்களாவின் காம்பவுண்ட் கேட்டைத் திறந்து கொண்டு முன் வாயிலருகே வந்து அழைப்பு மணி பொத்தானை அழுத்தினாள்.

ஒரு நிமிடம் காத்திருந்த பிறகு கதவு திறந்தது.

எதிரே எம்.டி.ஆச்சர்யத்துடன் சாவித்திரியையும், அனிதாவையும் பார்த்தார்.

"ஹேய்..! மிஸஸ் சாவித்திரி....? நீங்களா....? என் கண்களை என்னாலேயே நம்பமுடியவில்லையே? எப்படி என் வீட்டைக் கண்டுபிடித்து எப்படி என்னைத் தேட....,? கண்களை அகல விரித்தபடி சிரித்த முகமாய் நின்றார் எம்.டி.

"உள்ளே வரலாமா சார்...? சாவித்திரி தயங்கியபடியே கேட்டாள்..

"வித் க்ரேட் ப்ளஷர்...! வாருங்கள் .... வாருங்கள்...!" அடிட்டிக் கொள்ளாமல், உதடுகள் அதிகம் விரிவைல் வாய் திறந்து அழைத்தார் எம்.டி.

உள்ளே வந்தார்கள்.

வரவேற்பு அறை எளிமையாய். ஆனால் சுத்தமாய்... சுற்றிலும் ஏழெட்டு சோபாக்கள்... நடுவில் கண்ணாடி பதித்த ஒரு பெரிய மேடை... கீழே சிவப்புக் கம்பள விரிப்பு...

"உட்காருங்கள் மிஸஸ் சாவித்திரி" சொல்லியபடி அருகே வந்த எம்.டி.முன் நின்று சந்தன மாலையை பிரித்தெடுத்தாள்.

"ஹேய்..! என்ன இது..-? வியப்புடன் கேட்டார்.

"இந்த சந்தன மாலையைத் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவேண்டும்!" நடுங்கும் கரங்களால் அவர் முன் நீட்டினாள்.

"தாங்க்யூ... தாங்க்யூ!" வாங்கிக் கொண்டு அதை தன் கழுத்தில் மகிழ்வோடு போட்டுக் கொண்டார்.

"அண்ணி இது...?' பார்சலை நீட்டினாள் அனிதா.

அதை எப்படி அவ்வளவு வசதியான மனிதருக்கு தருவது என தயங்கினாள்.

"என்ன அது...?" எம்.டி.

"அது வந்து.... அது..." சாவித்திரிக்குள் வார்த்தைகள் அடைபட்டன.

"சொல்லுங்கள். ஏனம்மா..இது கூட எனக்காக கொண்டு வந்ததுதானோ?" அனிதாவைப் பார்த்து கேட்டார்.

"ஆமாம்..." அனிதா..

"என்ன அது?" எம்.டி.

"அல்வா...!" அல்வாவா...? வீட்டில் கிளறியதா...?"

"ஆமாம்! முதல்நாள் வேலையில் சேர்ந்த மகிழ்ச்சியில் கிளறியிருக்கிறாள். இதைப் பார்த்ததும் உங்களுக்குத் தரவேண்டும் போலிருந்தது..."சாவித்திரி.

பின் என்ன தயக்கம்? தாருங்கள்!

இல்ல, வேண்டாம்"

"ஏன்? உங்களுக்கு போய் இதை தருவதா...? நீங்கள் இதைச் சாப்பிடமாட்டீர்கள்! அடடே... நான் தினம் தினம் சாப்பிடுவதைப் பார்த்தால் இப்படிச் சொல்லமாட்டீர்கள் சாவித்திரி. அல்வா சாப்பிட்டு எவ்வளவு நாட்களாகிவிட்டன தெரியுமா? இப்படிக் கொடுங்கள்.. "கை நீட்டினார்.

சார் உங்கள் கிச்சன் வரை நான் போய் வரலாமா?"

ஏன்?

போய் வரலாமா?"

"ஷ்யூர்... ஷ்யூர்!" கிச்சனைக் காட்டினார். நீளமான அறைகளைத் தொடாமல் சற்றே தள்ளியிருந்த சமையற்கட்டிற்குள் போனாள். ஒரு சுத்தமான தட்டைத் தேடும்போதுதான் அங்கே ஒரு வேலைக்காரனோ, வேலைக்காரியோ இல்லை என்பதும், ஒரு ஆண் மட்டுமே புழங்கும் இடம் போலவும் தெரிந்தது. தட்டை எடுத்துக் கொண்டு வந்தாள். எம்.டி வரவேற்பறையிலேயே உட்கார்ந்திருந்தார்! அனிதாவை கட்டாயப்படுத்தி எதிர் வரிசையில் அமர வைத்திருந்தார்.

தட்டுடன் வந்து, பார்சலைப் பிரித்து எம்.டியிடம் நீட்டினாள். - தொடரும்........

நாடார் திருமணச் சேவையில் 19 ஆம் ஆண்டில் கைராசியான
நாடார் விவாகம் திருமணத் தகவலகம்

36, காந்தித்தெரு, பூவரசூர், ஆறுமுகனேரி-628 202
செல்:9176051116, 9360539833, 04639-282222, 04639 296108.
nadar vivaham matrimony/ www.nadarvivaham.in/
புரோக்கர் கமிசன் இல்லை. காலை:9:30 -12.30 மாலை 5.00 -6.00 ஞாயிறு விடுமுறை.
இணையதளத்தில் பதிவுக்கட்டணம் இலவசம்.
தென்றல் திருமணத் தகவலகம்
பதிவுக் கட்டணம்:ரூ.3000 /சேவை கட்டணம் உண்டு.
முனைவர் த.த.தவசிமுத்து M.A., Phd.,

# வெற்றிப்படிக்கட்டு

வசந்த் & கோ H.வசந்தகுமார் M.A.,
Ex.MP (Member of Parliament)

**89.சட்டம் சமமானால் ஜனநாயகம்!!**



நேர்மை, நியாயம், நீதிவழுவாமை, ஒரு மனிதனின் அந்தஸ்தை உயர்த்தும். நீதி தவறக்கூடாது என்று எல்லா வேதங்களும் சொல்கின்றன. நடுநிலை தவறாது, நேர்மையைக் கடைப்பிடித்து வாழ்பவனின் வாழ்வு குன்றின் மேலிட்ட விளக்குப் போல் ஒளிவீசும். புகழ் சேர்க்கும்.

அரபு நாட்டில் அந்த நாட்டின் இரண்டாவது ஜனாதிபதி என்கிற பெருமைக்குரியவர் உமர். இவரை நீதிக்கு ஓர் உமர் என்று பாராட்டுவார்கள். மகாத்மாகாந்தி கூட உமரின் வாழ்க்கை வரலாற்றைப் படித்துவிட்டு, இந்தியாவிலும் உமர் ஆட்சி போன்று அமைய வேண்டும் என்று ஆசைப்பட்டார். தற்பொழுது தமிழ்நாட்டில் காமராஜர் ஆட்சி திரும்ப வரவேண்டும் என்று எதிர்பார்க்கிறோம் அல்லவா? அதுமாதிரி மகாத்மா காந்தி போன்ற உலகத் தலைவர்களைப் போற்றும் உத்தமர் உமர். நீதி வழுவாது உமர் ஆட்சி செய்து கொண்டிருந்த பொழுது அவர் நீதியைச் சோதிக்கும் வகையில் ஒரு சம்பவம் நடந்தது.



அரபு நாட்டில் மது அருந்துவதைச் சட்டப்படிக்குற்றம் என்று சட்டம் கொண்டு வந்தார்.

சட்டத்தை மீறி மது அருந்துபவர்களுக்கு எண்பது சவுக்கடித் தண்டனை என்று சட்டம் கொண்டுவந்தார். கலீபா உமரின் நற்பெயரைக் கெடுக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் யூதர் ஒருவர் கலீபா உமரின் மகன் "அபுஷஹீம்மா" என்பவரை விருந்துக்கு அழைத்துச் சென்று மது அருந்த வைத்துவிட்டார். அத்துடன் இல்லாமல் அந்தச் செய்தியை உமர் அவர்களின் காதுக்கு எட்ட வைத்துவிட்டார்.

கலீபாவின் மகன் என்று விசாரணை அதிகாரி இரக்கம் காட்டிவிடக் கூடாது என்று உமர் தம் புதல்வரைத் தாமே நேரில் அழைத்து விசாரித்தார். அபூஷஹீம்மா குற்றத்தை ஒப்புக் கொண்டு யூதர்கள் தன்னை ஏமாற்றி மது அருந்த வைத்த விபரத்தைக் கூறினார்.

இருந்தாலும் நீதிக்கு முன் மகன் குற்றவாளி என்பதை உமர் உறுதி செய்தார். தாமே தம் மகனுக்குத் தண்டனை கொடுக்க முன் வந்தார். எண்பது கசையடிகள் தண்டனை விதிக்கப்பட்டு தந்தையின் கையாலேயே மகன் கசையடி பெற்றார். உமரும் மகனைச் சாட்டையால் விளாசினார். அறுபத்து இரண்டாவது கசையடி விழுந்த போது கலீபா உமரின் மகன் உயிர் பிரிந்தது. இந்தச் சோதனையில் நீதி வழுவாமல் நடக்க மனஉறுதியையும், வலிமையையும் தந்த இறைவனுக்கு உமர் நன்றி செலுத்தினார். இது நடந்தது கடந்த நூற்றாண்டில் தான் தன்னுடைய மகன் பசுவின் கன்றின் மீது தேரை செலுத்திய குற்றத்திற்காகத் தன் மகனையே தேர்க்காலில் பலியிட்டு நீதியை நிலைநாட்டிய மனுநீதிச் சோழனை ஞாபகப்படுத்துகிறது. உமரின் நீதிவழுவாத நல்லாட்சி இப்படி நியாயம், நேர்மைக்காகப் போராடி நடுநிலை தவறாத சரித்திரப் புருஷர்கள் எல்லாம் நமக்கு முன்னுதாரணமாகத் திகழ்கிறார்கள்.

இப்படிப்பட்டக் குறிக்கோளுடன் செயல்படுபவர்கள் தங்கள் முயற்சிகளில் நடுநிலை தவறாமல் செயல்பட்டால் நிச்சயம் வெற்றி பெறுவார்கள்.



## வடவை மரியன்னையின் ஆகஸ்ட் திருவிழா கொண்டாட்டம்!

எழுத்தாக்கம்- திருமதி.லீலாஸ்டீபன், மும்பை-78, செல்:022-40142398



விழாக்கள் மனிதர்களின் வாழ்வில் முக்கிய பங்கு வகிக்கின்றன. அந்த வகையில் என் ஊர்த்திருவிழாவும் எம்மை மகிழச் செய்கின்றது. நெல்லை மாவட்டத்தின் தென் பகுதியில் அமைந்துள்ளது தான் வடக்கன்குளம் என்னும் வளமிக்க ஊர். இவ்வூரின் நடுவே அமைந்துள்ளது தான் திருக்குடும்பத் தேவாலயம். இக்கோவிலில் அன்னை மரியாள் அருள் பாலிக்கின்றாள். இவ்வூர் சின்ன ரோமாபுரி என்று சிறப்பிக்கப்படுவதுடன் பசிலிக்கா என்ற பெருமையையும் பெற்றுள்ளது. இக் கோவிலின் விண்ணைமேவும் இரு கோபுரங்கள் வியக்கத்தக்கவை. கோவிலின் சொரூபங்கள் சிறப்பானவை. தூண்களே இல்லாத இக்கோவிலின் சுவர்களிலும் , விதானங்களிலும் வரையப்பட்டுள்ள வண்ணச் சித்திரங்கள் காலத்தால் அழியாதவை வியப்பானவை.

கோவில் வளாகத்திலுள்ள உயரமான கொடிமரம் சிறப்பு வாய்ந்தது. மேலும் அருட்தந்தையர்களுக்கான பங்களா, புனித தேவசகாயத்தின் சிற்றாலயம், தேரப் பிறை திருக்குடும்ப நிலைப்பள்ளி, செபி. தியான மண்டபம் இவை அமைந்துள்ளன. இவ்வூர் மக்கள் செல்வந்தர்களாகவும், தொழிலதிபர்களாகவும், பிறருக்கு உதவும் நன்மனம் கொண்ட வள்ளல்களாகவும் கல்வியறிவுடையவர்களாகவும் விளங்குகின்றனர்.

இத்தனை சிறப்புமிக்க இவ்வூரில் ஆண்டுதோறும் ஆகஸ்ட் மாதம் 6ம் தேதி முதல் 15ஆம் தேதி வரைத் திருவிழா மிக ஆடம்பரமாகவும், பக்தியாகவும் கொண்டாடப்படும். முதல் நாள் மாலை 6மணியளவில் கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகும். வெளியிடங்களில் வாழும் மண்ணின் மைந்தர்கள் குடும்பத்துடன் திருவிழாவில் பங்கு பெற வருகை தந்து விடுவார்கள். கொடியேற்றுகையில் பங்கு மக்களுடன் வளாகம் களைகட்டும். ஊர்ப் பெரியவர்களுடன் அருட்தந்தையரின் ஆசிரியுடன் திருக்கொடி ஏற்றப்படும். கைத்தட்டல், ஆரவாரத்துடன் கொடி மரத்தின் உச்சியில் பட்டொளி வீசிப் பறக்கும்.

இந்த பத்து நாட்களும் அதிகாலைத் திருப்பலிகள், அதைத் தொடர்ந்து விதவிதமான விளையாட்டுப் போட்டிகள், நண்பகல் ஜெபமாலை, மாலையில் நற்கருணை ஆசிரும் மறையுரையும் நடைபெறும். ஒவ்வொருநாள் இரவும் பாட்டுக் கச்சேரி, பட்டிமன்றம்,நாடகம், சிறுவர்களின் நடனம் போன்ற கலைநிகழ்ச்சிகள் மக்களை மகிழ்விக்கும். பத்து நாட்களும் கோவிலுக்கு காலை, மாலை வரும் ஊர்ப்பெண்கள் பலவண்ணப் பட்டாடை, பொன்நகைகள் அணிந்து புன்னகையுடன் வருவது கண்கொள்ளாக் காட்சியாகும். இளம் பெண்கள், இளைஞர்கள், சிறுவர்கள் ஆடம்பர ஆடை அணிந்து அசத்துவார்கள். ஒவ்வொரு ஊர் சார்பிலும், சபை சார்பிலும் ஒவ்வொரு நாளைக்கொண்டாடுவார்கள். அந்த வரிசையில் எட்டாம் திருநாள் பம்பாய்த்தினமாகக் கொண்டாடப்படுகிறது. அன்றுதான் சிறுவர்களின் புதுநன்மை தினமாகும். காலை திருப்பலியும் தொடர்ந்து விளையாட்டுப்போட்டியும் நடைபெறும். மதியம் மாதா மண்டபத்தில் விருந்துண்டு மகிழ்வார்கள். தொடர்ந்து ஏழைகளுக்கு ஆடை, தையல்எந்திரம் மருந்துகள் போன்ற உதவிகளைச் செய்வார்கள். மாலை புதுநன்மை சிறுவர்களின் ஊர்வலம் நடைபெறும். அதில் பிஷப் ஆயர் பங்கேற்றுச் சிறப்பிப்பார். மாலை ஆராதனைக்குப்பின் இரவில் கலை நிகழ்ச்சி இடம்பெறும்.

ஒன்பதாம் திருவிழா அன்று அன்னையின் தேர்ப்பவனி புறப்படும். அன்னையின் திருச்சொரூபத்துக்கு பட்டாடை பொன்நகை அணிவித்து தங்க மணிமுடிசூட்டி அலங்காரத் தேரில் அருள்பாலிக்க வைப்பர். மலர் மாலைகளால் தேர் நிரம்பி வழியும். 12மணியளவில் தேர்ப்பவனி ஆரம்பமாகும். பக்தர்கள் "மரியே வாழ்க" எனக் கோஷம் எழுப்புவார்கள் சுற்றுவட்டார ஊர்களிலிருந்தும் பக்தர்கள் திருவிழா காண வருகை தருவார்கள். இன, சமய வேறுபாடு இன்றி அனைவரும் அன்னையைத் தரிசிப்பர். வளாகமே மக்கள் வெள்ளத்தால் நிரம்பி வழியும் கோவிலும், வளாகமும் வண்ண ஒளியின் விளக்குகளால் ஜொலிப்பது அனைவரின் கண்களைக் கவரும். அன்றைய தினம் இரவு தொழிலதிபரான அன்பர் ஒருவர் பக்தர்களுக்கு உணவும், நீரும் இலவசமாக வழங்குவார். தேர் நகரில் பவனி வரும் போது ஒவ்வொரு தெரு சந்தியில் வரும்போது பக்தர்கள் காணிக்கை செலுத்தி அன்னையின் ஆசி பெறுவர்.

அதிகாலையில் தேர் இருப்பிடத்தை அடையும். 6மணிக்கு ஆயர் பூசையைத் திருப்பலியைத் தொடர்ந்து தமிழ், ஆங்கிலம், மலையாளம் ஆகியமொழிகளில் திருப்பலிகள் நிறைவேற்றப்படும்.

தேர்பவனியைக் காணமுடியாதவர்களுக்காக மறுநாள் மாலை 3 மணிக்குத் தேர் வீதியில் தேர்பவனி வரும். மாலை 6மணிக்க தேர் இருப்பிடத்தை அடையும், திருவிழாவும் நிறைவுபெறும். ஊர் மக்களின் நல்கொடை, ஒத்துழைப்புடன் பங்கு தந்தையரின் ஆசியுடன் திருவிழா சிறப்பாக நடைபெறும். திருவிழா நாட்களில் கோவிலைச் சுற்றி பலவித மிட்டாய்க் கடைகள், அலங்காரப் பொருள் கடைகள் மற்றும் பலவித பொருட்கள் கொண்ட கடைகள் அமைத்து மக்கள் விரும்பி பொருட்களை வாங்கி மகிழ ஏதுவாக இருக்கும். திருவிழாவுக்கு விருந்தினர், உறவினர் வருகை தருவார்கள். பலவித உணவுகள் தயாரித்து உற்றாருடன் உண்டு மகிழ்வார்கள். தேரில் அன்னையை வணங்கச் செல்வார்கள். பிரசாதமாக பழம், உப்பும் மிளகும், பூவுடை நூல் இலை வழங்கப்படும்.

இத்திருவிழாவை எவ்வாறு சிறப்பிக்க முடியும்? ஆம்! நம்மைச் சுற்றியுள்ள ஏழை எளியோர், ஆதரவற்றோர் முதியோர், அவர்களை ஆதரிக்கவேண்டும்.

உணவு, உடை, பணஉதவி, மருத்துவ உதவி, அன்பான பேச்சு இவற்றால் அவர்களை மகிழ்விக்கவேண்டும். இதுவே நமது திருநாள் கொண்டாட்டத்தை உண்மையான மகிழ்ச்சியுடையதாக்கும். இன்று மாதா ஆகஸ்ட் விண்ணேற்ற நிகழ்வுடன் நம் நாட்டுச் சுதந்திர தினமும் கொண்டாடப்படுவது இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகிறது.

"மீண்டும் அடுத்த ஆகஸ்ட் 6ல் சந்திப்போம்".




**SVS நாடார் திருமண தகவல் நிலையம்**

(அரசு அங்கீகாரம் பெற்றது.பதிவுஎண் 1004/2013)

No.105, நல்ல தம்பி சாலை அண்ணாநகர், மும்பை, சென்னை-75.

எங்களிடம் இந்து சி.எஸ்.ஐ, ஆர்.சி நாடார் ஆண்/பெண் வரன்கள் (டாக்டர், இன்ஜினியர், வியாபாரிகள் மற்றும் உள் நாடு, வெளிநாட்டில் பணிபுரிபவர்களின்) விவரங்கள் நிறைய உள்ளன. உங்கள் மகன், மகள் திருமணத்திற்கு **தொடர்புகொள்ளவும். ஆலோசகர்:D.சுந்தர்சிங் நாடார்B.A அரசு இணைச் செயலாளர் (ஓய்வு) செல்:9840093000, 9445093000 9698793000, 8248707424** E.mail:sundarsinghnmb@gmail.com / website: www.svsnadarmatrimony.com

# காமராஜர் ஒரு சகாப்தம்

## தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்

ஏ.கோபண்ணா.

காங்கிரஸ் பேரியக்கம் பொங்கி எழுந்த போதெல்லாம் காமராஜ் அங்கு முதல் ஆளாக நின்றார். 1923இல் மதுரையில் கள்ளுக்கடை மறியலை முன்னின்று நடத்தினார். அடுத்து 1925இல் நாகபுரி கொடிப் போராட்டத்திற்குத் தொண்டர்களுடன் சென்றார். அதற்குள் காங்கிரஸ் இயக்கத்திற்கும் வெள்ளையர் ஆட்சிக்கும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டதால் போராட்டம் நிறுத்தப்பட்டது. 1927இல் அறு அங்குலத்திற்கு மேல் நீளமான கத்தியை அரசின் அனுமதி பெற்ற பிறகே எடுத்துச் செல்ல முடியுமென ஆங்கில அரசு தடைச்சட்டம் கொண்டுவந்தது. உடனே வாள் ஏந்தும் ஊர்வலப் போராட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது. மதுரையில் நடக்க இருந்த போராட்டத்தில் கலந்து கொள்ளப் புறப்பட்ட காமராஜரிடம் தோழர்களும் விருதுநகரில் ஊர்வலமாகப் புறப்பட்டபோதே சிலர் பின்தங்கினர். அப்போது காமராஜ் 'நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறமுமின்றி...' என்று தொடங்கும் பாரதியார் பாடலைப் பாடிக்கொண்டு, வாள்கள் இடுப்பில் அசையக் குதித்து நடை போட்டார். இந்நிகழ்ச்சி அவரை மிகவும் பிரபலப்படுத்தியது. மதுரை தவிர மற்ற இடங்களில தடை நீக்கப்பட்டதால், தொடர்ந்து போராட்டம் நடைபெறவில்லை. காந்தியடிகளின் அனுமதியும் காங்கிரஸ் தீர்மானமும் கிடைத்த பிறகு, 1926இல் காமராஜ் சுயராஜ்யக் கட்சிக்காகச் சட்ட சபைத் தேர்தலுக்குச் சத்தியமூர்த்தியுடனும் சீனிவாச ஐயங்காரோடும் ஒத்துழைத்து ஸ்ரீவைகுண்டம், நாசரேத், ஏரல் ஆகிய இடங்களில் பிரச்சாரம் செய்தார். இந்த நிகழ்ச்சி காங்கிரஸில் காமராஜரின் முக்கியத்துவத்தை மேலும் நிலைப்படுத்தியது.

1857இல் நடந்த முதல் சுதந்திர போரின்போது (சிப்பாய்க் கலகம்) மக்களைக் கொடுமைப்படுத்திய வெள்ளை மக்களைக் கொடுமைப்படுத்திய வெள்ளையன் நீலுக்குச் சென்னை மவுண்ட் ரோட்டில் சிலை வைக்கப்பட்டிருந்தது. சென்னை மஹாஜன சபையும் சென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டியும் அந்தச் சிலையை அகற்றச் சொல்லித் தீர்மானம் நிறைவேற்றின. இதற்கான கிளர்ச்சியைத் தொடங்கியபோது, முன்னணித் தலைவர்களான திருநெல்வேலி சோமயாஜீலுவும் குடியாத்தம் சாமிநாத முதலியாரும் கைது செய்யப்பட்டுத் தண்டனை அளிக்கப் பெற்றனர். 1927இல் காமராஜ் இப்போராட்டத்தை நடத்தத் தேர்வு செய்யப்பெற்றார். 1927இல் காமராஜ் இப்போராட்டத்தை நடத்தத் தேர்வு செய்யப்பெற்றார். அப்போது சென்னைக்கு வந்திருந்த காந்தியடிகளைச் சீனிவாச ஐயங்கார் வீட்டில் காமராஜ் சந்தித்துப் போராட்டம் குறித்துக் கலந்து ஆலோசித்தார். போராட்டத்திற்கு ஆசி வழங்கிய காந்தியடிகள், வன்முறையில இறங்காமல், சிலை மீது சிறு சிறு கள்மண் உருண்டைகளைப் போடுமாறு ஆலோசனை வழங்கினார். சைமன் கமிஷன் பகிஷ்காரப் காரணமாக, பின்னர் இக்கிளர்ச்சி நிறுத்தி வைக்கப்பட்டது. டாக்டர் அன்சாரி தலைமையில் சென்னை எழும்பூரில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில், ஐரோப்பியப் பயணத்தை முடித்துக்கொண்டு திரும்பிய நேருவும் கலந்துகொண்டார். இந்த மகாசபை கூட்டத்தில்தான் காமராஜ் நேருவை முதல் முறையாகச் சந்தித்தார். 'இந்தியக் குடியரசு காங்கிரஸ்' என்கிற பெயரில் நேரு தலைமையில் ஒரு மாநாட்டை நடத்தி, நீல் சிலையை அகற்றத் தீர்மானத்தையும் நிறைவேற்றினார். ஆயினும் 1937இல் ராஜாஜி சென்னை மாகாணத்தின் பிரதமராக இருந்தபோதுதான் நீல் சிலை அகற்றப்பட்டது. -

தொடரும்...



AB
Dr.M.Sundaralingam B.SC.,B.VSC.,
PH:24895266 CELL: 9444015277
ஆர்த்தி பிராய்லர்ஸ்
77, Nedunchezhian Street, (opp. M.G.R. Nagar Market)
M.G.R.Nagar, Chennai-78.

SSS
Cell:9884687675, 9488491671.
அய்யா துணை
திருமண தகவல் மையம்

அமைப்பாளர்: P.சக்திவேல் நாடார்.
பூர்வீகம் நாடார் உவரி எண்:42, அன்னை கமலா நகர், வீராபுரம் மெயின் ரோடு, நியூ காலனி பஸ் ஸ்டாப், ஆவடி, சென்னை-600 055.


கே.கே.நகர் எஸ்.தேவதாஸ்
ஜெயம் ரியல் எஸ்டேட் &
ஜெயம் ஸ்வீட் ஸ்டால்
வீடு மனை வாங்க விற்க அணுகவும்.
கே.கே.நகர் அனைத்து வியாபாரிகள் முன்னேற்ற சங்கம் பதிவு எண்:473
செயல் தலைவர்.
நெ.20/1, திரு.ராமசாமி ரோடு, கே.கே.நகர், சென்னை-78. செல்:9840369569, 9600005458

# நாடார் சமூகத்தின் போராட்ட வரலாறு

**6.நாடார்களின் பிரிவுகள்**

தொகுப்பு ஆசிரியர்:ச.செந்தமிழ்ச் செல்வன்
செல்:98412 26856,

ஏனாதி:

சாணார்களில் "ஏனாதி" என்ற பட்டம் இருந்ததாகவும், சைவ நாயன்மார்களில் (சான்றோர்) ஒருவரான ஏனாதி நாயனார் நாடார் சமூகத்தை சேர்ந்தவர் என்றும் கூறுகின்றனர். சிவனது அறுபத்தி மூன்று அடியார்களில் ஒருவர் ஏனாதி நாயனார்.



நாடார்கள் பற்றிய புராண வரலாற்றில் கூறப்பட்டுள்ள பிரம்மாவுக்கு பிறந்த ஏழு குழந்தைகளில் ஒருவர் ஏனாதி நாயனாரின் முன்னோர் என்று வலங்கை நூலில் கூறப்பட்டு உள்ளது.

கி.பி.பதினோராம் நூற்றாண்டில் வாழ்ந்த சேக்கிழார் ஏனாதி நாயனாரின் வரலாற்றை விளக்கித் தனிப் புராணம் பாடி உள்ளார்.

சோழ மண்டலத்தில் எயின்னூரில் ஏனாதி நாயனார் பிறந்தார். இப்போது அந்த ஊர் ஏனநூரென மருவி கும்பகோணத்திற்கு தென்கிழக்கில் மூன்று மைல் தூரத்தில் உள்ளது. அங்கு அவருடைய ஞாபகமாகச் சிலை செய்து கோயில் கட்டப்பட்டுள்ளது (நாடார் குலமித்திரன் 2.9.1927).

இவர் நன்கு கல்வி கற்று உணர்ந்தவர். போர் வீரர்களுக்கு வாள்வித்தை பயிற்சி அளித்து வந்தார். சிவ பக்தரான இவர் நெற்றியில் விபூதி அணிந்து வரும் சிவபக்தர்களை மதித்து அவர்களுக்கு தேவையான உதவிகள் செய்து வந்தார். இவருக்குப் போட்டியாக வாள் பயிற்சி அளித்து வந்தவன் அதிசூரன், ஏனாதி நாயனாரால் வருமானம் குறைந்ததால் அதிசூரன், அவரைப் போருக்கு அழைத்தான். பின்பு நடந்த போட்டியில் தோல்வியுற்ற அதிசூரன், இவரை நயவஞ்சகமாக, நெற்றியில் விபூதி அணிந்து மீண்டும் போருக்கு அழைத்தான்.

ஏனாதி நாயனார் போர்க்களத்தில், "அதிசூரனாகிய நீ பரமசிவனுக்கு அடியவராகி விட்டாய்" என்றுக் கூறி வாளை விட்டு நேராக நிற்க, அதிசூரன் ஏனாதி நாயனாரைக் கொன்றான். தன் உயிர் பிரியும் போது கூட 'ஓம் நமச்சிவாய! நாதன் திருப்பாதம் வாழ்க!' என்று கூறி ஏனாதி நாயனார் உயிர் துறந்தார். பின்பு விபூதியின் மகிமை உணர்ந்த அதிசூரன் தவறை உணர்ந்து, செய்த பாவத்தைத் தீர்க்க சிவனை வணங்கி வந்தார்.

14) இல்லத்துப் பிள்ளைமார்:-

தென் தமிழகத்தில் இல்லத்து பிள்ளைமார் என குறிப்பிடப்படும் குழுவினர் முன்னர் ஈழவர்கள் அல்லது நெசவுப் பணிக்கர்கள் என அழைக்கப் பட்டிருக்கின்றார்கள். தற்சமயம் இச்சமூகத்தினர் நெசவுத் தொழிலில் ஈடுபடுவது குறைந்துவிட்டது. ஈழத்துப் பிள்ளைகள் என்பதே இல்லத்துப் பிள்ளைகள் என மருவி வழங்குகிறதெனச் சான்றுகள் உள்ளன.

முன்னர் இவர்கள் சாணார்கள் (நாடார்கள்) எனப்படும் ஒரு சமூகத்தினருக்கு நெசவுத் தொழில் பணியில் ஈடுபட்டவர்களாக இருந்ததாக வரலாற்று, தொல்லியல் ஆய்வறிஞர் திரு.எஸ்.ராமச்சந்திரன் குறிப்பிடுகின்றார். அத்துடன் இக்குழுவினர் சாணார் எனப்படும் (நாடார்கள்) சமூகத்தைச் சார்ந்து வாழ்ந்தவர்களாக இருப்பதற்கான சான்றுகள் 200 ஆண்டுகளுக்கு முற்பட்ட கிழக்கு இந்தியக் கம்பெனி ஆவணங்களை ஆராயும் போது கிடைத்த தகவலையும் குறிப்பிடுகின்றார்.

கருமாபுரம் சான்றோர் குல நாடார் மடத்தின் செப்பேடு 1600 வருடங்களுக்கு முந்தையது. அதில் நாடார்கள் பற்றியும் ஈழவர் பற்றியும் குறிப்புக்கள் உள்ளன. ஆழ்வார்களில் நம்மாழ்வார் ஈழவர் சமுதாயத்தை சேர்ந்தவர் தான் நம்மாழ்வாரை பாண்டிய அரச குலத்தை சார்ந்தவராக அவரைப் பற்றிய குறிப்புகள் கூறுகின்றன. நாடார்கள் பாண்டியர்கள் என்று குறிப்பிடப்படுவதை இங்கு நாம் கவனிக்கவேண்டும்.

15) பூணூல் நாடார்கள்:

சோழ நாட்டு இளவரசர்களுக்கும் சோழ நாட்டு இராணுவத்திற்கும் (போர்ப்படை) பயிற்சி கொடுத்தவர் ஏனாதி நாயனார். இவர் பூணூல் அணிந்திருந்தார்.

கி.பி.17ஆம் நூற்றாண்டைய சூரிய சந்திரகுல சத்திரிய கால நாடார் மன்னர்கள் சான்றோர் சமூகத்தை செப்புப் பட்டயங்களில் "குலமும் முப்புரி நூலும் (பூணூல்) உடையோர்" என எழுதியுள்ளனர். ஆகவே நாடார்கள் அந்தக் காலத்திலே பூணூல் அணிந்திருப்பது தெளிவாகிறது.

செப்புப் பட்டயம் இன்றும் திருச்செங்கோடு வட்டம், கருமாபுரம் ஆதினத்தில் உள்ளது. நாடார்களுக்கு மட்டும் இன்றும் இந்த ஆதினத்தில் பூணூல் அணிவிக்கப்படுகிறது. - தொடரும்......

ஸ்ரீ முருகன் துணை
ஸ்ரீ ஐந்துவீட்டு சுவாமி துணை
செல்:94980 75679, 9445227158, 9677060358.
தூத்துக்குடி மாவட்டம், செட்டியாபத்து வாக்கியம
பஞ்சாங்க கணிதர் ஜோதிடர் K.M.துரைசாமி
நாடார் மகன் ஜோதிடர் C.T.சிவக்கொழுந்து
வேல் மகள்
ஸ்ரீ தேவி ஜோதிட நிலையம்
திருவல்லிக்கேணி, சென்னை-5, ஆன்லைன்-லில்
ஜாதகம் பார்க்கப்படும், வாட்சஆப்:94980 75679.




# சிவந்தி ஆதித்தனார் சாதனை சரித்திரம்

பத்மஸ்ரீ டாக்டர் சிவந்திஆதித்தனார் சாதனைச் சரித்திரம் அ.மா.சாமி.

## பெரியன செய்த பெரியோன்

உதவி வேண்டும்: "நீங்கள் ஓர் உதவி செய்ய வேண்டும்" என்று என்னைப் பார்த்தார்கள்.

" என்ன செய்யவேண்டும்?" என்று நான் கேட்டேன். என்னிடம் திருப்பணிக்கு நிதி கேட்பார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால், அவர்கள், "சிவந்தி ஆதித்தனார் பெரிய கொடை வள்ளலாக விளங்கிறார். இலட்சம் இலட்சமாகச் செலவழித்துக் கோவில் திருப்பணிகள் செய்கிறார். அவரிடம் சொல்லி, ஒரு ஐந்து இலட்ச ரூபாய் வாங்கிக் கொடுங்கள்" என்று தயவாகக் கேட்டுக் கொண்டார்கள்.

அத்துடன் திருப்பணிச் செலவுகள் அடங்கிய பட்டியல் ஒன்றையும் என் கையில் வைத்தார்கள். ரூ.5இலட்ச முதல் ரூ.45இலட்சம் வரை பல திட்டங்கள் அதில் இருந்தன.

"அடுத்த முறை சென்னைக்குப் போகும் போது சிவந்தி ஆதித்தனாரிடம் சொல்லுகிறேன்" என்று நான் கூறினேன். திருப்பணி செலவுப் பட்டியலையும் வாங்கிக் கொண்டேன்.

சந்திப்பு: அடுத்த ஒரு மாதத்துக்குள் நான் சென்னைக்குப் போகவேண்டியிருந்தது. சென்னையில் சிவந்தி ஆதித்தனாரைப் பார்க்க வேண்டியிருந்ததால் என் மனைவியையும் அழைத்துக் கொண்டு போனேன்.

இருவருமாக ஒருநாள் காலையில் சிவந்தி ஆதித்தனாரின் வீட்டுக்குப் போனோம். அவர் எனக்கு மாமா முறை. என் அம்மாவின் ஒன்றுவிட்ட அண்ணன்.

மாமாவும், அத்தையும் எங்களை மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள். சாப்பிடச் சொல்லி உபசரித்தார்கள்.

சாப்பாட்டுக்குப் பின் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது நான் வந்ததன் நோக்கத்தை அவர்களிடம் தெரிவித்தேன். கோவிலில் கொடுத்தத் திருப்பணி செலவுப்பட்டியலையும் அவர்களிடம் தந்தேன். அவர்கள் மேலோட்டமாகப் பார்த்தார்கள். பார்த்துவிட்டு, "ஒரு வாரத்தில் சொல்லுகிறேன்" என்றார்கள்.

நாங்கள் நன்றி கூறி விடை பெற்றுக்கொண்டோம். அப்போது என் மனைவி "எப்படியாவது செய்து கொடுங்கள். சித்தப்பா" என்று நயமாகச் சொன்னாள்.

"நீ சொல்லிவிட்டாய் அல்லவா? செய்துவிடுகிறேன்" என்று சிவந்தி ஆதித்தனார் சிரித்தார். அவருக்கு மகேசுவரி மீது தனியான பிரியம் உண்டு.

பெரிய திட்டம்:

நாங்கள் ஊருக்குத் திரும்பிவிட்டோம். ஒரு வாரத்தில் போன் வந்தது. மன நலம் குன்றியவர்கள் தங்கிக் கொள்ள கோவிலில் அறைகள் கட்டிக் கொடுக்க ஒப்புக்கொண்டார்கள்!

கோவிலில் கொடுக்கப்பட்டிருந்த பட்டியலில் இதுதான் மிகப்பெரிய திட்டம். ரூ.45இலட்சம் தேவைப்படும் என்று குறிப்பிட்டிருந்தார்கள். இதை சிவந்தி ஆதித்தனார் தேர்ந்தெடுத்திருந்தார்கள்.

நான் ஆச்சரியப்படவில்லை. ஏனென்றால், அவர் எதையும் பெரிதாகச் செய்து பழக்கப்பட்டவர் என்பது எனக்குத் தெரியும்.

200 ஆண்டு காலமாக எடுத்துக் கட்டுவார் இல்லாமல் மொட்டைக் கோபுரமாக நின்ற தென்காசி கோவில் ராஜகோபுரத்தைக் கட்டி முடித்தார் அல்லவா? எதையும் பெரிதாகச் செய்யும் பெருமை படைத்தப் பெரியவர், அவர். பெரிய சாதனைகள் செய்ய விரும்பக்கூடியவர். புலி வேட்டைதான் அவருக்குப் பிடிக்கும்!

- தொடரும்.........

# கேள்வி? பதிலில்?...... முதியோர் நல மருத்துவம்

பத்மஸ்ரீ டாக்டர்.வி.எஸ்.நடராஜன், மூத்த முதியோர் நல மருத்துவம்.044-26412030.

## சிறுநீரகங்களின் நலம்

✱ **கேள்வி:** எனக்கு சமீபத்தில் யூரினில் ரத்தும் கலந்து வந்தது. அப்பொழுது நீர்க்கடுப்பும் காய்ச்சலும் இருந்தது. 'பயப்பட வேண்டாம், இது சிறுநீர்ப் பாதையில் ஏற்படும் நோய் தொந்தரவினால்தான் என்று டாக்டர் மருந்து கொடுத்தார். இப்பொழுது நன்றாகவே இருக்கிறேன். இதற்கு வேறு ஏதாவது காரணங்கள் உண்டா?

✱ **பதில்:** சிறுநீரில் ரத்தம் கலந்து வருவதற்கான காரணங்கள்: சிறுநீரில் பூச்சித் தொல்லை, சிறுநீர்ப்பையில் கட்டி, புற்றுநோய் மற்றும் சிறுநீர்த் தாரையில் கல். வலி ஏதுமில்லாமல் சிறுநீரில் ரத்தம் அதிகம் கலந்திருந்தால், சிறுநீர்ப்பையில் புற்றுநோய் அல்ல கட்டியும் ஒரு காரணமாக இருக்கலாம். பிராஸ்டேட் சுரப்பியில் புற்றுநோய் இருந்தாலும் இத்தொல்லை வரலாம். சிலருக்கு ஆஸ்பிரின் மாத்திரையினாலும் சிறுநீரில் ரத்தம் வரலாம். சில நேரங்களில் சிறுநீரில் ரத்தம் கலந்திருக்காது. ஆனால், சிறுநீர் கருஞ்சிவப்பாக இருக்கும். சென்னா, ரிஃபாம்பசின், ஸ்படோபா போன்ற மாத்திரைகளினாலும், மஞ்சள் காமாலையினாலும், பீட்ரூட் உண்பதாலும் சிறுநீர் கருஞ்சிவப்பாக இருக்கக்கூடும்.

✱ **கேள்வி:** சில நாட்களுக்கு முன்பு எனக்கு அடிவயிற்றில் தாங்க முடியாத வலி. டாக்டர் வயிறு ஸ்கேன் பார்த்துவிட்டு இது சிறுநீரகப் பாதையில் கல் இருப்பதாகவும் அதற்கு மாத்திரையை கொடுத்தார். தற்பொழுது வலி இல்லை. இதற்கு நான் எந்தவிதமான உணவுகளைத் தவிர்க்க வேண்டும்?

✱ **பதில்:** சிறுநீர்ப் பாதையில் கல் உள்ளவர்கள் காபி, தேநீர், பிளாக் & கோலாசோடா போன்றவற்றைத் தவிர்ப்பது நல்லது. கோக் பானங்கள், இதர மென்பானங்கள், ஐஸ்கிரீம், சாக்லேட் ஆகவே ஆகாது. உலர் பழங்கள், பாதாம் பருப்பு, முந்திரிபருப்பு, பீட்ரூட், சோயா பீன்ஸ், சேனைக்கிழங்கு, பசலைக் கீரையைச் சாப்பிட வேண்டாம். கேழ்வரகு, கீரைகள், கருணைக்கிழங்கு, வெள்ளைப் பூண்டு, முள்ளங்கி, மீன், இறால், நண்டு, முட்டையின் வெள்ளைக்கரு, பால், தயிர், வெண்ணெய், நெய், பாலாடைக் கட்டி, பால்கோவா, பால் அல்வா, இறைச்சி போன்ற உணவுகளைக் குறைத்துக் கொள்ளுங்கள்.

✱ **கேள்வி:**

தாங்க முடியாத வயிற்று வலி என்று டாக்டரிடம் சென்றேன். அவர் ஸ்கேன் எடுத்துப் பார்த்துவிட்டு சிறுநீரகத்தில் கல் இருக்கிறது. அதற்கு ஆபரேஷன் செய்ய வேண்டும் என்று கூறினார். ஆபரேஷன் இல்லாமல் கல்லைக் கரைக்க முடியாதா, டாக்டர்?

✱ **பதில்:**

சுமார் 5மி.மீ. அளவுள்ள கற்களை சரியான உணவு முறை, போதுமான தண்ணீர் குடிப்பது, குளுக்கோஸ் ஏற்றுவது, மருந்து, மாத்திரைகள் மூலமே கரைத்துவிடலாம். 1.5செ.மீ அளவுள்ள கற்களை ஷாக்வேவ் லித்தோட்ரிப்ஸி எனும் முறையில் வெளியிலிருந்தே ஒலி அலைகளைச் செலுத்தி கல்லின் மீது அதிர்வை ஏற்படுத்தி உடைத்துவிடலாம். சிறுநீர்க்குழாய், சிறுநீர்ப்பை, ஆகியவற்றில் உள்ள கற்களை யூரிட்ரோஸ்கோப்பி எனும் முறையில் வளையும் தன்மையுள்ள குழாய் போன்ற ஒரு கருவியை சிறுநீர்த்துவாரம் வழியாக உள்ளே செலுத்தி கற்களை நசுக்கியும் லேசர் கொண்டு உடைத்தும் எடுத்துவிடலாம். ஆனால், சிறுநீரகத்துக்குள் உள்ள கற்களை இந்த முறையில் எடுக்க முடியாது. ஆனால் சிறுநீரகத்துக்குள் உள்ள கற்களை இந்த முறையில் எடுக்க முடியாது. 2செ.மீ.க்கு அதிகமான அளவில் உள்ள கற்களை நெப்ரோலித்தாட்டமி எனும் முறையில் முதுகில் சிறிய துளை போட்டு அறுவை சிகிச்சை மூலமே அகற்ற முடியும்..

**தொகுப்பு: - எல்மாமதி..**


# அமிர்தகனி

## திருமண தகவல் நிலையம்

**நாடார் சொந்தங்களுக்கு மட்டும் 9840948727.**

**தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டகளை பிறப்பிடமாக கொண்டு, இங்கு வாழும் அனைத்து வகை நாடார் சமூகத்தினருக்கும் வரன் பார்த்து கொடுக்கப்படும்.**

**மண் பொருத்தம், மனைப்பொருத்தம், மணப்பொருத்தம் இவை மூன்றுமே திருமணத்திற்கு போதுமானது.**

**எண்:5, 3வது தெரு, வள்ளலார் நகர், திருமுல்லைவாயல், சென்னை-600 063.**

நேரம்:புதன், வியாழன், வெள்ளி மாலை 5மணி வரை.

# மானாடும் மானாட்டாரும்: கி.பி.1600 விடியலிலிருந்து-16

(நட்டாத்தி நாடார் ஆவணங்கள்)

டாக்டர் ஆ.தசரதன் 9444169605.



வலங்கை எழுநூற்றுவர் சான்றோர் படைப்பிரிவுகளின் வரலாறுகளை விளக்கும்" "வலங்கை மாலையில்" தொடங்கி, கி.பி.1600க்குப் பிறகு ஏற்பட்ட மானாட்டுக் கல்வெட்டுகள், செப்புப்பட்டயங்கள் மற்றும் வரலாற்றுச் சுவடி ஆவணங்களில் அறியலாம் சான்றோர்குல நாடார்களின் வரலாறுகளை நான் இந்தத் தலைப்பில் பதிவு செய்து வருவதை யாவரும் அறிவர்.

மானாட்டில் கி.பி.1600இல் செண்பகராம பணிக்கனால் (செம்பிராப் பணிக்கன்)ஏற்படுத்தப் பெற்ற தண்ணீர்த் தொட்டிக் கல்வெட்டின் மூலம் அவ்வட்டாரப் பணிக்க நாடன்களின் சமூக வரலாற்றுப் பின்புலத்தைப் பார்த்தோம்.

கி.பி.1606இல் பாடப்பெற்ற வெங்கலராசசோழன் தொடர்பான பிற்பகுதி வரலாற்றில் குரும்பூர் வட்டாரச் சான்றோர் குலத்தினர்பற்றியும் மேனாட்டார் பற்றியும் பார்த்தோம்.

கி.பி.1618முதல் மானவீர வளநாடன் அழகக்குட்டிப் புலவர் பாடிய பாடல்களில் இடம்பெறும் அன்னார் உறவினர் கூட்டத்தாரான சான்றோர் குல நாடன்களின் சமூகப் பண்பாட்டு வரலாறுகளைச் சில கல்வெட்டுச் சான்றுகளுடனும் பார்த்தோம்.

கி.பி.1639இல் மானாட்டு வடபற்று நாடன்களின் ஆட்சியைப் பறைசாற்றும் தேரிக் கல்வெட்டின் அடிப்படையில் அதற்கு முன்னும் பின்னும் அங்கு அமைந்திருந்த, அதிகாரமேற்றிருந்த நாடன்களின் வரலாற்றை விளக்கத்துடன் பார்த்தோம்.

கி.பி.1645மற்றும் கி.பி.1660இல் அமைந்திருந்த வலங்கை உய்யக்கொண்ட நாடன்களின் சமூக வரலாற்றைச் சான்றுகளுடன் பார்த்தோம். அர்ரம்பாடு கல்வெட்டும் இதே காலம்தான்.

மானாட்டுச் சான்றோர்குல நாடன்களின் பின்புலங்கள் போலுள்ள கொங்குநாட்டுச் சான்றோர் குலத்தினர் கி.பி.1670வாக்கில் வெளியிட்ட நான்கு செப்புப்பட்டயங்களின் அடிப்படையில் அப்பகுதியிலுள்ள சான்றோர்குல நாடன்களின் வகைமுறைகள் பற்றி விரிவாகப் பார்த்தோம்.

கி.பி.1600 ஆம் ஆண்டின் விடியலிலிருந்து கி.பி.1700ஆம் ஆண்டு வரையில் ஏற்பட்ட சான்றோர் குல நாடன்களின் வரலாற்று ஆவணங்கள் மூலமாக அவர்களின் சமூகப் பண்பாட்டு வரலாறுகளை" "நாடார்களின் வரலாறு -கி.பி.1600முதல் கி.பி.1700 வரை" என்ற தலைப்பில் பதிவிடத் திட்டமிட்டு எழுதப்பெற்று வரும் இத்தொடர் கட்டுரைகளில் நட்டாத்தி நாடன்களின் சமூகப்பண்பாட்டைக் குமாரசுவாமி நாடான் கதை என்ற வில்லுப்பாட்டு ஆவணம் மூலம் இப்போது அறிந்து கொள்ளலாம்.

நட்டாத்தி ஊரில் கி.பி.1909இல் பிறந்த ப.மோ.தங்கசுவாமி அவர்கள் காவல்துறையில் பணியாற்றி, இறுதியாகக் காவல் துணை ஆணையராக ஓய்வு பெற்ற பின்பு 1984இல் நட்டாத்தியார் வரலாறு" என்ற நூலை வெளியிட்டார்.

மஞ்சள் நீர்க் காயலில் பைனர் துரைசாமிநாடார் அவர்களின் உதவியால் கிடைத்த ஓலைச்சுவடிகளில் ஒற்றைநான் 1986ஆம் ஆண்டில் "அரிப்பாங் கதைப் பாடல்கள் என்ற தலைப்பில் (விடுகதைப் பாடல்கள்) பதிப்பித்து வெளியிட்டேன்.

என் பதிப்பிற்கு, ப.மோ.தங்கசுவாமி அவர்களின் வரலாற்று நூல் உதவியாக இருந்தது.நட்டாத்தியாரின் முன்னோடி ஆட்சியாளர் பற்றி என் நூல் பேசுகிறது.

அன்னார், ஓலைச்சுவடிகளிலிருந்து கி.பி.1990ஆம் ஆண்டில் 'நட்டாத்தியர் கல்யாண வாழ்த்துப்பாட்டு" என்ற நூலையும் 1993ஆம் ஆண்டில் 'குமாரசுவாமி நாடான் வில்லுப்பாட்டுக்கதை" என்ற நூலையும் பதிப்பித்து வெளியிட்டார்.

நான் 1984இல் 'வலங்கை வாழ்த்து" என்ற தலைப்பில், எங்கள் ஊர் குரும்பலாப்பேரியில் இராமசாமி நாடார் அவர்களின் ஓலைச்சுவடியைப் பதிப்பித்து வெளியிட்டிருந்தேன். ப.மோ.தங்கசுவாமி அவர்கள் பதிப்பித்த 'நட்டாத்தியர் கல்யாண வாழ்த்துப்பாட்டு' என்ற நூல் பதிப்புக்கு முன்னோடியாக என் நூல் அமைந்தது குறிப்பிடத் தக்கது.

அன்னார் பதிப்பித்த கல்யாண வாழ்த்துப்பாட்டு நூலுக்கும் குமாரசுவாமி நாடான் வில்லுப்பாட்டுக் கதைக்கும் பதிப்பு உதவிகளைச் செய்திருந்த எனக்கு அவர் நன்றி தெரிவித்திருக்கிறார்.

மானாட்டு வடபற்று வரலாற்றைச் சற்றே விளக்கும் குலசேகரராஜ் அவர்களின் நூலும் (1918), பேராசிரியர் தா.மாசில்லாமணிநாடன் 1931இல் விரிவாக எழுதி வெளியிட்ட பாண்டிய தேச ஆதித்தவம்ச வரலாறு" என்ற நூலும் ப.மோ.தங்கசுவாமி அவர்கள் நூல்களுக்கு முன்னோடியானவை.

மானாட்டுத் தென்பற்று எனும் ஐந்து பற்று நாடுகள் (அஞ்சுபத்து நாடுகள்) வரலாற்றை விளக்கும் வரலாற்று ஆவணங்கள் கிடைக்கப்பெறாத காரணத்தால் சான்றோர்குல வரலாற்றாசிரியர்கள் அப்பகுதிகள் வரும் நட்டாத்தியர் வரலாற்றைச் சற்றுக் குறைவாகவே பதிவிட்டிருக்கின்றனர்.

அக்குறையைப் போக்கி, ப.மோ.தங்கசுவாமி அவர்கள் நிறைவாகத் தம் மூன்று நூல்களிலும் செய்திருப்பது நட்டாத்தியாரின் சமூகப் பண்பாட்டு வரலாற்றை அக்காலம் முதல் இக்காலம் வரை நாம் தெரிந்துகொள்ள மிகவும் பயனுடையதாக உள்ளது.

அக்காலம் என்பது முதலாம் இராசராச சோழன் காலத்திலிருந்து எனத் தெரிந்து கொள்ளமுடிகிறது.

சான்றோர்குல நட்டாத்தியர் கணிசமாகத் தண்பொருநை ஆற்றுக்கு வடக்கில் தென் குமுந்தாமதி எனும் நட்டாத்தி ஊர் தொடர்பாகவும் ஆற்றின் தெற்குக் கரை தேரிக்காட்டில் மானாட்டுத் தென்பற்று எனும் அஞ்சுபத்து நாடுகள் தொடர்பாகவும் மேலும் கொங்கு நாட்டிலும் பிற சிற்சில பகுதிகளிலும் வரலாறு கொண்டுள்ளனர். அந்த வரலாற்றை அன்னார் கீழ்வருமாறு விளக்குகிறார்.

"நட்டாத்தியர் பதினொன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், முதலாம் இராசராச சோழனால், தென்பாண்டி நாட்டில் பெருங்குளம், மானாடு வட்டாரம், கோட்டாறு, ஆரல்வாய்மொழி, கன்னியாகுமரி வட்டாரம் முதலிய இடங்களில் நிரந்தரமாகக் குடியேற்றப்பட்ட நிலைப்படை வீரர்களின் வழி மரபினர் ஆவர்.

'தாமிரபரணி ஆற்றிற்கு வடபாலுள்ள நிலப்பகுதி திருவழுதி வளநாடு என்று வழங்கப்பெற்றது. பெருங்குளம் என்ற உத்தமசோழ நல்லூர் அதற்குத் தலைநகர். இவ்வளநாட்டை ஆள இராசராசனால் தன் படைத் தலைவர்களுள் ஒருவனான சோனாட்டு அருள்மொழித் தேவ வளநாட்டு இங்கள் நாட்டு உடையான் வெறையல் கிழான் அரங்கன் சந்திரசேகரன் கி.பி.1004ஆம் ஆண்டிலோ அதற்குச் சற்று முன்பாகவோ நியமிக்கப்பட்டான் என்பதைப் பெருங்குளம் சிவன் கோவில் கல்வெட்டின் மூலம் அறிய முடிகிறது."

இவ்வாறு, ப.மோ. தங்கசுவாமி அவர்கள் நட்டாத்தியர் வரலாற்றை அறிமுகப்படுத்துகிறார். மாறவர்மன் சுந்தரபாண்டியனால் பெருங்குளத்து ஊர் நட்டாத்தியர் கி.பி.1231ஆம் ஆண்டுவாக்கில் அவ்வூர்விட்ட தென்குமுந்தாமதி எனும் புதிய ஊரில் குடியேறினர். அதுவே இன்றைய நட்டாத்தி.

திருவழுதிவளநாட்டுச் சோழச் சிற்று அரசனின் வழிகாவலி நாடனான ஒரு வைகுந்த நாடான் ஆங்கிலேயர் காலத்தில் ஜமீன்தார் அந்தஸ்தில் நட்டாத்தியிலிருந்து ஆட்சி செய்துவந்தார். கி.பி.17ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மானாட்டுத் தென்பற்று அஞ்சுபற்று நாடுகளை நட்டாத்தியர் ஜவர் ஆட்சி செய்து வந்தனர். இவருக்கு முன்பாக, சிறுராசாயிருந்தவரின் கீழ், வல்லநாடு, சித்துநாடு, மானாடு, நங்கை நாடு அடப்பநாடு என்பனவே அஞ்சுபற்று நாடுகள்.

இந்நாடுகளின் ஆட்சியாளர்கள் சார்பாக வல்லநாட்டு வாரிசானகுமாரசுவாமி நாடான் மதுரை திருமலை நாயக்கனின் தென்பாண்டி நாட்டுச் சார்பாளனை வடமலையப்ப பிள்ளையிடம் அஞ்சுபற்று நாடுகளில் மணியம் செய்வதற்கு அதிகாரம் இளையயில் பெற்றார்.

குறிப்பாக மணியம் செய்து வந்த குமாரசுவாமி நாடான் பொதுமக்கள் அய்யக் குட்டி என்பாரிடம் மையல் கொண்டு, பிற ஆட்சியாளர்களுடன் வரம்புமீறி முரண்பட்டதால் நட்டாத்திசிற்றரசர் உத்தரவின்பேரில் கூலி மறவர்களால் கொலை செய்யப்பட்டார். இதுதான் குமாரசுவாமி நாடான் கதைச் சுருக்கம்.

இந்த வில்லுப்பாட்டுப் பாடியவரும் நட்டாத்தி உறவு முறைக்காரர்களின் கொலை நடந்த காலத்தைத் தொட்டடுத்துப் பாடப்பட்டதாக இப்பாட்டுதெரிவதால் பாடலாசிரியரும் கி.பி.17ஆம் நூற்றாண்டின் சமய காலக்கட்டத்தினர் எனத் தெரிகிறது. இதனால், அக்காலக்கட்டத்து நட்டாத்தியாரின் ஊர்கள், அடுத்துள்ள ஊர்கள் பண்பாட்டும் பழக்கவழக்கங்கள், மதுரை திருமலை நாயக்கர் கால முறைகள், கூலிப் படைக் கொலைஞர்கள், அக்காலத்தில் புழக்கத்தில் இருந்த ஆயுதங்கள், நட்டாத்திய அரசியல், உறவின் முறைகள், மாவீர வளநாட்டுத் தென்பற்று ஊர்கள், திருவழுதி வளநாட்டின் சிறப்பு நட்டாத்தியர் வாழ்ந்த பிற ஊர்கள், போன்றவற்றைத் தெரிந்து கொள்ளலாம்.

குமாரசுவாமி நாடான் கொலைக்குப் பின் நட்டாத்தியரின் சில குடும்பங்கள் வேறு ஊர்களில் குடியேறிய வரலாறு, வைகுந்த நாடன் அச்செல்லிடம் சென்று தம் குடிமக்களைக் கண்டு வருதல் போன்றவை அறியக் கிடக்கின்றன.

குமாரசுவாமி நாடான் கொலைக்குப் பின் ஏற்பட்ட நட்டாத்தியர் குடியேற்றம் பற்றி ப.யோ.தங்கசுவாமி எழுதுவதாவது: 'குமாரசுவாமி நாடான் இறந்தபிறகு அரசுடைத்து நாட்டை அரசாண்ட நட்டாத்தியர் சிற்றரசு அழிந்துபோயிற்று. நட்டாத்தியர் செல்வாக்கும் ஒழிந்தது. அந்நாட்டில் தொற்றுநோய் பரவிற்று. அதனால் அநேகர் மடிந்தனர். பலர் தங்கள் ஊரைவிட்டே குடிபெயர்ந்து தென்குமந்தாபதியிலும் அதைச் சுற்றியுள்ள ஊர்களிலும் குடியேறினர். வன்னிக்குட்டி நாடான் வழிமரபினர்கள் மட்டும் குடிபெயரவில்லை. அவர் வழித்தோன்றல்களான ஐம்பது குடும்பங்கள் தற்காலம் சித்தவிளை என்கிற குமாரசுவாமிபுரத்தில் தங்கி வாழ்கின்றனர். செக்கன் திருப்பப்ப நாடான் நேர்வாரிசான ஒருவர் மட்டும் தங்கைமொழியூர் அடுத்த இலங்க நாதபுரத்தில் வசிக்கிறார். மற்ற அஞ்சுபத்து நாடான்வாரிகள் குடும்பங்கள் ஒன்றும் அந்நாட்டில் குடியில்லை.. மாணாடு, பொய்யாவிளை, அடப்பனூர், நங்கைமொழி இவ்வூர்களில் நட்டாத்தியர் ஒருவரும் குடியில்லை." என்கிறார்.

மேலும் இவர் எழுதுவதாவது 'பொய்யாவிளை அழிந்து போயிற்று... பூலாண்டிவிளை- இவ்வூரில் நட்டாத்தியர் குடித்தனம் இல்லை. ஆனால் இவ்வூரைச் சேர்ந்த கூளப்பாட்டூர் என்கிற தர்மபுரியில் பதினேழு நட்டாத்தியர் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

நட்டாத்தியர் சான்றோர் வீரர் பற்றிய வரலாறு பெருங்குளத்தில் பிற்கால சோழர்கலக் கல்வெட்டிலிருந்து தெரியவருவதிலிருந்து, இக்காலம் வரையிலும் அறியக் கூடியதாயுள்ளது.

பெருங்குளத்திலிருந்து தென்குமந்தாபதி எனும் நட்டாத்தி எனும் வறண்ட பூமிக்குக் குடிபெயர்ந்த அவ்வீரர் கூட்டம் சான்றோர் குலச் சமுதாயமாக, தனித் அடையாளங்களோடு இன்று பரிணமித்துள்ளது.

கி.பி.17ஆம் நூற்றாண்டில் அச்சமுதாயம் அடைந்த சில பின்னடைவுகளுக்குப் பின்னர் வைகுந்த நாடன்என்ற தலைமுறைச் சிற்றரசர்களால் தூக்கி நிறுத்தப்பட்டு, அவர்கள் சிலரால் உறவின்முறை வலுப்படுத்தப்பட்டதை, கொங்குநாடு தொடர்பான தனிப்பாடல்கள் பதிவு செய்துள்ளன.

கி.பி.18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆண்டான் கவிராயன் என்ற வசைகவிராயன், நட்டாத்தியில் குடிக்க நீர்கேட்டுக் கிடைக்காததை "குளிர்ந்தபதி நட்டாத்தி, குடிக்கத் தண்ணியில்லே" என்று பாடியுள்ளார் என்பதை என்னுடைய 'தமிழில் வசைப்பாடல்கள் - ஆண்டான் கவிராயனின் தனிப்பாடல்கள்" என்ற நூலில் (1995) பதிவிட்டுள்ளேன்.

புலவர் புராணத்தில், வசைகவி ஆண்டான் பகுதியில், தண்டபாணி சுவாமிகள் குறிப்பிட்டுள்ளதையும் காணலாம். வறண்டபூமி என, ப.யோ.தங்கசுவாமி நட்டாத்திப்பகுதியைக் குறிப்பிட்டதற்கு மாறாக ஆண்டான் கவிராயன் "குளிர்ந்தபதி" எனக் குறிப்பிடுவதைக் காண்க.

"காயாமொழி ஆதித்தர்களும் நட்டாத்தி நாடார்களும் ஒருவர்க்கொருவர் தம்மைப் போற்றி என்று முறை சொல்லிக் கொள்வது வழக்கம்" என ப.யோ.தங்கசுவாமி அவர்கள் தம்முறைய 'நட்டாத்தியர் வரலாறு' என்ற நூலில் (பக்கம் 101) குறிப்பிடுகிறார்.

இவ்வாறு சொல்லிக் கொண்டும், திருச்செந்தூர் முருகன் கோவிலுக்கு இவ்விரு வகையறாவினரும் மிகுந்த கைங்கரியம் செய்தும் வந்துள்ளனர். "கி.பி.1885-இல் திருச்செந்தூர் கோவில் மேற்கு வாசல் மண்டபப் படிக்குள் ஆதித்தர்கள் பிறவே சிக்காதபடி தடை செய்தபோது நட்டாத்தி ஜமீன்தார் எட்டயபுரம் மன்னரால் தமக்கு அளிக்கப்பட்ட சிங்கமுகக் குதிரை என்று அழைக்கப்பட்ட தமது பட்டத்துக் குதிரை மீது சவாரி செய்து ஒரு படையுடன் சென்று அங்கு நிறுத்தப்பட்ட யானையையும் மறவர்களையும் விரட்டியடித்தார்" என்று மேற்படி நூலில் (பக்கம்75) கூட்டப்பட்டுள்ளது.

காயாமொழி ஆதித்தர்கள் மேலைவாசல் மண்டபப் படியிலிருந்து தம் பகையை வசூல் செய்வது வழக்கம். இதை மதிக்கவே மறவர்கூட்டணி சதி செய்துள்ளது. இதை வைத்துச் சிலர் சான்றோர் குல நாடார்களுக்குக் கோவிலில் நுழையத் தடை எனக்கதை கட்டுகின்றனர்.

பேராசிரியர் சா.மாசில்லாமணிநாடன் அவர்கள் எழுதிய 1931இல் வெளியிட்டுள்ள "பாண்டியதேச ஆதித்த வம்ச வரலாறு" என்ற நூலை நான் 1997, 2006ஆம் ஆண்டுகளில் மறு அச்சுச் செய்துள்ளேன். இந்த நூலின் 50ஆம் பக்கத்தில்..." ஆதித்தர்கள் மேல் பொறாமையும் துவேஷமும் கொண்ட சில கர்த்தாக்களால் அவர்கள் சில சுதந்தரத்தை இழந்தார்கள். அவைகளுள் முக்கியமானது ஆலயத்தில் மேலவாசல் பிரவேசமும் மண்டபத்தில் மகமை வசூல் செய்வதுமாகும்."

இந்த நிகழ்ச்சியையே வேலே 'நட்டாத்தியர் வரலாறு' நூல் கூறுகின்றது. ஆதித்தர்களுக்கும் நட்டாத்தியர்கும் நட்பு உள்ளமை இதிலிருந்து தெரியவருகின்றது.

1918ஆம் ஆண்டில் வெளியிட்ட 'நாடார் குல வரலாறு' என்ற நூலில் 30,31 ஆம் பக்கங்களில் ஏ.பி.ஜே.எம்.குலசேகரராஜ் அவர்கள் எழுதியுள்ளவற்றில் திருச்செந்தூர் கோவிலில் ஆதித்தர்களும் நட்டாத்தி நாடார்களும் செய்துவந்த கைங்கர்யங்களுள் சில பதிவுசெய்யப்பட்டுள்ளன. அவை வருமாறு:

'ஐப்பசி மாதத்தில் சுப்பிரமணியருக்கு திருக்கல்யாண உத்ஸவம் நடக்கும் போது, முதல் நாளில் மாப்பிள்ளை வீட்டுச் செலவாக ஆதித்த நாடார்களால் நடக்கும். மறுநாள் பெண்வீட்டு வகையாய், நட்டாத்தி ஜமீன்தாரான திருவழுதி நாடார் செலவில் நடக்கும்."

"மேற்படி சுப்பிரமணியர் கோவிலின் "அட்டவிசேஷம், மாஸ்த விசேஷம், ஆற்றுத் திருமஞ்சனம் இவைகளுக்காகவும், திருச்செந்தூரிலுள்ள நந்தவனம் பரிபாலனம், மடத்துத் திருவிளக்கு இவைகளுக்காவும் நட்டாத்தி -திருவழுதி நாடார் குடும்பத்தார் விட்டுக்கொடுத்த மானியச் சொத்துக்கள் சிலவற்றின் அக்தார் வேலை, மேற்படி திருவழுதி நாடர் குடும்பத்திலிருந்து வருகிறது.

இருபதாம் நூற்றாண்டிலும் நட்டாத்தியர் திருச்செந்தூர் கோவிலில் கைங்கர்யங்கள் செய்துவந்தது பதிவாகியுள்ளது, சான்றுகளுடன் தெரிகின்றது.

நட்டாத்தி நாடார்கள் பற்றிய ஆவணங்கள் ஆங்கிலேயர் காலத்தில் பதிவாகியுள்ளதை ப.யோ.தங்கசுவாமி அவர்கள் தம் நூலில் இணைத்துள்ளார். கி.பி.17ஆம் நூற்றாண்டிலிருந்து சான்றோர்குலச் சமுதாயத்தில் ஆவணப்படுத்தப்பட்ட சான்றுகளால் அடையாளப்படுத்தப்பட்டு வரும் இவர்கள் பற்றிய சமூகப் பண்பாட்டு வரலாறு பதிவுசெய்யப்படவேண்டியது இன்றியமையாதது.

தொகுப்பு:M.செசிலிஸ்டீபன்
இராஜாவூர், செல்:9486356746

# மரம் வளர்ப்போம் பசுமை நிற பனைமரம் வளர்ப்போம் தமிழக பசுமை பனைமர செழுமையே!!!

## நுங்கு, குறும்பல், வண்டு, பனம்பழம், பனம் கிழங்கு



**கலை வளம் நிறைந்த நம்
பனைமரச் சோலையுடைத் தமிழ்நாடு!**

பனம் பழங்கள் ஏரி, ஓடைகள், குளம், சிற்றாறுகள் வழியாக இடம் பெயர்ந்து பனை மரம் வளருகிறது. பனங்கிழங்கு கடற்கரை ஓரங்களில் உள்ள மரங்களின் கிழங்கு அதிகமான பனங்கிழங்கின் மணத்துடனும் நல்ல மாவு உள்ளதும் தடியாகவும் அதிக ருசியுள்ளதாகவும் இருக்கும் கடற்கரை உவரி கிழங்கு மிகவும் விரும்பி சாப்பிடக்கூடியது. உவரியில் பனங்கிழங்கு வியாபாரம் ஏராளமானோர் விற்பனை செய்வார்கள். அதிகமாக எல்லோருடைய வீட்டு முற்றத்திலும் பனம் விதைகளை மண்தோண்டி புதைத்து வைத்திருப்பார்கள் விளைந்ததும் எப்போது யார் கிழங்கு வாங்க வந்தாலும் உடனே தோண்டியும் கொடுப்பார்கள். இவ்விதம் பனங்கிழங்கின் ருசி பனை மரம் வளர்ப்பவர்கள் நன்றாக அறிவார்கள். உவரி பனங்கிழங்கின் ருசியும் பனங்கிழங்கின் மணமும் தனித் தன்மையை கொண்டது மாவுச்சத்து அதிகம் கொண்டது. பனைமரத்தின் ஓலைகள் மக்கள் வாழ்வாதாரத்தில் அதிகமான உபயோகத்தில் உள்ளது. கருமை நிறம் கொண்ட பனை மரம் உயரமாக நிமிர்ந்து வளர்ந்து நிற்கும் தாவரம் ஆகும். இதன் உச்சியில் பனை ஓலைகள் அடர்த்தியாக, அழகிய உருண்டை வடிவ பூச்செண்டு போன்று பிரதிபலிக்கும். ஓலைகளின் அடிப்பகுதி காய்ந்த ஓலைகளின் வரிசை இவை வெளிரிய வெண்மை நிறத்தில் காணப்படும் வில்வப்பூக்கள் போன்று. அதன் மேல் வரிசைகள் உச்சிவரை பசுமை நிற கரும் பச்சை நிறத்தில் செழுமையாக பூங்கொத்து வடிவம் அமைத்த அழகுடன் மலர்ந்து தோன்றும். பனை மட்டைகள் இவ்வோலைகளுக்கு பூக்களின் காம்பாக ஓலைகளை மரத்தோடு சேர்த்து இணைத்து பனைமரப்பூச்செண்டாக மரத்தின் தோற்றம் கண்டோரை மகிழச் செய்யும். பனைமரம் பனைமரப் பூச்செண்டாக நிமிர்ந்து நிற்கும்.

சங்க கால தமிழ் எழுத்துக்கள் முதன் முதலில் பதியப்பட்டது பனை ஓலைகளில். ‘ஓலைச்சுவடி’ ‘தெய்வப்புலவர் திருவள்ளுவர் கையில் எழுத்தாணியுடன் ஓலைச்சுவடிகள் அவர் கைகளில் இருப்பதை நாம் பார்க்கிறோம்.

பனை ஓலைகளில் இளம் ஓலைகளை குருத்து ஓலை என்று கூறுவோம். ஓலையில் கைவினை பொருட்கள் செய்யும் மங்கையர்கள் வேந்தியாரிடம் குருத்தோலையை வெட்டி போடும்படி கேட்பார்கள். வேந்தியார் பக்குவமாக வெட்டி போடுவார்கள். அதை வீட்டுக்கு கொண்டுவந்து முதலில் கட்டிப்போட்டு நிழலில், காற்றில் காய வைப்பார்கள் பின் சிறிய அளவுகோல் ஓலையூடாவை வைத்து சிறிய கத்தியால் அதை இஞ்சி அளவில் நீள நீளமாக ரிப்பன்போல் வகிர்ந்து எடுத்து மஞ்சள், நீலம், பச்சை, சிவப்பு, வைலட் நிறங்களில் வண்ணம் காய்ச்சி நிழலில் காய வைப்பார்கள். தண்ணீரை சூடாக்கி அதில் கலர் பவுடர் போட்டு சூடானதும் வகிர்ந்து எடுத்த ஓலை நாடாக்களை அந்த களில் போட்டு ஓலை நாடாக்களில் கலர் பிடித்ததும் வெளியே எடுத்து காய வைத்தால் வண்ணமாக ஓலை கைவினைப்பொருட்கள் செய்ய ஓலை தயாராகிவிடும். இந்த கலர் ஓலைகளினால் குழந்தைகள் விளையாட கூடிய சதுரவடிவ பெட்டி போன்று புனைந்து கைப்பிடியும் வைத்து அதன் உள்ளே சிறிய சிறிய கற்களைப் போட்டு சத்தம் வரும் கிலுக்கு செய்வார்கள். சிறிய கிண்ணிப்பெட்டி, மினாப்பெட்டி வீட்டு உபயோகப் பெட்டிகள், விசிறிகள், கீழே போட்டு உட்கார்ந்து சாப்பிட தடுக்குகள், தூங்குவதற்கு பாய்கள் செய்து விற்று பொருள் ஈட்டுவார்கள். மேலும் பெரிய அளவில் ஓலைகள் வகிர்ந்து பெரிய கடாப்பெட்டி, களவு முறம் போன்றவைகளை பெரியவர்கள் முடைவார்கள். கலர் ஓலைகளால் கைவினைப் பொருட்கள் செய்வதில் அன்னக்கிளிராசைய்யா எனது அக்காளும் கைதேர்ந்தவர்களில் ஒருவராக இருந்தார். பனைமர பச்சை ஓலைகளில் அதாவது காய்ந்த ஓலைகளில் தண்ணீர் கிணற்றிலிருந்து மொண்டு எடுக்க தோண்டி பட்டை செய்வார்கள் இது அரைவட்ட முக்கால் வட்ட கிண்ணம் போல் இருக்கும் அதை சேர்த்து கயிறு கட்ட கைப்பிடியும் இருக்கும். இந்த கைப்பிடியில் கயிறைக் கட்டி கிணற்றில் விட்டால் தண்ணீர் அதில் நிறையும் பட்டையில் கட்டப்பட்ட கயிறு பனம் நாரால் திரிக்கப்பட்டவை. தோண்டி கயிறு. இந்த கயிற்றை இழுத்து தண்ணீர் இறைத்து குடத்தில் ஊற்றுவோம். பனை ஓலைகள் முன்காலத்தில் கூரை வீடுகள் கட்ட உபயோகமானது இதை ஓலை குடிசை என்பார்கள். பச்சை பனைஓலைகள் பொதியும் உணவுகள் சீக்கிரம் கெடாமல் இருக்கும் காட்டிலிருந்து பனங்கிழங்கு வந்த பனம் கொட்டையின் தவண்கள், வெட்டிய நுங்குகள், காட்டில் கிடைக்கும் காளான், கொடுப்பை கீரை போன்றவைகளை பச்சை பனை ஓலை பொதியில் பொதிந்துக் கொண்டு போவார்கள். எந்த வகை இறைச்சியும் பச்சை பனை ஓலையில் பொதிந்து தான் விற்பனை ஆகும். வடக்கன்குளம் பெரிய கோவில்முன் இடதுபக்கம் முதல் வீட்டில் மாண்புமிகு திரு.சிராப்பு நாடார் கடையில் வியாழன் மற்றும் ஞாயிற்று கிழமைகளில் பச்சை பனை ஓலைகள் குவிந்து கிடக்கும் அவர் பச்சை பனை ஓலையில் தான் பொதிந்து வைத்து கறி கொடுப்பார். இவர் ஹிந்தி நடிகர் திரு.அமிதாப்பச்சன்போல் வெள்ளை நிறம் அவரைப் போன்ற உடல் பருமன் உயரம் வெள்ளை நிற மீசை, வெள்ளைநிற தலைமுடி, வெள்ளைநிற எட்டு முழ வேஷ்டி கட்டியிருப்பார் வெள்ளைநிற அரை கை கதர் சட்டை போல் தோன்றியது.

இவ்விதமாக குளிர்சாதனம் கண்டுபிடிக்கும் முன்னே, பச்சை பனை ஓலை குளிர்ச்சாதனப் பெட்டி உபயோகத்தில் இருந்ததை நம் பனைமரம் பெருமைப்படுகிறது. இவ்விதமாக பனைஓலைகளின் உபயோகம் மக்களுக்கு சுகாதார உபயோகியாக உதவியது. திருமண விழாக்களில் பனை நாரால் செய்த வண்ணநார் பெட்டிகள் அதிகமாக உபயோக பொருட்களாக உபயோகிக்கப்பட்டது. பெண் வீட்டார் பெண்ணுக்கு எடுத்து செல்லும் சீர்வரிசைகளில் முக்கியமான அரிசி, முறுக்கு, நெய் பலகாரங்கள் யாவும் பனைநாரால் முனையப்பட்ட வண்ணநார் பெட்டிகளில் தான் கொண்டு செல்லுவார்கள். மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டார் பெண்ணை மாப்பிள்ளை வீட்டுக்கு முதல்முறை கூட்டிக் கொண்டு விடும்போது மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டாரை முதல்முறை வரவேற்று உபசரிக்க கருப்பட்டி ஓண்டுகளை ஓலை பெட்டிகளில் போட்டு உண்ண கொடுப்பார்கள். இந்த இனிப்பு வழங்கும் முறையில் இருவீட்டாரும் இனிதே சேர்ந்து உறவு கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்பாக விளங்கியது.

சிறுவர்கள் காய்ந்த பனை ஓலையில் காத்தாடி செய்து சுழல வைத்து விளையாடுவார்கள். ஆலை பத்து இஞ்சி நீளத்தில் இரண்டு ஓலைகளை அழகாக கரைகளை செதுக்கி இரண்டையும் சிலுவை வடிவத்தில் மாட்டி நடுவில் உடைமுள்ளால் அச்சாணி போன்று குத்தி அதை காற்று வரும் திசையை நோக்கி காட்டுவார்கள். ஓலை காத்தாடி அழகாக காற்றில் சுற்றும். இப்போது உள்ள மின்விசை காற்றாடியை போன்று இந்த ஓலைக் காற்றாடியை கூரை வீட்டின் மேல் வைத்து காற்றாடியை காற்றில் சுழல்வதை பார்த்து சிறுவர்கள் மகிழ்வார்கள். காற்றாடி சோளம் தட்டையில் உடைமுள்ளால் குத்தி மாட்டி வைத்திருப்பார்கள். - தொடரும்..............



M.செசிலி ஸ்டீபன்.
இராஜாவூர்,செல்:9486356746

# தேன் - தேனீக்கள்:



ராணித்தேனீ முட்டையிடும் திறன் இழந்து முதுமை நிலை அடையும் போது வேலைக்காரத் தேனீ புதிய ராணித்தேனியை உற்பத்தியாக்குகிறது. புதிய ராணித்தேனீ வந்ததும் பழைய ராணித்தேனீயை இல்லாமல் ஆக்கிவிடுகிறது வேலைக்காரத்தேனீக்கள். ஏனெனில் ஒரு தேனீக்கள் கூட்டில் ஒரு ராணித் தேனீ தான் இருககவேண்டும் என்பது அவைகளின் நியமம். ராணித்தேனீ முட்டை செல்கள் சில வேளையில் ஒன்றுக்கு மேல் உற்பத்தியாகி வேலைக்கார ஈக்களால் ராஜஉணவு ஊட்டப்பட்டு இரண்டு ராணித்தேனீ உருவாகிவிட்டால், ஒரு குழு வேலைக்காரத்தேனீக்கள் புதிய ராணியோடு வெளியே தனி குடும்பபமாக மாறி தாய் கூட்டிலிருந்து வெளியேறி புதிய குடும்பத்தை ஆரம்பித்துவிடும் ஆகவே தேனீக்கள் வளர்ப்போர் கூட்டில் புதிய ராணித்தேனீ செல் இருப்பதை கண்டால் அதை அப்புறப்படுத்திவிடுவார்கள் அல்லது இல்லாமல் ஆக்கிவிடுவார்கள். இந்த ராயல்ஜெல்லி அதாவது ராஜஉணவு ஊட்டிய ராணி செல் உயர்தரம் வாய்ந்த ஊட்டச்சத்துடைய உணவு அதிக விலை மதிப்புள்ள உணவாக அதிக விலைக்கு விநியோகப்படுகிறது. மேலும் தேன் கூடு பலுகவைப்பதற்காகவும் ராணி செல்கள் கூட்டில் உற்பதி செய்து அந்த ராணி செல்லோடு ஒரு குழு ஈக்களை புதிய தேன் பெட்டியில் போட்டு வளர்ப்பார்கள் அல்லது எந்த தேன் பெட்டியில் ராணித்தேனீ இல்லையோ அந்த பெட்டியில் உள்ள அடையோடு ராணித்தேனீ செல்லை வைப்பார்கள் ராணி வெளிவந்து பின் அந்த குடும்பம் பலுகிவிடும் மூன்று நாட்களில் ராணித்தேனீ முட்டையிடும் பருவம் ஆகிவிடும் பின் ஆண் தேனீயுடன் இனச்சேர்க்கை ஆகி முட்டையிட ஆரம்பித்துவிடும். ஒரு முறை தான் ராணித்தேனீ, ஆண் தேனீயோடும் இனம் சேரும் பின் தன் உடல் சக்தி இருக்கும் வரை முட்டைகள் இடும் பல நூற்றுக்கணக்கான அறுகோண அறைகள் வேலைக்கார ஈக்கள் அடையாக கட்டியிருக்கும் அதில் ராணித்தேனீ முட்டையிடும். வேலைக்காரத்தேனீக்கள் எண்ணிக்கை பல நூற்றுக்கணக்காக ஆயிரம் எண்ணிக்கையில் இருக்கும் ஒரு குழு வேலைக்கார ஈக்கள் காலையில் சூரிய உதயத்தில் மதுசேகரிக்கும் வேலைக்கு போய்விடும். மற்றொரு குழு ராணித்தேனீ இட்ட முட்டைகளுக்கு உணவூட்டும். தரம் பார்த்து உணவூட்டும். ராணி செல்லுக்கு ராயல் ஜெல்லி ராஜஉணவு வேலைக்காரத்தேனீ

உற்பத்தியாகும் செல்லுக்கு மகரந்த கூழ் உணவு ஆண் தேனீ முட்டைகளுக்கு மகரந்தம் மட்டும் உள்ள உணவு ஊட்டும் செவிலியர் ஈக்கள்



மற்றொரு குழு தேன் அடையிலுள்ள கூட்டுக்கு வேண்டிய வெப்பத்தை தக்க வைப்பதற்கு வேண்டிய உஷ்ண நிலையை பராமரிக்க தங்கள் இறக்கைகளை வேகமாக அசைத்து காற்று வீசி காற்று உற்பத்தியாக்கி கூட்டின் வெப்பநிலையை நிலைக்கவைக்கும் ஆகவே கூட்டில் ரீம்..... ரீம்.... என்ற இரைச்சல் சத்தம் கேட்கும். ஒரு குழு தேனீ அவைகள் கூடுகளை சுத்தம் செய்யும் வேலையில் சுறுசுறுப்பாக இருக்கும் ஏதாவது தூரும்பு தூசி இலைகள் கூட்டில் இருந்தால் வெளியே அகற்றிவிடும். ஒரு குழு அவைகளின் கூட்டை சேதப்படுத்த எதிரிகள் வந்தால் (பல்லி, குளவி, ஓணான், கரடி, மனிதர்கள் இவையாவும் எதிரிகள்) இவைகளை மிகவும் ஆக்ரோசத்தோடு தங்களது கொடுக்குகளால் கொட்டி தாக்கி விரட்டும். ஒருமுறை கொட்டினால் பின் அதற்கு வாழ்வு இல்லை கொட்டிய இடத்தில் அதன் கொடுக்கும் இருந்துவிடும். மனிதர்களுக்கு கொட்டினால் அந்த கொடுக்கை கொட்டிய இடத்திலிருந்து எடுத்துவிடவேண்டும் அல்லது அந்த இடம் ஒருவித கடுப்பும் வீக்கமும் இருக்கும் சகிக்க முடியும் ஆனாலும் கொடுக்கு வராவிட்டால் டாக்டரிடம் சென்று அகற்றுவதுதான் சரி. இவர்கள் சிப்பாய் ஈக்கள் என்றும் கூறப்படுகிறது. ஆண் தேனீக்கள் இவைகள் ஒரு வேலையும் செய்யமாட்டார்கள் வேலைக்காரத் தேனீக்கள் சேமித்த தேனை உண்டு மகிழ்வார்கள் மாலைநேரத்தில் கூட்டுக்கு வெளியில் உல்லாச நடனமாடி மகிழ்வார்கள். இனபெருக்கத்துக்கு ஆண்தேனீ அதுவும் திறமை வாய்ந்த தரமான தேனீ, ராணித்தேனீ பருவமடைந்ததும் அதிலிருந்து ஒரு மணம் வரும் அப்போது ஆண்தேனீக்கள், ராணித்தேனீயை துரத்தும் ராணித்தேனீ ஆண்ஈக்கள் ஆகாயத்தில் பறக்கும் போட்டியில் எந்த ஆண்தேனீ ராணித்தேனீயை அடைகிறதோ அதுவே வெற்றி பெறும். -

தொடரும்..............................

## தோல்வியை ருசியுங்கள்! வெற்றியை ரசியுங்கள்!! Aachi

## தொழில் மேதை.ஏ.டி.பத்மசிங் ஐசக் வெற்றிப் படிகள்

19.ஆச்சி ஒரு ஆரோக்கிய பல்கலைக்கழகம்!

அமெரிக்காவின் மாபெரும் தலைவர் மார்ட்டின் லூதர்கிங்கின் வெற்றிப் பொன்மொழிகளில் உங்களுக்கு மிகவும் பிடித்தவை?

1929ம் ஆண்டு பிறந்து 1968ஆம் ஆண்டுவரை வாழ்ந்த மாபெரும் அமெரிக்க தலைவரான அவருக்கும் - நமது காந்திஜிக்கும் நிறைய ஒற்றுமைகள் உண்டு. கறுப்பான மக்களின் உரிமைகளுக்காக மகாத்மாவின் அகிம்சை வழியில் அவர் போராடினார். அதனால் கறுப்பு காந்தி என்று அழைக்கப்பட்டார். அவரைப்போல் இவரும் சுட்டுக்கொல்லப்பட்டார்!

மார்ட்டின் லூதர் கிங்கின் பொன்மொழிகளில் எனக்கு பிடித்தமானவை.

ஒரு எதிரியை நண்பனாக மாற்றும் திறன்படைத்த ஒரே சக்தி அன்பு மட்டுமே!

இருளால் இருளை நீக்க முடியாது. ஒளியால் மட்டுமே அதை செய்ய முடியும். அதுபோல் வெறுப்பால் வெறுப்பை நீக்க முடியாது. அன்பால் மட்டுமே அதை செய்ய முடியும்.

வரையறுக்கப்பட்ட அவமானங்களை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் ஒருபோதும் எல்லையற்ற நம்பிக்கையை இழந்துவிடக்கூடாது.

சரியான செயல்களை செய்வதற்கு நேரம் எப்போதும் சரியாகவே இருக்கிறது.

-ஏ.டி.பத்மசிங் ஐசக்

காலை நேரம்!

"எல்லா சாலைகளும் ரோமை நோக்கி..." என்று சொல்வார்களே, அதுபோன்று அந்த பகுதியில் உள்ள கார்கள், பஸ்கள், இருசக்கர வாகனங்கள் எல்லாம் (சென்னை, கிழ் அயனம்பாக்கம்) இந்திரா நகர் சாலையை நோக்கி சென்று கொண்டிருந்தன!

அவர்கள் எல்லோரும் எங்கே சென்று கொண்டிருக்கிறார்கள்?



பொதுவாக வேலைக்கு போகிறவர்களை எளிதாக அடையாளம் கண்டுபிடித்துவிடலாம். தூக்கமற்ற கண்களோடும், ஏக்கம் நிறைந்த முகத்தோடும்,உற்சாகமற்ற உடல் மொழியோடும் சென்று கொண்டிருப்பார்கள்.

வேலையையே அவர்கள் ஒரு வேலையாக கருதுவதால்தான் அவர்களது நடையில், தோற்றத்தில் அப்படி ஒரு உற்சாகமின்மை தென்படும். வேலையை யார் எல்லாம் சுமையாக கருதுகிறார்களோ அவர்களது முகத்தில் எல்லாம் மகிழ்ச்சி மறைந்து, இறுக்கம்தான் காணப்படும்.

இப்போதெல்லாம் கல்லூரிக்கு படிக்கச்செல்லும் மாணவர்கள் முகத்தில்கூட கலக்கமும், கவலையும்தான் தென்படுகிறது! அவர்களது எதிர்காலம் பற்றிய கேள்விக்குறிதான் அந்த கலக்கத்திற்கும், கவலைக்கும் காரணம்!

ஆனால் நாம் அந்த சாலையில், அன்றைய காலை நேரத்தில் பார்த்தவர்கள் முகத்தில் மகிழ்ச்சி. நடையில் உற்சாகம்! தோற்றத்திலும் பளிச்சென்ற பொலிவு!



அவர்கள் எங்கே செல்கிறார்கள்? என்று பார்த்தால், நான் செல்ல வேண்டிய அதே "நாசரேத் புட்ஸ் பிரைவேட் லிமிடெட் தொழிற் சாலைக்குள்தான் அவர்களில் பெரும்பாலானவர்கள் நுழைந்தார்கள். (இது ஆச்சி மசாலா தயாரிப்பு நிறுவனத்தின் பிரம்மாண்டமான தொழிற்சாலை) கூட்டம் கூட்டமாக எல்லோரும் அங்கே செல்கிறார்கள். ஒருவரை ஒருவர் வரவேற்கும் முகத்தோடு காலை வணக்கத்தை புன்னகையோடு வெளிப்படுத்திக்கொள்கிறார்கள்.

உற்சாகமும், ஆரோக்கியமும் நிறைந்த இந்த பணியாளர்கள் அனைவரும் ஆச்சி உணவுப்பொருட்கள் தயாரிப்பு நிறுவனத்தின் தூண்கள். சர்வதேச அளவில் சிறப்பு பெற்றிருக்கும் ஆச்சி நிறுவனத்தின் பெரும்பாலான வகை மசாலாக்கள் இங்குதான் "டன்" கணக்கில் அரைக்கப்பட்டு பேக் செய்யப்பட்டு, இந்தியா முழுமைக்கும் "சப்ளை" செய்யப்படுகிறது.

ஆற்றல் நிறைந்த மனிதர்களும், அற்புத சக்தி நிறைந்த உலகப் புகழ்பெற்ற இயந்திரங்களும் ஒருங்கிணைந்து உழைக்கும் அந்த தொழிற்சாலையை பார்க்கவே பிரமிப்பாக இருக்கிறது. மனிதர்களும், நவீன தொழில்நுட்பங்களும் அங்கே சங்கமித்திருக்கின்றன.

அங்குள்ள உயர் அதிகாரிகள் முதல் பணியாளர்கள் வரை அனைவரும் சுத்தம், சுகாதாரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். தலையில் இருந்து முடி எதுவும் உணவுப்பொருட்களில் விழுந்துவிடக்கூடாது என்பதற்காக விசேஷமாக வடிவமைக்கப்பட்ட "கேப்" அணிந்து கொள்கிறார்கள். மூக்கு, வாய் போன்றவைகளை "மாஸ்க்" மூலம் மூடிக்கொள்கிறார்கள். பெண்கள் பூ, பொட்டு வைத்திருப்பதில்லை. கண்ணாடி வளையல்கள் போன்ற உடையக்கூடிய எந்த அணிகலன்களையும் அணிந்திருப்பதில்லை. நகங்களை முறைப்படுத்தப்பட்டபடி வெட்டிவிருக்கிறார்கள். செல்போன் உள்பட எந்த பொருளையும் அவர்கள் எடுத்துச்செல்வதில்லை. அணி அணியாக அவரவர் பணிப் பகுதிகளுக்கு செல்கிறார்கள்.

உள்ளே நுழைய எனக்கும் ஏகப்பட்ட கட்டுப்பாடுகள். வாட்ச் கழற்றப்பட்டது. பர்ஸ், செல்போன் உள்பட அனைத்து பொருட்களையும் வாங்கி கவரில் போட்டு உயர் அதிகாரியின் அறைக்குள்ளே வைத்துக்கொண்டார்கள். காலணிகள் ஓரமாக ஒதுக்கப்பட்டன. கேப், மாஸ்க் அணிந்து கொள்ள வேண்டியதானது.

இதோ மணம் பரப்பும் அந்த மசாலா தொழிற்சாலைக்குள் நுழைந்துவிட்டேன்.

- தொடரும்.........


T.Bernet Johnson M.E.,MBA., Managing Director. 72009 06699 / 90032 86677 7200506699.



JEHOVAH

GROUP OF COMPANIES

•Lab Ezuipments Manufacturing •Industrial Lunricant Distributor

•Automotive Lubricant Distributor •Industrial Equipments & Spares

E-jehovahjirehengineering@gmail.com / W: www.jehovahengg.com

No:60, 4th Main Road, L&T Colony, CRR Puram, Manapakkam, Chennai-125



# முதுமை ஞானத்தின் முதிர்ச்சி.

M.செசிலி ஸ்டீபன், இராஜாவூர், செல்:9486078329.

ஒரு தலைமுறை முதிர்கிறது. மறுதலைமுறை மலர்கிறது. உழைத்தான் உழைத்து உருவாக்கிய செல்வங்களால் அவனுக்கு கிடைக்கும் பலன்கள் உழைத்த எல்லா உழைப்பும் அவனுக்கு பிறகு அவனுக்கு உரிமையாளியான அவன் சந்ததியையே அடைகின்றது. அவன் அதை பாதுகாப்பானோ என்பது கேள்விக் குறிதான். தான் வேர்த்து சேர்த்த செல்வத்தை உழைக்காத ஒருவனுக்கு விட்டுவிடுகிறான். அச்செல்வத்தை சேர்க்க அவன் வாழ்நாள் எல்லாம் அலுப்பும் அலைச்சலும் கொண்டான். இரவில் முதலாய் அவனுக்கு ஓய்வில்லை. தான் சேர்த்த செல்வத்தை தன் உழைப்பின் பலனை உண்டு கழித்தும் மகிழ்வில்லை, தனக்கு பின் தனது உரிமையானவனுக்கு சேர்த்து வைப்பதில் கவனமாக இருக்கிறான். இவ்வாறு வருந்தி உழைத்து சேர்த்து வைப்பதனால் அவன் முதுமையில் அவனுக்கு என்ன பயன் என்று கேட்டால் அதுவும் கேள்விக்குறிதான். அவன் தன் காலத்தில் நல்லதாய் தான் இருந்தான், பல நன்மைகளை செய்தான். ஆனால் எதிர்காலத்து காரியங்களை முன்னதாகவே யோசிக்காத செல்வந்தனான முதியவனை விட அன்றாடம் யாசித்து வாழ்ந்த ஏழையே மேல் என்போம்.

இனி முதுமையை போற்றுவோம். அவர்கள் பாதுகாப்புக்கு நாம் இளைஞர்கள் பொறுப்பேற்போம். ஒவ்வொருவனும் தன் அறுபது வயதுக்கு மேல் முதுமை அடைகிறான். அதுபோன்றே தன் குழந்தைகளும் இளைஞராகிறார்கள். அவர்களுக்கு அவர்களது வாழ்க்கை முன்னேற்றம் ஆரம்பம். தன் சொந்த முயற்சியால் செல்வம் சேர்த்து முன்னேறுவதுதான் அவன் நோக்கம். பெற்ற மக்களை பராமரித்தல் அஃதோடு தனது முதிய பெற்றோரை கவனித்தல் போன்ற பொறுப்பில் மூழ்குகிறான். இங்கே முதியோர், இளைஞர் என்ற இரு வகையினர்களின் வாழ்க்கை மாற்றங்கள். இளைஞர்கள் வாழ்க்கையை கற்றுக்கொண்டிருப்பவர்கள், தண்ணீரில் நீந்திக் கொண்டிருப்பவர்கள். முதியோர்கள் வாழ்ந்து அறிவில் முதிர்ந்து ஞானியானவர்கள். வாழ்க்கை நதியில் நீந்தி கரை சேர்ந்தவர்கள். இரு வகையினரும் ஒருவருக்கொருவர் புரிந்து உதவிகரங்களாக வாழ்கின்றார்கள் என்பதே மகிழ்ச்சி.

இளைஞர்களுக்கு வாழ்க்கை ஆரம்பம் செல்வம் தேவை. முதியோருக்கு சமூக பாதுகாப்பு மற்றும் மருத்துவம் தேவை. இருவகையினரும் இதை உணர வேண்டும். முதியோருக்கு மருத்துவக் காப்பீடு மிகவும் பாதுகாப்பாக இருக்கும். மருத்துவமனைகளில் முதியோர் சிறப்பு மருத்துவ வசதிகளை செய்து கொடுத்து உதவுவது நல்லது. இவ்வித முதியோர் நல வளர்ச்சிக்காக சமூகமும் ஆட்சியாளர்களும் முன்வர வேண்டும். முதுமை எல்லோருக்கும் உரியதே. நாளை நமதே. எதிர்கால நலனை பேண நல்ல திட்டங்கள் தீர்மானங்கள் நிறைவேற்ற வேண்டும்.

முதியோர்கள் பலர் தனது பொறுப்புகளை நிறைவேற்றி விட்டு தனியாக வாழ்கின்றனர். ஏனெனில் அவர்களின் பிள்ளைகள் வேலை தேடி செல்வம் சேர்க்க வேற்று நாடுகள், வேற்று இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளார்கள். பெற்றோர்களை கவனிக்க அவர்களால் இயலாமலிருக்கிறார்கள். ஆகவே முதியோர்கள் தங்களை தாங்களே பாதுகாத்துக் கொள்ளும் கட்டாயத்தில் உள்ளார்கள். இவர்கள் தங்கள் சொந்த சேமிப்பின் வருமானம், பூர்வீக சொத்துக்களை பாதுகாப்பது அவசிய ஆதாரமாகும் என்பதை அறிவுரையாக கூறலாம். இவற்றால் அவர்கள் கௌரவத்தோடு வாழலாம்.



வாழ்க்கையில் முதுமை பருவமும் மற்ற பருவங்களைப்போன்று மகிழ்ச்சியோடு வாழ உரிமையுள்ள பருவமே. கலங்கும் பருவம் கிடையாது. அது ஒரு அரசாணையை, அரசதிகாரங்களை தன்னுள்ளே கொண்ட கம்பீர பருவம். சமூகத்தில், நீதி ஆலோசனைகள் கூறுவது இளைஞர்களுக்கு நல்வழி காட்டுதல் போன்ற தலைமைத்துவப் பருவம். "வயதாகிவிடுவது ஒதுக்கப்படும் பருவமல்ல, அது மதிக்கப்படும் பருவமே". அவர்கள் தங்கள் வழக்கங்கள், பழக்கங்கள் யாவும் தன்னகத்தே வைத்து அவர்கள் தொடர்ந்து போய்க் கொண்டிருக்க வேண்டியது அவர்கள் வாழ்வில் அவர்களை தாம் தகுதியை மேன்மைபடுத்தும்.

தன் வீட்டில் தன்னை சார்ந்த இளைஞர்கள் தங்கள் வேலைகள் பணிகளின் காரணமாக சோர்வோடும் தன் மனைவி மக்களை கவனிப்பதில் இருக்கும்போது, தன் பெற்றோர்கள் நன்றாகத்தான் இருக்கிறார்கள் என்ற நினைவு. மனதோடு பெற்றோர்களிடம் நேரம் கொடுப்பதற்கு தாமதமாகிவிட்டால் ஒதுக்கப்பட்டு விட்டதாக உணராமல் அவர்களது நிலைமையை ஏற்று அவர்கள் நிலைமைக்கு ஏற்ப ஒத்துப்போகும் உள்ளத்தோடு ஏற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும். எத்தகைய தாழ்வு மனப்பான்மையும் தன்னுள் ஏற்றாமல் இருப்பது தன்மானம் காக்கும் உயர்மையாகும்.

சொந்த வீட்டில் எப்போதும் ஒருவருக்கொருவரை மதிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது முதுமையின் தளர்ச்சிதான். முதுமை குழந்தை பருவமாக மாறுகிறது. தவிர்க்க முடியாத ஒரு தாழ்வு உணர்வுக்கு தள்ளப்படுகிறது. மயிலே மயிலே இறகு போடு என்றால் கிடைக்காது. முதியோர் தான் மதிப்பை எடுக்க வேண்டும். வீட்டில் எந்தவொரு காரியத்திலும் பெற்றோரையும் கலந்து செய்ய வேண்டும். இல்லை என்றாலும் முதியோர்கள் இது இளைஞர்கள் விவகாரம் என்று பெரிய மனதோடு தட்டிவிட வேண்டும். விட்டுக் கொடுக்க முயற்சிக்க வேண்டும்.

குழந்தைகள், பெற்றோர், தாத்தா, பாட்டி கொண்ட குடும்பம் பேருபெற்ற பாக்கியமான குடும்பம். பிள்ளைகள் தாத்தா பாட்டியோடு கூடி சுதந்திரத்தோடு விளையாடுவார்கள். இளைஞர்களும் தங்களது இளம் வயதில் பெற்றோர்களிடம் வழக்கமான வாழ்ந்த முறையோடு வாழ்க்கையை தொடர்கிறார்கள்.

பெற்றோர்களோடு சேர்ந்து வாழ்வது இருவகையினருக்கும் பெருமை மட்டுமல்ல, மதிப்பும், பாதுகாப்பும், பலமும், தைரியமும் ஆகும். ஒரு புனிதமான இல்லமாகவும் ஏவரன் மயமான தன்மையுடையதாகவும் அமையும்.

முதியவர்களும், சிறார்களும் தங்கள் நிலைமை, தகுதி, திறமை, தன்மானம், பொது அறிவு வளர்ச்சி, சமூக பணிவுகளில் தளர்விட்டு தனக்கும் தன் வீட்டுக்கும் தன் ஊருக்கும் உகந்தவர்களாக என் உலகுக்கே உகந்தவர்களாக வாழ வழிகாட்டும். முதுமையை வாழவைப்போம், முதியோர் இல்லம் நம்வீடே என்று மகிழ்வோம். நம் முதியோர்கள் இல்லமே நமது முதுமையின் இல்லம் தனித்து வாழும் நிலையில் உள்ள முதியவர்கள் தங்கி வாழும் ஆதரவில்லம் முதியோர் இல்லம் நம் இல்லம்.

# V.G.சந்தோஷம்-88

வி.ஜி.சந்தோஷம் அவர்களுக்கு வயது 88 இந்த நன்நாளில் அவர்களை மனமார வாழ்த்துகிறேன். **V.G.P. என்றால்** "Very Good Person" என்று ஓர் அர்த்தம் உண்டு. ஆம், இவர்கள் வெரிகுட் நபர்கள். தமிழகத்தில் 1970-களில் ஒரு சமுதாய புரட்சி நடந்தது. சாமானியனும், உயர் வாழ்வு வாழலாம், ஒரு பாமரனும் பணக்காரனாகலாம், என்ற எண்ணத்தை காட்டிய காலம் அது. அதற்கு வழி வகுத்தவர்கள்.

**"எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்"** என்ற தாரக மந்திரத்தோடு வாழ்ந்தவர்கள் இந்த சகோதரர்கள். இவர்கள் குடும்ப பாசத்தையும் சகோதர ஒற்றுமையையும் உலகுக்கு எடுத்துக் காட்டியவர்கள் ஆவார்கள். வி.ஜி.சந்தோஷம் அவர்கள் ஒரு சிறந்த தளபதியாகவே விளங்கினார். வி.ஜி.பன்னீர்தாஸ் அண்ணாச்சியின் திட்டங்களை அப்படியே நிறைவேற்றி காட்டியவர் வி.ஜி.சந்தோசம் அவர்கள்தான். **ராமாயணத்தில் வரும் லட்சுமணனாக இருந்து வி.ஜி.பி.குடும்பத்தை வளர்த்தவர் சின்ன அண்ணாச்சி தான்.** நான் அவர்களோடு 60 ஆண்டுகளாக நெருங்கி பழகியவன், என்ற முறையில் அவர்களது எண்ணங்கள் செயல்கள் அத்தனையும் கண்கூடாக பார்த்திருக்கிறேன். சின்ன அண்ணாச்சி எதை செய்தாலும் வி.ஜி.பி. நிறுவன வளர்ச்சிக்காகவே செய்தார்கள்.

சொல்லப் போனால் உடல், பொருள், ஆவி அத்தனையும் தனது நிறுவனத்தின் வளர்ச்சிக்காகவே செலவளித்தார். கருமமே கண்ணாயினர் என்பார்களே அதுபோல, பெரிய அண்ணாச்சி போட்ட திட்டம் வெற்றி பெறும் வகையில் கருமமே கண்ணாயிருப்பார்கள். ஒருமுறை வி.ஜி.பி.நிர்வாகத்திற்கு சிறிது சோதனை வந்த காலத்தில் சிறிதும் கலங்காது அந்தமான், சிங்கப்பூர், மலேசியா, அரபு நாடுகள், பம்பாய் போன்ற இடங்களுக்கு சென்று தங்கள் வியாபார நிலைமையை தலைநிமிர செய்த செயல் ஒரு சாதனையாகவே கருதப்படும். **வி.ஜி.சந்தோஷம் அவர்களின் வாழ்க்கை ஒரு வாழ்க்கை தத்துவம் நிறைந்தது.** தன்னம்பிக்கையோடு முன்னேற துடிக்கும் இளைஞர்கள் அவரை பின்பற்றினால் வாழ்வில் உயர்நிலைக்கு வருவது திண்ணம்.

படிப்பறிவு குறைவாகவே இருந்த அவர் தனியாரிடம் கற்று ஆங்கிலப்புலமை மற்றும் கவிதை புலமை அத்தனையும் பெற்று இந்த **பெரிய உயர் கல்வி கற்றவர்களுக்கு மேலாக விளங்குவதை இளைஞர்கள் பின்பற்றி வரலாம்.**

குடும்ப பாசத்தில் அண்ணாச்சி ஒரு உதாரண புருஷர் தன்னை பெற்ற அன்னை சந்தனம்மாள் அவர்கள் மேல் வைத்திருக்கும் பாசம் ஈடு இணையற்றது எங்கு சென்றாலும் அவர்களது ஆரவாரத்தோடுதான் செல்லுவார்கள் அது போல் வீட்டிற்கும் வந்ததும் தன் தாயை பார்த்து தன் பாசத்தை வெளிப்படுத்தியபின் தான் தனது மனைவியையே பார்க்க செல்லுவார். முன்னேற துடிக்கும் இளைஞர்கள் இதை பின்பற்றலாம்.

சின்ன அண்ணாச்சி பெரிய அண்ணாச்சி மேல் வைத்திருந்த மரியாதை புராணங்களிலும் சரித்திரத்திலும் நாம் கற்றதை விட பிரமையாயிருக்கும் பெரிய அண்ணாச்சி முன் இவர் சரிக்கு சமமாக அமர்வதே கிடையாது அண்ணாச்சி சொல்லும் செயல்களை உற்று கேட்பாரே அன்றி அவருக்கு சமமாக பதில் பேசியதே இல்லை. கொடுத்த வேலையை ராமாயணத்தில் ஆஞ்சநேயர் சஞ்சீவி மலையை பெயர்த்தெடுத்து வருவதை போல் ஒரு செயலை செய்து முடிப்பார். லட்சுமணனை போன்று சகோதர பாசத்தை பொழிவார். பெரிய அண்ணாச்சிக்கு ஒரு வெற்றி தளபதியாகவே செயல்பட்டார் முன்னேற துடிக்கும் இளைஞர்கள் இதை பின்பற்றலாமே.

குடும்பத்தில் தன் அன்னைக்குபின் ஒரு தாயாக மதிப்பளித்தது பெரிய அண்ணியை தான் அவர்கள் ஆலோசனையும் முடிவும் தான் இறுதி எனலாம். அவர்களுக்கு உற்ற சேவகனாக செயல்பட்டு வெற்றி கண்டவர் வி.ஜி.சந்தோசம் அவர்களும் வாழ்வில் முன்னேற துடிக்கும் இளைஞர்கள் அவரை பின் பற்றலாமே.

**தனது வாழ்க்கையை ஜீரோவில் ஆரம்பித்து தனது உழைப்பாலும் நல் திறமையாலும் உலகம் மெச்சும் அளவிற்கு ஹீரோவாக வளர்ந்தவர்.** அது மட்டுமா மத நல் இணக்கத்துக்கு உதாரணமே சின்ன அண்ணாச்சி தான். தான் ஒரு கிறிஸ்தவராயிருந்தாலும் ஏதாவது பண்டிகை என்றால் இந்து கோவிலுக்கோ இஸ்லாம் கோவிலுக்கோ சென்று அவர்கள் முறைப்படி பின்பற்றி எவரது மனமும் கோணாதபடி சிரித்த முகத்தோடு விடைபெறும் மனப்பான்மையிலும் மெச்சத்தக்கது. வாழ்வில் முன்னேற துடிக்கும் இளைஞர்கள் இவரை பின் பற்றலாமே!

தமிழ் தமிழ் என்று பலரும் தன்னைப் பற்றி பெருமை பேசும் இக்காலத்தில் திருவள்ளுவரை தனது மனதில் இருத்தி வள்ளுவ பக்தனாக அவரது சிலையை உலகெங்கும் பரவ செய்யும் வள்ளுவர் பக்தர் அல்லது **திருவள்ளுவர் தாசனாக திகழ்கிறார்கள்.**

அதுபோலவே அரசியலில் அனைத்து தலைவர்களுக்கும் நண்பராயிருந்து அரசியல் நல்லிணக்கத்துக்கு ஒரு உத்தமராயிருக்கும் இவரை பின்பற்றி தன் வாழ்வில் முன்னேற துடிக்கும் இளைஞர்கள் இவரை பின்பற்றலாம்.

ஆகவே வி.ஜி.சந்தோசம் அவர்களைப் போல நல்ல சிறந்த மாமனிதர்கள் லட்சத்தில் ஒருவர் தான் பிறக்க முடியும். தெய்வ புலவர் திருவள்ளுவர்பக்தனாகிய இவர் ஒரு தெய்வ மகன் என்றே கூறலாம். இவரது இந்த பிறந்த நாளில் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன்.

இவண். நாடார் முரசு ஆசிரியர் திரு.கே.எம்.ஜூலியன் நாடார்.

தோற்றம்:
14.4.1950

மறைவு:
28.8.2020



## நான்காம் ஆண்டு நினைவு அஞ்சலி!

**H.வசந்தகுமார்**

அவர்கள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்.

# T.T.S.S.நாடார் திருமண தகவல் தொடர்பு நிலையம்

பு.எண்:48, ப.எண்:23, போஸ்டல்காலனி 1வது தெரு,
மேற்குமாம்பலம், சென்னை-33. போன்:9710267593,
வாட்ஸ்அப்:9710267593.

ஆலோசகர்:S.K.மகாலிங்கம் நாடார், எங்களிடம்:இந்து நாடார், நெல்லை-தூத்துக்குடி மற்றும் அனைத்து மாவட்ட ஆண்/பெண் வரன்கள் (B.E.M.E, MBA, B.Tech, MCA) படித்து வேலைபார்க்கும் மற்றும் வியாபாரிகள் ஜாதகங்கள் உள்ளன. உங்கள் மகன், மகள் திருமணத்திற்கு தொடர்பு கொள்ளவும்.


# உறவுகள்!

**95.ஆண்டவர் என்னும் இறைப்பேராற்றல்**

அல்லா என்பார் சில பேர்கள் அபன், அரசன் அரி என்பார் சில பேர்கள் வல்லான் அவன் பரமண்டலத்தில் வாழும் தந்தை என்பார்கள். எல்லாம் இப்படிப் பல பேசும் ஏதோ ஒரு பொருள் இருக்கிறதே அந்தப் பொருளை நாம் நினைத்து அனைவரும் அன்பாய்க் குலவிடுவோம். எந்தப்படியாய் எவர் அதனை எப்படித் தொழுதால் நமக்கென்ன? நிந்தை பிறரைப் பேசாமல் நினைவிலும் கெடுதல் செய்யாமல் வந்திப்போம் அதை வணங்கிடுவோம் வாழ்வோம், சுகமாய் வாழ்ந்திடுவோம் என்று நாமக்கல் கவிஞர் என்று போற்றப்படும் வெ.இராமலிங்கம் பிள்ளை அவர்கள் கவிதை இயற்றியுள்ளார். அவர் கூறியபடி, பலர் பலவிதமாக இறைவனோடு உறவு கொண்டு வருகின்றனர்.

கற்காலம் கண்ட கடவுள்:

கற்காலத்தில் வாழ்ந்த மனிதன் நெருப்பை, நீரை, மரத்தை, பறவையை, சூரியனை கடவுளாகக் கண்டான். கடவுளைக் கண்ட மனிதன், நம்மைப் படைத்தவர் கடவுள். அவரே நம்மை வழி நடத்துகிறவர். நம்மை மட்டுமில்லாது இவ்வுலகையும் அவரே படைத்தார். அவரில்லாமல் ஓர் அணுவும் அசையாது, அவர் நம்மைக் கண்காணிக்கிறார், நாம் தவறு செய்தால் அவர் தண்டிப்பார். நாம் நல்லது செய்தால் அவர் நமக்கு நன்மையே செய்வார். நல்லவர் சொர்க்கம் அடைவார்கள் என்றும், தீமை செய்பவர்கள் நரகம் செல்வார்கள் என்றும் நம்ப வைத்தார்கள். இது ஒரு நாளில் நடந்திருக்க முடியாது. இந்த முடிவுகள் நிலைநிறுத்தப்பட அவர்கள் பல ஆண்டுகள், பல தியாகங்கள் செய்திருக்க வேண்டும். எது எப்படியாயினும், கடவுள் என்று ஒருவர் இருக்கின்றார் என்று இன்று இவ்வுலகம் நம்புகின்றது. அந்த இறைவனோடு பலர் உறவு கொள்ள முயற்சி செய்தனர். அவர்களைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற முயற்சி செய்ததே ஆன்மீக உறவுகள்.

இறைவனுடன் உறவு கொள்ள உதவும் பிரார்த்தனை!

எல்லா நதிகளும் ஓர் சமுத்திரத்தில் சங்கமிப்பது போல, எல்லா மார்க்கங்களும் (வழிகளும்) ஒரே இறைவனை நோக்கியே செல்கின்றன. ஆன்மீக உறவுக்கு மனிதன் பிரார்த்தனையைக் கருவியாகப் பயன்படுத்துகிறான். அவன் ஏற்றுக்கொண்டுள்ள இறைப்பேராற்றலை (கடவுளை) நோக்கி, அவன் பிராத்தனை வழியே உறவு கொள்கிறான். பிரார்த்தனை எதற்கு என்று கேட்பதை விட, அதன் பயனாக நம்மில் உண்டாகும் தெளிவு, நம்முடைய நிலை எந்நிலையில் உள்ளது என அறியலாம். இறைவனோடு உறவுகொள்ள பிரார்த்தனை தேவை என்பது ஒரு காரணமாக இருந்தாலும் நம்முடைய எந்த முயற்சியும் பிரார்த்தனையின்றிச் செய்தால், அது முறையாகாது என்பதல்ல, அது கட்டாயம் செய்யப்பட வேண்டிய தொன்றாகும். ஆண்டவருடைய அனுக்கிரகம் கிடைக்காமல், மனிதன் எந்த விதத்திலும் வெற்றி பெற முடியாது ஈஸ்வர, அல்லா, தேரேநாம் (இயேசு) என, உலக மாந்தர்கள் அவரவர்களுக்கு விருப்பமான, நம்பிக்கையான பெயர்களில் இறைவனை அழைக்கின்றனர் என்பதே உண்மை. அறிவுக்கு எட்டாத ஆண்டவரை மனிதன் தன் சிற்றறிவைக் கொண்டு எட்டிப் பிடிக்க முயற்சிக்கின்றான் என்பதும் மறுக்கவியலாத உண்மையாகும்.

மனிதன் தன் பிரார்த்தனையால் இறைவனை அழைக்கவும் அடையவும் முயற்சிக்கின்றான். ஆண்டவர் மனிதனை அறிந்திருக்கிறார். எனவே, அவன் கேட்பதற்கு முன்பாகவே அவனுக்குரிய தேவைகளை அளிக்கின்றார். இருப்பினும் மனிதன் தன் உள்ளத்தை ஆண்டவனிடம் கொட்டிவிட வேண்டும் என்ற ஒரு நிலையில் பிரார்த்தனை வழியே ஆண்டவரிடம் உறவுகொள்ளப் பிரார்த்தனை மிக மிக அவசியமாகிறது. மனிதனுக்குள் இருக்கும் தெய்வத்தன்மையே இறைவனோடு உறவுகொள்ள உந்தும் சக்தியாக உருவெடுக்கிறது. - தொடரும்........



# V.L.வெள்ளையா நாடார்

## ரியல் எஸ்டேட்



V.Shankarlingam

V.L.Vellaya Nadar

## V. SHANKARLINGAM MOBILES

**Available All Cell Phone & Accessories etc...**
**No:6, Vijayaragavapuram, P.V.Rajamannar Salai, Chennai-93**
**Cell:9384728151. 9841511234, 9786111234, 044-43540234**



V. Mohanraj



Prop.S.Balakrishnan
(FOR HIRE CENTRING SHEET, COLUMN BOX, SPAN, PROPS ETC.,)

## SELVAM TRADERS

**New No : 7, Old No : 6, Medavakkam Main Road,**
**Madippakkam, Chennai- 600 091**
**Ph: 9841193884, 044-22242096**



ஒன்று படுவோம்..!



வென்று காட்டுவோம்..!!



## நினைவு அஞ்சலி

ஜூலை 29

நம் குலத்தோன்றல்

சன் பிரஸ் குழும நிறுவனர் அய்யா M.J.சிரதார் சிங்

அவர்களின் மனைவி

திருமதி.P.பாபி அம்மையார்

அவர்களின்

14-ஆம் ஆண்டு நினைவு தினத்தில்

அவரது நினைவை போற்றுவோம்...!

நிர்வாகக்குழு

இந்திய நாடார்கள் பேரமைப்பு

# நாடார் திருமணச் சடங்குகள்

--எஸ்.ஏ.இராம சந்திரபோஸ்....

**வரதட்சணைக் கொடுமை**

இவ்வாறெல்லாம் நடைபெற்று வந்த நிலைகள் சமீப காலத்தில் அடியோடு மாறிவிட்டன. அன்று நாடார் சமுதாயத்தில் விலை கொடுத்து பெண்ணை வாங்கியவர்களும், மற்றும் பேர்பாதி நகை பூட்டி மணம் செய்த மேற்கூறிய நாடார் இனத்தவரும் இருந்த சீரிய நிலைமாறி, தற்போது ஒரு வரன் பெண் வீட்டாரின் செலவிலேயே ஆயுள் முழுமையும் வாழ்க்கை நடத்தக்கூடிய அளவில் பெண் வீட்டாரிடம் அபரிமிதமான அளவில் நகை, தொகை, சீர் சிறப்புகளுக்கு ஒரு பட்டியல் கொடுத்து அவை அத்தனையும் கிடைக்குமா என்று எதிர்ப்பார்க்கும் நிலை வந்துள்ளது. இவ்வாறு மாப்பிள்ளைகளின் 'மார்க்கெட்' உயர்ந்து கொண்டே போவதால் நமது சமூகத்தாரின் தாய்க்குலத்தை இழிவுபடுத்தி நசுக்கி சாறு பிழியும் சூழ்நிலையை உருவாக்குகிறது. இவ்வித போக்கு நமது நாடார் சமுதாயத்திற்கு ஏற்பட்டிருக்கும் ஒரு சாபக்கேடு போன்றதாகும்.

பண்டை நாட்களில் மணமகனே மணமகளுக்கு வேண்டிய பொன்பொருள் கொடுத்து திருமணம் செய்யும் வழக்கம் இருந்தது. இது இக்காலத்திலும் இருக்கிறது. இதனையே இன்று 'பரிசம் போடுதல்' என்று கூறுகின்றனர். அக்காலத்தில் விரும்பிய ஒரு பெண்ணை மணமுடிக்க வேண்டுமென்றால் அப்பெண் கேட்கும் பொருட்களையெல்லாம் கொடுக்க வேண்டும் அவள் செய்யச் சொல்லும் சாகசங்களையெல்லாம் செய்ய வேண்டும். அல்லிராணி அர்ஜுனனை பவளத்தீவிற்கு அனுப்பி பவளம் கொணரக் கூறியது இதனை அடிப்படையாகக் கொண்டதே. வில்லை ஒடித்த ராமனுக்கே சீதை மணவாட்டியானதும் சிந்திக்கத் தக்கது. பண்டைய தமிழ் மகளிர் எருதுகள் வளர்த்து, அதனை அடக்கிய வீரனுக்கே மாலை சூடுவேன் என்று வைராக்கிய சிந்தையுடன் இருந்துள்ளனர். இது காரணமாக தமிழகத்தில் 'ஏறுதழுவல்' என்னும் வீர விளையாட்டும் உருவாயிற்று.

இவ்வாறு புரிகின்ற சாகசச் செயல்களெல்லாம் நாளாவட்டத்தில் மறைந்தன. பின்னர் பெண்கள் கேட்கும் பொன்னும் பொருளும் மட்டும் கொடுக்கப்பட்டு வந்தது. நாளாவட்டத்தில் மங்கையர் எண்ணிக்கை சமூகத்தில் அதிகரித்து வந்ததால் பொருள் கொடுத்து மணக்க முன்வருவோர் அருகினர். பெயரளவிற்கு மட்டும் அவைகளைக் கொடுத்தால் போதுமென்ற காலகட்டம் வந்துவிட்டது.

அன்றியும், பண்டைக்கால மன்னர், பிரபுக்கள் போன்றோர் தங்கள் குமாரிகளை மணமுடித்து கொடுக்கும்போது பல்லக்கு, பரிவாரம், பணியாட்கள், நல்ல செழிப்பான நாடுகள் யாவும் சீதனமாகக் கொடுத்தனர். இவ்வாறு கொடுக்கின்ற சீதனப் பொருட்களைப் பொறுத்து அவர்கள் பெருமை பேசப்பட்டது. இதனால் ஒருவரை மிஞ்சி இன்னொருவர் சீதனம் கொடுப்பதில் சிந்தையை செலுத்தினர். இது நாளாவட்டத்தில் சாதாரண மக்களையும் பற்றிக்கொண்டது. இன்றுவரை அந்த தொற்றுநோய் நீங்கியபாடில்லை.

அதனால்தான் பழைய பாரம்பரிய வழக்கத்தை கடைப்பிடிக்கும் வகையில் இக்காலத்தில் 11, 16, 21, 51, 101 என்று ரூபாய் கணக்கில் பெண்ணிற்கு கொடுக்கின்றனர். இதனையே பரிசம் என்கின்றனர். பெண்ணிற்கு பரிசாக கொடுக்கின்ற காரணத்தால் பரிசம் என்றாயிற்று. 'பரிசம்' போட்ட பின்னர் அப்பெண் உறுதி செய்யப்பட்டு விட்டாள் என்று பொருள்.

காலணா சூடம் வாங்கி கடவுள்முன் கொளுத்திவிட்டு கப்பல் வாங்கித்தர வேண்டுமென்று பிரார்த்திப்பதுபோல 11 ரூபாய் பரிசம் போட்டுவிட்டு 'பங்களா' கேட்கின்ற படுபாவிகள் வாழும் காலம் இது. இப்படி கேட்கின்ற ஈனச்செயலுக்கு 'வரன் தட்சணை' என்று நாசூக்கான பெயரும் வைத்துள்ளனர். இந்த நஞ்சினும் கொடியோர் நாயினும் கடையோர்.

தான் பெற்ற மகளின் நல்வாழ்வின் மீது அக்கறை இல்லாத பெற்றோர் எவரேனும் உண்டா? மகளின் மகிழ்ச்சிதானே அவர்களுக்கு மனநிறைவு! இதனால் தானே 20 ஆண்டுகள் வளர்த்து ஆளாக்கி விட்டு, படித்த அந்தஸ்து உள்ள மாப்பிள்ளையை தேடுகின்றனர். ஆனால்! படித்த மாப்பிள்ளை என்றும் இல்லை, பள்ளியிலே படிக்கும் மாப்பிள்ளையைக்கூட விலைகொடுத்தே வாங்கவேண்டிய நிலை இன்று! ஐயோ! பெண்ணினமே! அம்பிகையின் அருள் வடிவாய் திகழும் உங்களுக்கா இந்த அவல நிலை? பெண்ணினம் இல்லையெனில் இந்த பேருலகம் ஏது?

இம்மாதிரி சூழ்நிலை உருவாவதால் நாடார் குலப் பெண்களுக்கு 30 வயதுக்கு மேலும் திருமணம் ஆகாமல் மனம் நொந்து மறுகிக் கொண்டிருப்பதை நாம் காண முடிகிறது. சீரிய நமது தாய்க்குலத்தை சீரழிக்கும் சிறுமைக்கு நாம் ஆளாகிறோம்.

திருமணம் என்பது பெரும்பாலும் ஆணுக்கும், பெண்ணுக்கும் 20 வயதிலிருந்து 30 வயதிற்குள் இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டு தமது எதிர்கால சந்ததியாரை குலம் விளங்க-குடும்பம் விளங்க பெற்று அந்த சந்ததியாரை வளர்த்து ஆளாக்கி விடுகின்றதை தமது இளம் பிராயத்திலேயே நடத்தி விட வேண்டுமென்பது இல்லற வாழ்வின் நியதி.

"அக்காலத்தில், ஆசைக்கொரு பெண், ஆஸ்திக்கொரு ஆண்" என்ற பழமொழி இருந்ததை அறிவோம். 'இக்காலத்தில் ஒன்று பெற்றால் ஒளிமயம், இரண்டு பெற்றால் அல்லல் மயம்' 'நாமிருவர் நமக்கிருவர்' 'அடிக்கடி பிள்ளைப்பேறு அன்னையின் நலத்துக்குக்கேடு' என்ற இவைகளுடன்,

"பிள்ளைப் பேற்றை தள்ளிப்போடு
பெற்றப் பின்னர் நிறுத்திப் போடு"
"பேறுகள் பதினாறும் பெற்றிட
பிள்ளைகள் இரண்டு போதும்"
"ஆணொன்று பெண்ணொன்று
அது போதும் நமக்கின்று"
"இரண்டற கலப்பது இல்லறம்
இரண்டுடன் நிற்பது நல்லறம்"

என்றெல்லாம் அரசாங்கம் வற்புறுத்தி வரும் இக்காலத்தில், பெண்களுக்கு 30 வயதிற்கு மேல் வம்ச விருத்தி ஏற்படும் சக்தி குறைவென்றும், அப்படி ஏற்பட்டாலும் அதனைப் பெற்ற தாய்க்கும், பிள்ளைக்கும் கூட கஷ்டப்பிரசவமோ, நல்ல வளர்ச்சியோ அமைவது கஷ்டமென்றும் வைத்திய நிபுணர்கள் ஒரு புறம் குறை கூறுகிறார்கள்.

வயது ஏறிய கன்னியையர் பெற்றோர் படுகின்ற துயர்களைக் கண்டு மனம் பொறாமல், பிறந்தகம் விட்டு அகன்றாலே போதுமென்று வெறுப்புடன் வீட்டைவிட்டு வெளியேறி, வேலைகள் தேடியலைந்து, இறுதியில் வீணர்கள் கையில் அகப்பட்டு விபச்சார விடுதியில் தஞ்சம் புக நேரிடுகிறது.

"அழகால் முளைக்கும் முதற்காதல்
அதுதான் தோன்றும் நுரைபோலப்
பழகப் பழக அக்காதல்
பாலும் புளிக்கும் கதையாகும்
அழகோ டுண்மை ஆற்றலுடன்
அரிய பண்பால் எழுங்காதல்
பழக்க காலம் பலசெலினும்
பழுதில் காதல் அதுவேயாம்"

என்பது ஓர் கவிஞரின் கூற்று. இதன்படி திருமணம் ஆகவில்லையே என்று தினமும் ஏங்கித்திரிகின்ற வயதேறிய கன்னிகையர் போலி வேடதாரிகளாகிய வாலிபரின் காதல் வலையில் வீழ்கின்றனர். பெற்றோர்கள் இதனைக் கண்டோ, கேட்டோ பிரலாபித்தாலும், வருடக் கணக்கில் வரன்தேடி அலுத்துப் போன காரணத்தால், வந்த வரனை விடலாகாது எனக்கருதி மணம்பேசி முறைப்படி மணம் செய்து வைப்பதுண்டு. ஆனால் 'ஆசை அறுபது நாள், மோகம் முப்பது நாள்' என்பதற்கிணங்க காதல் புளித்ததும் - கஷ்டங்கள் மோதியதும் எதிர்நிற்க இயலாது வருந்துகின்றனர். - தொடரும்

# தேரியாயணம்

**S.D.சுந்தரேசன் I.A.S அரசு செயலர், அருணாச்சலப்பிரதேசம்.**





தேரியாயணம் எனும் நூலை வாசித்து நான் எழுதியிருக்கும் நூல் அறிமுக உரை வருமாறு:

"தேரியாயணம்" பெயரை பார்த்ததும், எங்கள் ஊர் உவரியில் சிறு வயதில் ஊருக்கு செல்லும் போதெல்லாம் அம்மன் கோவில் தேரியிலிருந்து சுரண்டை கல் வரை மணலில் புரளுவது போன்ற நோக்கி வீட்டுக்கு ஓடி சென்ற சிறு வயது நிகழ்வு தான் நினைவுக்கு வந்தது. உடன் புத்தகத்தை வலை தளத்தில் வாங்கி வாசித்து முடித்தேன்... கன்னைகுமார் விஸ்வரூபன் எனும் புனைபெயருடன் பல சிறு கதைகள் எழுதியுள்ள திரு.ஜி.ஆறுமுகப்பெருமாள் அவர்கள் எழுதிய முதல் நாவல் இந்த தேரியாயணம்.

மக்களின் வாழ்வியல் பற்றிய சரியான புரிதல் உள்ள ஒருவரே ஒரு சமூக வாழ்க்கை பற்றிய நாவல் இலக்கியம் படைக்க முடியும்... இந்த நாவல் தென் தமிழ்நாட்டு திருநெல்வேலி தூத்துக்குடி மாவட்டங்களில் காணப்படும் செம்மண் தேரிப்பகுதியில் வாழ்க்கை நடத்தும் மக்களின் அன்றாட நிலைமை அறிந்து எழுதப்பட்டுள்ளது... நாவல் ஆசிரியர் அப்பகுதியில் பிறந்து வளர்ந்த வாழும் நிலையில் இருப்பதால், அவரது எழுத்து, தேரிப்பகுதி மக்களின் சமூக வாழ்வியல் பற்றிய சரியான பதிவாக அமைந்துள்ளது.

நாவல் ஐம்பது வருடத்துக்கு முன் தொடங்கி, அதற்கு முப்பது ஆண்டுகளுக்கு முன் பல்வேறு ஊர்களிலிருந்து பஞ்சம் பிழைக்க வந்த பலரும் சேர்ந்து எவ்வாறு ஊர் உருவானது என்ற விபரம் மற்றும் தொடர்புடைய வாழ்க்கையை விவரித்து மீண்டும் நாவல் தொடங்கிய காலத்துக்கு வந்து தொடர்ந்து நிறைவு பெறுகிறது.

வறியவர்களின் வாழ்வு முழுவதும் எவ்வாறு உயிர் வாழ வழிதேடி அலையும் நிலையில் இருக்கிறது. அந்த மக்களுள் ஒருவனாய் பிறந்து அவர்களை எய்த்து உல்லியாக வாழும் ஒருவனின் வாழ்வு அத்தகைய மக்களிடமும் பிடுங்கி மேற் செலவுக்கு பயன்படுத்தும் அரசு ஊழியர்களின் செயல்பாடு, நலம் என்பதே சுயநலம் தான் எனும் உணர்வுடன் வாழ்பவர்களின் மனநிலை, வைராக்கியமும் நல்மனமும் கொண்டு பிள்ளைகளுக்காக வாழும் தாயின் பணப்பாங்கு, அனைவரிடமும் கனிவும், நேர்மையான வாழ்வும் வாழ்ந்து நம் மக்களின் தேவைகள் நிறைவு செய்த முதல் தலைமுறையை சேர்ந்த கடலையாண்டி கிழவர் மற்றும் ஆசாபாசம் கொண்ட உதவி செய்யும் பெண்ணாக விளங்கி, பின்னர் தன்னலம் கருதாது லட்சிய எண்ணத்துடன் பொது வாழ் வில் தன்னை ஈடுபடுத்தும் அடுத்த தலைமுறையை சேர்ந்த மாரி என்ற பல்வேறு வகைக மாந்தர்களின் வாழ்க்கைமுறையும் மனநிலையும் படம்பிடித்து காட்டப்பட்டுள்ளது.

இலக்கியம் மக்களை பண்படுத்தவே என்றும் இலக்கியம் மக்களை மகிழ்விக்கவே என்றும் இலக்கிய உருவாக்க காரணிகள் பற்றி இருவேறு கருத்துக்கள் குறிப்பிடப்படுவதுண்டு. இவற்றுள் நம் தேரியாயணம் அறிதான வாழ்வியல் பதிவாக மட்டுமல்லாது, விழும்பு நிலை மக்களின் வாழ்வியல் விழுமியங்களை வெளிக்கொணர்ந்து, வாசிப்போர் எண்ணவோட்டத்தை செம்மை செய்து மேம்படுத்துவதாக அமைந்துள்ளது.

செம்மண் தேரி தொடர்புடைய இலக்கியங்கள் குறைவு... தேரியாயணம் மக்கள் வாழ்வியல் பற்றிய பதிவாக அமைந்துள்ளது... புழுமை நிறைந்த நம் செம்மண் பரப்பில் பல வரலாற்று தரவுகள்.. அந்த கால கதையாக, கணியான் பாட்டாக, வில்லுப்பாட்டாக, மக்கள் நம்பிக்கையாக என்று பல உருவில் உலா வருகின்றன. அவற்றை ஆய்வுக்கு பின் நாவல் வடிவ இலக்கியம் படைக்க எழுத்து திறந் மிக்க நாவல் ஆசிரியர் திரு.ஜி.ஆறுமுகப்பெருமாள் போன்ற எழுத்து வல்லுநர்கள் முயற்சி செய்து நாவலாக வெளிக்கொணர்வது, தமிழ்நில எதிர்கால சந்ததிக்கு வழங்கும் மாபெரும் இலக்கிய கொடையாக திகழும் என்பது திண்ணம். தேரியாயணம் எனும் இந்த சமூக நாவல் 296 பக்கங்களுடன் ரூ.270/- விலையில் பாவை பப்ளிகேஷன்ஸ் பதிப்பாக வெளியாகியுள்ளது. வலைத்தளவிற்பனையாளர்களிடம் வாங்கும் வாய்ப்பு உள்ளது.

புத்தகம் மற்றும் அதனுடன் நான் இருக்கும் புகைப்படங்கள் இணைத்திருக்கிறேன். -தொடரும்.


# 7ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

**தோற்றம்:**
**14.4.1998**

**மறைவு:**
**25.8.2017**





**U.ஜீவிதா**
**B.Sc.,**

**ஜீவிதா வேஸ்ட் பேப்பர் மார்ட்.**

"நேர்மையுள்ளோர் மக்கள் மனதில் என்றும் வாழ்வர்"(தி.பா.112:6)

# மூன்றாம் ஆண்டு நினைவு அஞ்சலி!

# ஜோசப் ஸ்டாலின் B.E

## வடக்கன்குளம்

எம்மோடு
9.6.1969



இறையோடு
25.8.2021





மூன்றாம் ஆண்டு நினைவுநாள் உனக்கு!
இதயத்தைக் கணை துளைத்த நாள் எமக்கு!
அன்பின் ஊற்றாய், பண்பின் சிகரமாய்
குடும்பத்தின் ஒளியாய், உறவின் பாலமாய் வாழ்ந்த நீ
எதிர்பாராது வந்த இறையழைப்பால் பிரிந்தாய்!
எண்ணிலா ஆண்டுகள் எம்மோடு வாழ்வாய் என
எண்ணிய உன் அன்பு மனைவி, மக்கள், அன்னை
உன் முகம் மீண்டும் காணத் துடிக்கின்றோம்.!
நின் ஆன்மா அமைதியுற வேண்டுகின்றோம்!

| | |
|---|---|
| ஆறாத்துயரில் அம்மா - லீலா ஸ்டீபன்<br>மீளாத் துயரில் மனைவி -மேரி ஸ்டாலின்<br>அன்பு மகள் - ஷெர்லி ஸ்டாலின்<br>பாச மகன் -ஸ்டீவன் ஸ்டாலின் | மற்றும் உறவினர்கள்<br>மயூரேஷ்பார்க், பாண்டுப்,<br>மும்பை-78 |

# வா...வியாபாரி

## 16.நம்பிக்கை



அமுதா B.பாலகிருஷ்ணன்

ஒருநாள், ஒரு கம்பெனி முதலாளி, அந்தக் கடைக்கு ஆர்டர் எடுக்க வந்தார்- பொதுவாக அந்தக் கம்பெனியின் பிரதிநிதிதான் வருவது வழக்கம். இவர் எப்போதாவது தான் வருவார், நலம் விசாரிப்பார், ஆர்டர் எடுப்பார்.

அன்று அவர் வந்திருந்தார், அந்தக் குமாஸ்தாவைப் பார்த்தார், பேசினார், ஆர்டர் கேட்டார்.

'நீங்க டீலருடன்ட ரொம்ப சம்பிரதாயமாக இருக்கிங்களே.. அதான் உங்களுக்கு ஆர்டர் தரமனமில்லை'- என்றான், அவன்.

'இல்லியே..நாங்களும் மத்த கம்பெனி மாதிரி தானே தர்றோம்'

'இல்ல... மத்த கம்பெனியெல்லாம் நல்லா கவனிக்கிறாங்க, உங்க கம்பெனிதான் ரொம்ப கறார்.

அவர், அவனையே பார்த்தார், யோசித்தார், பிறகு 'தம்பி... உங்கிட்ட கொஞ்சம் தனியா பேசணுமே-'என்றார்.

'சரின்னு அவனும் கடைக்கு வெளியே வந்தான்.

'என்ன..? என்றான்.

'தம்பி.. நீ அந்தக் கம்பெனிக்குக் கொடுக்கிற ஆர்டரை எல்லாம் எங்களுக்கு கொடு'

'கொடுத்தால்'

நான் உனக்குத் தனியா இரண்டு பர்சன்ட் தர்றேன்

வெறும் ரெண்டு பர்சன்ட்தானா?..

சரி மூணு பர்சன்ட் தாரேன்

'ம்ஹூம்...

'சரி... எவ்வளவு வேணும் சொல்லு'

'அஞ்சு பர்சன்ட்...?'

'அஞ்சு பர்சன்டா...?' -அவர் யோசித்தார், பிறகு, "சரி... தர்றேன்... ஆனா எல்லா ஆர்டரும் எனக்குத்தான் தரணும்"

'சரி'

'இத வேற யாருகிட்டயும் சொல்லாத'

'சரி' பேரம் முடிந்தது. ஆர்டர் போட்டான்.

அந்தக் கம்பெனி முதலாளிக்கு ஏகப்பட்ட சந்தோஷம்- அவ்வளவு பெரிய கடையில், அவ்வளவு பெரிய ஆர்டர் கிடைத்ததில் அவருக்கு ஏகப்பட்ட மகிழ்ச்சி.

அவர் சென்றபிறகு இவன், "அண்ணாச்சி, பணம் கொடுக்கும்போது 5பர்சன்ட் கழித்துக்கொடுங்க"-என்றான்.

'எப்படி?' என்றார் முதலாளி.

'அப்புறம் சொல்றேன்'-என்றான் இவன்.

சரக்கு வந்தது.

சில நாள் கழித்து பணம் வசூலிக்க அந்த கம்பெனி குமாஸ்தா வந்தார்.

முதலாளி பணம் கொடுக்கப் போனார்.

இவன் தடுத்தான், 'அண்ணாச்சி நாளைக்கு பேங்குல நெறைய பணம் கட்ட வேண்டியதிருக்கு. அதனாலே இப்ப பணம் கொடுக்க வேண்டாம், அவங்க முதலாளி சனிக் கிழமை வருவார். அப்போ அவரிடம் கொடுக்கலாம்" என்றான்.

முதலாளிக்குச் சந்தோஷம் "அடடா... இவன்தான் எவ்வளவு பொறுப்போட இருக்கான்"னு நினைத்தார்.

சனிக்கிழமை வந்தது.

அந்தக்கம்பெனி முதலாளி பில்லுக்குப் பணம் வாங்க வந்தார்.

பில்லை இவனிடம் கொடுத்தார்.

'முதலாளிகிட்ட கொடுங்க... பணம் ரச் சொல்றேன்'-னு சொன்னான்.

அவர் கொடுத்தார். பில்லை வாங்கிய முதலாளி, எடே... நீ பில்லை சரிபார்த்துட்டியா... ரேட் எல்லாம் சரியா இருக்கா....

'ஆமா அண்ணாச்சி சரிபார்த்துட்டேன், சரியாயிருக்கு..

'அப்ப... பணம் கொடுத்திடட்டுமா'

சரி அண்ணாச்சி'

முதலாளி பில்லுக்கான பணம் முழுவதையும் எடுத்து இவனிடம் கொடுக்க நீட்டினார்.

'அண்ணாச்சி அந்த பில் அமௌண்ட்டில் அஞ்சு பர்சன்ட் கழிச்சிட்டு கொடுங்க. சார் நம்ம கடைக்கு மட்டும் அஞ்சு பர்சன்ட் தாரேன்னு சொல்லியிருக்கார்" என்றான்.

கம்பெனி முதலாளிக்கு அதிர்ச்சி... 'ஐயோ... இவன் நம்மளக் காட்டிக் கொடுத்திடுவானோன்'னு பயம்.

"ஏய்... என்னப்பா இப்படிப் பண்ணிட்ட" - என்பதைப் போல் பார்த்தார்.

இவன் சிரித்துக் கொண்டே, அந்த அஞ்சு பர்சன்ட் பணத்தை முதலாளியிடம் திருப்பிக் கொடுத்துவிட்டு, மீதி பணத்தை அவரிடம் கொடுத்தான்.

பிறகு அவன், அவரிடம் பேசிக் கொண்டே கடைக்கு வெளியே வந்தான்.

"ஏம்பா... இப்படிப் பண்ணுன...? உனக்குத்தான அஞ்சு பர்சன்ட் தாரேன்னு சொன்னேன். நீ அதைக் கழிச்சு உங்க முதலாளிகிட்டேயே கொடுத்திட்டியே...?

"இங்க பாருங்க...எங்க முதலாளி எம்மேல முழு நம்பிக்கை வைச்சிருக்காங்க. அவங்க பெத்த பிள்ளையை விட என்ன மேலாக நம்புறாங்க. அந்த நம்பிக்கைக்குத் துரோகம் பண்ணமாட்டேன். என்னைக்குமே யாருக்குமே நம்பிக்கைத் துரோகம் பண்ணமாட்டேன், அது மட்டுமல்ல... இப்ப நான் சாப்பிடுறது அவங்க போடுற சோறு. உண்ட வீட்டுக்கு ரெண்டகம் பண்றது உலக மகா பாவம். நம்பிக்கைத் துரோகம் பண்றது அதைவிட பாவம், அந்தப் பாவத்தை நான் என்னைக்குமே செய்யமாட்டேன்"

"இத எல்லாரும் எல்லா இடத்துலயும் செய்றதுதான்"

"எல்லாரும் செய்தா... நானும் அந்த மாதிரி செய்யணுமா...?இந்தக் கடையை நம்மள நம்பி ஒப்படைச்சிருக்காங்க... இருபத்தி நாலுமணி நேரமும் கடையோட வளர்ச்சியும் முதலாளிக்கு விசுவாசமாக செயல்படுறதுதான் முக்கியம். கமிஷன் வாங்குறது பாவம், கைசுட்டு பிசினஸ் செய்யிறது கூடதப்பு. எப்ப சம்பளத்துக்குமேல சம்பாதிக்கணும்கிற நினைப்பு வந்திடிச்சோ, அந்த நிமிஷமே... நல்ல பிள்ளையா வெளியே வந்துடணும். பனைமரத்தடியில இருந்துகிட்டு பாலை குடிக்கக் கூடாது. மத்தவங்கள பத்தி எனக்குக் கவலையில்ல... கமிஷன் வாங்குறது, தேனை எடுத்தவன் கைய நக்குவான்னு வேதாந்தம் பேசுறது. எல்லாமே ஈனத்தனமான செயல்.."

அவன் சொல்லிக் கொண்டே போனான்.

அவர் வாயடைத்து நின்றார்.

இந்தா பாருங்க... இனி எல்லா ஆர்டருமே உங்களுக்குத் தாரேன். நீங்க பில்லுலேயே அந்த அஞ்சு பர்சன்டை கழிச்சுப் போட்டு அனுப்புங்க இந்தக் கடையில இருக்கிறவரைக்கும், கடைசி நிமிஷம் வரைக்கும் எங்க முதலாளி நலம்தான் என் நலம், எங்க முதலாளியோட சந்தோஷம் தான் என் சந்தோஷம், ஒரு பத்துப் பைசாவுக்குக் கூட நான் தப்பு பண்ணமாட்டேன். தப்பு பண்ண என் மனசு இடங்கொடுக்காது.

"தம்பி... நானும் எத்தனையோ கடைகளைப் பாத்திருக்கேன், குமாஸ்தாக்களைப் பார்த்திருக்கேன். ஆனா உம்மாதிரி நான் பார்க்கவேயில்லப்பா... நீ என்னைக்கும் நல்லா இருப்பேன்னு வாழ்த்திட்டுப் போனாரு. அப்படி வாழ்த்தும் போதே அவர் கண்களில் கண்ணீர் மல்கியது அவர்கள் உறவும் நெருக்கமானது. அதுமட்டுமல்ல, சில வருடங்கள் கழித்து... அவன் தனியாகக் கடை வைக்கிற சூழ்நிலை கையில் காசில்லை. எப்படியோ தட்டுத் தடுமாறி ஆரம்பித்துவிட்டான்.

அந்தக்கம்பெனி முதலாளிடம் போனான், சரக்கு கேட்டான், கையில் பணமில்லை என்பதையும் சொன்னான், தயங்கி நின்றான்.

"ஏய்... உனக்கு எவ்வளவு வேணுமோ அவ்வளவு சரக்கையும் அனுப்புறேன் வித்த பிறகு காசுதா... இல்ல... நீ நல்லா வந்த பிறகு பணம் கொடு, இல்லன்னா பணமே வேண்டாம் வேணுங்கிறது எடுத்துட்டுப்போ, தைரியமா செய் யின்னு உரிமையோடு உரத்த குரலில் சொன்னார். செய்தார். இன்று... அவன் கடின உழைப்பாலும் கடவுளின் அருளாலும் நல்ல நிலைமையில் இருக்கிறான், அவர்கள் இருவரும் நெருங்கிய நண்பர்களாக இருக்கின்றனர். நெருக்கம் தேவையா.??

-தொடரும்.

Owned at Published by K.M.JULIAN from 21, Krishnappa Naickan Street, Mettupalayam, Chennai-33 and Printed by K.M.JULIAN at "NEW MERIT PRINTERS" No: 14/51, Reddykuppam Road, Saidapet, Chennai-15. Editor K.M.JULIAN.


WE'RE BIG ON FUN
Reach levels of fun and fantasy never before experienced. Regale in a holiday experience filled with high energy entertainment at one of India's largest amusement park.
THRILLING INTERNATIONAL RIDES
WATER RIDES, WAVE POOL & WATER FALLS
MARYWORLD FOR KIDS
AMPHITHEATRE AND ENTERTAINMENTS
AMPLE CAR PARKING, RESTAURANTS
AND POWER BACK-UP
MGM
Dizzee World
East Coast Road, Muttukadu
M.G. Muthu Group
FOR DETAILS CALL
+91-44-27472129 / 27472131
9790955554 / 9500063716 / 17
www.mgmdizzeeworld.com

Regd.No.TN/CC(S) DN/112/2024-2026
Registered Newspaper RNI 55354/1992
Posted at Egmore RMS-1, Partrika Channal Posted on 7.8.2024
PUBLISHED ON FIRST OF EVERY MONTH WPP Licence No.TN/PMG(CCR)/WPP 315/24-26

If undelivered please return to INDIAN NADARMURASU
21 Krishnappa Naiyakan Street,
Mettupalayam, Chennai-600 033.

# ANNAI VEILANKANNI'S
## GROUP OF EDUCATIONAL INSTITUTIONS

Saidapet | Nedungundram | Potheri



# ADMISSION NOTICE 2024 - 2025

*Education is the most Powerful Weapon which you can use to change the world*

- Nelson Mandela



**Courses Offered**

## COLLEGE FOR WOMEN (Arts & Science)

Affiliated to University of Madras | Accredited by NAAC

**UG Courses**

Shift I

- **B.Com.**
  - General • A & F
  - Computer Applications
  - Info. Systems Management
  - Corporate Secretaryship
- **B.B.A.** • **B.C.A.**
- **B.Sc.** • Bio-Chemistry • Maths • CS
- **B.A.** • English Literature

Shift II

- **B.Com.**
  - General
- **B.C.A.**

**PG Courses**

- **M.Com.** • **MHRM** • **M.Sc.** • Comp. Science • Bio-Chemistry

## COLLEGE OF ENGINEERING

Approved by AICTE, New Delhi & Affiliated to Anna University, Chennai

**BE Course**

- **CIVIL** • **MECH** • **ECE** • **CSE**

Anna University Counseling Code: **1133**

**B.Tech. Course**

**Artificial Intelligence & Data Science Engineering**

SC / ST / SCA / BCC மாணவர்களுக்கு கல்வி & பேருந்து கட்டணம் கிடையாது

DIRECT SECOND YEAR LATERAL ENTRY SEATS AVAILABLE

## Other Professional Courses

- **B.Ed.** • **B.Pharmacy** • **M.Pharmacy**
- **B.Sc. Nursing** • **Dip. in Nursing (GNM)**

## Key Features

- A part-time job while you study • Free Scholarships and Fee Concessions
- Coaching from Experienced Professors • Various value added & certificate courses
- Participation in Several Competitions, Conferences, Industrial visits etc
- Become a Member of Vibrant Clubs or Associations • Regular Guest Expert Lectures
- Undergo Free Skill Development, Competitive Exams and Placement & Leadership Training
- Industry Exposure with Real-time projects • Transport connecting all areas of the city
- Bank Loan Arranged • Hostel facility with 24/7 in campus medical facility

#81, VGP SALAI, WEST SAIDAPET, CHENNAI-600 015 | TEL.: 044-43523712, 24710820
#33, GANDHI ROAD, NEAR PERUNGALATHUR RAILWAY STATION, NEDUNGUNDRAM, CHENNAI-127
TEL.: 044-22794192, 22794155, 22794064
Helpline : 9282144444 | Email : mail4avc@gmail.com | www.annaiveilankannis.com